සුනාමිය නිසා මානසික කම්පනයට පත් ළමුන් දසදහස් ගණනකගේ මානසිකත්වය නැවත ගොඩනැගීමට යුඑස්ඒඩී සංවිධානය සත්කාරයක් දියත් කළේය. එනම් ගාලු නගර සභාවත් සමග එකතුව ආරම්භ කළ මනහර ළමා ක්‍රීඩා පිටියයි.

මෙය රට පුරා මෙවැනි පරිශ්‍ර 85 ක ව්‍යාපෘතියේ ආදර්ශාත්මක ප්‍රථම ක්‍රීඩා පිටිය වේ.

"ක්‍රීඩාව බිඳුණු හදවත් ගොඩනැගීමට යොදාගත හැකි හොඳම චිකිත්සක ක්‍රියාවයි" මනෝ වෛද්‍යවරුන් පවසන බව යුඑස්ඒඩී අධ්‍යක්ෂිකා කැරල් බෙකර් මහත්මිය පවසා සිටියාය.

"සුනාමි මතකය ළමුන්ගේ සිත් වලින් නොමැකුනත් එයින් නැවතුණු ඔවුන්ගේ සිනාව සහ කෙලිලොල් බව මෙම ක්‍රීඩාංගණය මගින් නැවත උපදවනු ඇතැ" යිද ඇය වැඩිදුරටත් කියා සිටියාය.

"ඉදිරි මාස ගණනාව සහ අවුරුදු කිහිපය තුළ මෙම ක්‍රීඩාංගණය හරහා නැතිවී ගිය සිනහව සහ ප්‍රීතිය යළි අත්විඳිය හැකිවනු ඇතැයි" ඇය බලාපොරොත්තු සහිතව ප්‍රකාශ කළාය.

2005 ගාලු නව ළමා ක්‍රීඩාංගනය විවෘත කිරීමට පෙර

මෙම නව ක්‍රීඩාභූමි තුළින් දහස් ගණන් ළමුන්ගේ මානසික සුවය ප්‍රගාවනු ඇත.

මෙම ඇ. ඩොලර් මිලියන 2 ක ව්‍යාපෘතිය යුඑස්ඒඩී සංවිධානය, ඇමරිකානු යුදෙව් හවුලේ බෙදාහැරීමේ කමිටුව සහ බුෂ්-ක්ලින්ටන් සහන සේවා අරමුදල යන සංවිධාන වල එකමුතු ක්‍රියාමාර්ගයකි.

මෙය රාජ්‍ය හා පෞද්ගලික අංශය අත්වැල් බැඳ පොදුජන හිතකාමීව සිදුකරන ව්‍යාපෘතියකට කදිම නිදසුනකි යැයි ශ්‍රී ලංකාවේ ඇමරිකානු තානාපති ජෙෆ්රි ලන්ස්ටඩ් මහතා කියා සිටී.

මෙම ව්‍යාපෘතිය ක්‍රියාත්මක කිරීමට සර්වෝදය සංවිධානය හා පළාත් හා ප්‍රාදේශීය සභා කිට්ටුවෙන් කටයුතු කරති. ප්‍රජා සහභාගීත්වය සහ අයිතිය වැදගත් ස්ථානයක් ගන්නා බැවින් ජනතාවගේ සහභාගිත්වයද ඉතා වැදගත්වේ. සර්වෝදය සංවිධානය වඩාත් උත්සුකු වන්නේ මෙම සම්බන්ධතාවය ගොඩ නැගීමටය. එමෙන්ම රාජ්‍ය අංශයේ හවුල්කරුවන් සමග සෙල්ලම් පිට්ටනි ඉදිකිරීම සඳහා සුදුසු ස්ථාන සෙවීමත්, ඒවායේ නඩත්තු කටයුතු සංවිධානය කිරීමත් සර්වෝදය මගින් සිදුවේ.

මෙම ව්‍යාපෘතිය මෑතකදී සිදුකළ ඉතාම ඵලදායී හා සංවේදී ජනහිතකාමී වැයමක් ලෙස සැලකිය හැක.

ශ්‍රී ලංකාවේ සමස්ත අතීතය, වර්තමානය මෙන්ම අනාගත ගමනේද යුඑස්ඒඩී සංවිධානය නිරන්තර කොටස්කරුවකු වනු ඇත.

USAID FROM THE AMERICAN PEOPLE

50 வருடங்களாக இலங்கையுடன் கூட்டிணைப்பு

USAID | SRI LANKA
FROM THE AMERICAN PEOPLE

அபிவிருத்திக்கான கூட்டிணைப்பில் 50 வருடங்கள்

பொருளடக்கம்

முன்னுரை 127

அறிமுகம் 129

1956 ஏப்பிரல் 28 130

உணவு உதவி 131

நெடுஞ்சாலை அபிவிருத்தி 132

புகையிரதப் புனருத்தாபனம் 133

1960 ஆம் ஆண்டுகளின் இறுதியில் இலங்கை 134

திரிபோச : பிள்ளைகளுக்கான போசாக்கு ஊட்டம் 135

மலேரியா ஒழிப்பு 136

பெண்கள் தொழில்வாய்ப்பு 137

கல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம் 138

மஹாவலி நதி 139

கை இயக்க ஜல சூத்திரங்கள் 140

உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாத்தல் 141

விவசாயக் கல்வி அபிவிருத்தி 142

அரிசி ஆராய்ச்சி 143

குடும்ப சுகாதாரமும் வருவாய் உற்பத்தியும் 144

சுகாதாரத் துறைகள் பற்றிய தேசிய நிறுவனம் 145

குறைந்த வருமான வீடமைப்பு 146

வலுச் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்தல் 147

நீரும் சுகாதாரமும் 148

அக்ரோமார்ட்: கிராமியப் பெண் தொழில்முயற்சியாளர்கள் 149

நிதி நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை மீட்டல் 150

கொழும்புப் பங்குச் சந்தை 151

மோதலின் போதான உதவி 152

இலங்கையின் கரைகளைப் பாதுகாத்தல் 153

சமரசம்: நீதிமன்றங்களில் நெரிசலைக் குறைத்தல் 154

வானொலியும் மனித உரிமைகளும் 155

விவசாயத்தைப் பன்முகப்படுத்தல் 156

வலு குறைந்தோருக்கான உதவி 157

நிலைத்தகவுள்ள பொருளாதார அபிவிருத்திக்கான விவசாயத் தொழில்முயற்சிகள் 158

தும்பு: "வாழ்வாதார மரத்தின்" அறுவடை 160

இலங்கைக் கறுவாவின் பாரம்பரியத்தைப் பேணல் 161

குளிர் களஞ்சியத் தொடர் 162

அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக மன்றம் 163

யோகட் உற்பத்தியும் தொழில் வாய்ப்பும் 164

சமட்ட சரண: அப்பாவிகளுக்கான உதவி 165

நதித் திருப்புமுனை முகாமைத்துவம் 166

விளையாட்டுப் பொருட்களுக்கான டிப்ஸ் கருத்திட்டம் 167

சுஜான் உணவுகள்: வாயூறும் சைவ உணவுகள் 169

டொன் பொஸ்கோ: இளைஞர்களுக்கான பயிற்சி 170

இலங்கையின் இளம் தொழில் முயற்சியாளர்கள் 171

போட்டாபோட்டியிடும் திறமையை உருவாக்கல் 172

பெண்கள் அபிவிருத்திச் சம்மேளனம் 173

100 நாட்களில் சுத்தமான காற்று 174

இலங்கையில் திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கான புதுமையானதொரு தீர்வு 175

சமாதானத்துக்கான ஆதரவு 176

சமாதான வழி 177

யுத்தத்தினால் பாதிப்படைந்த வடக்கில் ஆலோசனை வழங்கல் 178

கடற்கோள் அனர்த்தத்தின் பின் சிறிய கிராமமொன்றுக்கு வந்த பலரும் அறிந்த அதிதிகள் 179

கடற்கோள் அனர்த்தத்தைத் தொடர்ந்து ஆதரவு 180

விளையாட்டின் மூலம் மனச்சாந்தி பெறல் 182

முன்னுரை

இலங்கையில் யூஎஸ்எய்ட் இன் 50 வருட அபிவிருத்திப் பங்காளர் தொடர்பை பெருமகிழ்ச்சியுடன் நாம் நினைவுகூர்ந்து கொண்டாடுகிறோம். ஐக்கிய அமெரிக்கக் குடியரசு அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் இந்த முனைப்பான அபிவிருத்திக் கூட்டுறவு ஒப்பந்தம் 1956 ஏப்பிரல் 28ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. ஒன்றன் பின் ஒன்றாக பதவிக்கு வந்த இலங்கை அரசாங்கங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் தனியார் துறையுடன் சேர்ந்து யூஎஸ்எய்ட் எய்திய சித்திகளைச் சித்தரிக்கும் வண்ணம் 50 வருடகால உதவி மற்றும் பங்காளர் தொடர்பிலிருந்து 50 கதைகளை நாம் தொகுத்துள்ளோம். இலங்கையரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட யூஎஸ்எய்ட் இன் நடவடிக்கைகளின் இம்மியளவையே அவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

மக்களுக்குச் சிறந்த சேவைகளையும் வருமானத்தையும் பெற்றுக் கொடுக்கக் கூடிய நிறுவனங்கள் மற்றும் திட்டங்களை கட்டியெழுப்பி, ஜனநாயகச் செயற்பாட்டை வலுவடையச் செய்வதற்கான யூஎஸ்எய்ட் இன் உறுதிப்பாட்டை இப்பின்னோக்கு எடுத்துக் காட்டுவதாயுள்ளது. ஆயினும், எல்லாவற்றுக்கும் மேலாக, மக்களுக்குக் கல்வியையும் ஆளுமையையும் வழங்குவதற்கான யூஎஸ்எய்ட் இன் உறுதிப்பாட்டையும் அது சுட்டிக்காட்டுகிறது. இவ்வுதவி பலதரப்பட்டதாக உள்ளதோடு, காலத்தின் அபிவிருத்தித் தேவைகள் மற்றும் இக்குறிப்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக ஐக்கிய அமெரிக்கக் குடியரசு வழங்கக்கூடிய திறன்கள் மீது அது கவனஞ் செலுத்துகிறது. இவ்வெல்லா முயற்சிகளிலும், இலங்கையர் தனி நபர்களாகவும் ஒரு தேசமாகவும் அவர்களது எதிர்கால அபிவிருத்தியினை உருவமைத்துக் கொள்வதற்கான சாதனங்களை வழங்குவதே எமது குறிக்கோளாக இருந்து வந்துள்ளது.

யூஎஸ்எய்ட் தளத்தில் நீடித்திருப்பதும் அபிவிருத்திக்கான அதன் அணுகு முறையுமே எமது வெற்றிகளுக்கான திறவு கோலாகும். வடிவமைப்பு மற்றும் உதவி வழங்குவதற்கு முன்னால், நீடித்த தொடர்புகளைக் கட்டியெழுப்பல், நாட்டின் அபிவிருத்திச் சவால்களுக்கான மூலகாரணத்தை விளங்கிக் கொள்ளல் மற்றும் மக்களின் தேவைகள் பழக்கவழக்கங்கள் அத்துடன் கலாசாரத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்காகத் தற்போதுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் நமது நாடு என்ற உணர்வையும் நிலைத்தகவையும் நாம் போசிக்கிறோம். உலகின் பல பாகங்களிலும் யூஎஸ்எய்ட் செயற்படும் எண்ணிலடங்கா நாடுகளில் நிரூபிக்கப்பட்ட இந்த முறையினூடாக, உதவி பெறும் நிலையில் இருந்து பங்காளர்களாக மாறி, நன்கொடை வழங்கும் நாடுகளின் உதவியின்றி தம் திறமைகள் மற்றும் நிறுவகங்களைப் பிரயோகித்துத் தம் அபிவிருத்தித் தேவைகளை தாமே நிறைவு செய்து கொள்ளும் இறுதி நோக்கை நாடுகள் அடைகின்றன.

இறுதியில், யூஎஸ்எய்ட் குழுவைச் சேர்ந்த பணியாட்டொகுதியினர் மற்றும் பங்காளர்களான ஆண்களும் பெண்களுமாக, அமெரிக்க மற்றும் இலங்கை மக்களே, எமது அபிவிருத்திக் கருத்திட்டங்களின் வெற்றியை உறுதிப்படுத்தியுள்ளனர். எமது இணைந்த செயற்பாட்டின் தரக் குறியீடு மக்கள் மீதான எமது முதலீடாகும். ஐம்பது வருட காலங்களில் நிதியளிப்பு ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்த போதிலும், எமது பங்களிப்பு மாற்றத்தைத் தூண்டி விடுவதற்காகத் தொடர்ந்துள்ளது. அதாவது, இழப்புக்குப் பயப்படாது அபிவிருத்தியை மேற்கொள்வதற்காகவும் நீண்டகால நிலைத்தகவுள்ள அபிவிருத்தியை அடைவதற்காகப் புதுமை படைப்பதில் கவனம் செலுத்துவதற்காகவும் இலங்கையருக்கு உதவி அளிப்பதாகும்.

கலாநிதி கெரொல் பெக்கர்
தூதுக்குழுப் பணிப்பாளர்

நாம் எதிர்காலத்தை நோக்கும் இச்சந்தர்ப்பத்தில், இருபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் யுத்தத்தினால் உயிர்கள், ஜீவனோபாயம் மற்றும் சந்தர்ப்பங்களை இழந்தோர், கடற்கோள் அனர்த்தத்தினால் குடும்பங்கள், சொத்துக்கள் மற்றும் தொழில்வாய்ப்புக்களை இழந்தோர் மற்றும் தொடர்ந்தும் வறுமையால் பீடிக்கப்பட்டுள்ளோர், இலங்கையின் எதிர்வரும் அபிவிருத்திச் செயற்பாட்டைப் பகிர்ந்து கொள்வர் என்ற நம்பிக்கை எமக்குண்டு. தொடர்ந்து இலங்கையின் பங்காளராகச் செயற்பட்டு அதன் சகல மக்களும் சமாதானம் மற்றும் சுபிட்சத்தின் பிரதிபலன்களை அனுபவிப்பதை உறுதிப்படுத்துவதில் யூஎஸ்எய்ட் முனைப்பாகவுள்ளது.

நன்றி நவிலல்: 50 கதைத் தொகுப்புக்களுக்கான இலக்கியங்களை எமது தலைமையகத்திலும் இலங்கையிலும் ஆராய்ச்சி செய்து அத்துடன் எமது அபிவிருத்தி வரலாற்றைத் தேடிப்பிடிப்பதில் எமக்கு உதவிய அபிவிருத்தித் தகவல் மற்றும் கல்விக்கான எய்ட் / வொசிங்டன் மத்தியைச் சேர்ந்த டயனா ரே இன் கடின உழைப்புக்கு எமது நன்றியை யூஎஸ்எய்ட் / ஸ்ரீ லங்கா தெரிவித்துக் கொள்கிறது. யூஎஸ்எய்ட் - ஸ்ரீ லங்கா : 50 வருடத் தொடர்பிலிருந்து ஐம்பது கதைத் தொகுப்புக்கள்

PEACE
IS IN OUR
HANDS

அறிமுகம்

தென்னிந்தியாவின் முனையில் சிந்தக் காத்திருக்கும் கண்ணீர்த் துளியொன்று போல் காட்சி தரும் இலங்கை, அதன் தென்னை மரங்கள் அடர்ந்த கரைகள், பலதரப்பட்ட புவியமைப்புக்கள் மற்றும் செறிவுள்ள கலாசாரப் பாரம்பரியங்கள் மூலம் பல நூற்றாண்டுகளாக பிறரைக் கவர்ந்து தன் வசம் ஈர்த்து வந்துள்ளது.

இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசுக்கும் இடையிலான புதிய பங்காளர் தொடர்பு 1956 ஆம் ஆண்டு ஏப்பிரல் 28ஆம் திகதி, இரு நாடுகளுக்குமிடையில் பொருளாதார ஒத்துழைப்புக்கான முதலாவது ஒப்பந்தத்துடன் ஆரம்பித்தது. இவ்வொப்பந்தம் இலங்கையின் அபிவிருத்திக்கும் அதன் மக்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குமான நிலையானதொரு பங்காளர் உறவுக்கு முன்னோடியாக அமைந்தது. கடந்த 50 வருடங்களாக, ஐக்கிய அமெரிக்கக் குடியரசும் இலங்கையும் யுத்தம், சமாதானம், பொருளாதார வளர்ச்சி, அரசியல் நிலையற்ற தன்மை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ஆகிய இன்னோரன்ன சந்தர்ப்பங்களில் இணைந்து செயற்பட்டுள்ளன.

கடந்த ஐம்பது ஆண்டுகளில், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் முகவர் (USAID) இலங்கைக்கு உதவியாக 1.9 பில்லியன் டொலருக்கும் மேல் வழங்கியிருக்கிறது. பொருளாதார வளர்ச்சி, கமத்தொழில் அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள், சுகாதாரம், கல்வி மற்றும் பயிற்சி, ஜனநாயகம் மற்றும் ஆளுமை, இடைக்கால முன்னெடுப்புக்கள் அத்துடன் மனிதாபிமான உதவி ஆகிய துறைகளுக்காக இவ்வுதவி வழங்கப்பட்டது.

யூஎஸ்எய்டுக்கும் இலங்கைக்குமிடையிலான பங்காளர் தொடர்பின் சின்னம்

தொழிலற்ற தன்மையைக் குறைத்து, நிதிச் சந்தைகளை அபிவிருத்தி செய்து, வர்த்தக மற்றும் முதலீட்டுக்கு வழிவகுத்து அத்துடன் உலகளாவிய சந்தைகளில் இலங்கையின் ஏற்றுமதிக் கைத்தொழில்கள் திறமையாகப் போட்டி போடுவது ஆகிய நடவடிக்கைகளுடன் தொடர்பு பட்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு யூஎஸ்எய்ட் தன் பங்களிப்பை வழங்குகிறது. ரயில் மற்றும் வீதி அபிவிருத்தி ஆகியவற்றினூடாக முன்னேறிய போக்கு வரத்துத் திட்டங்களை மேம்படுத்தவும் அத்துடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மென்மேலும் வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் யூஎஸ்எய்ட் கைகொடுத்து உதவுகிறது.

ஆரம்பத்தில், கருத்திட்ட உதவி, உணவு உதவி மற்றும் வீடமைப்புக் கடன்களுக்கான உத்தரவாதம் ஆகியவற்றையே இவ்வுதவி உள்ளடக்கியது. கருத்திட்ட உதவியின் அரைவாசி துரித மஹாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு வழங்கப்பட்டது. எஞ்சிய தொகை கமத்தொழில், சுகாதாரம், குடும்பத்திட்டம், தனியார் தொழில்முயற்சி மற்றும் கல்வி போன்ற பல்வேறு துறைகளின் தொழில்நுட்ப உதவி, பயிற்சி, பண்டம் மற்றும் உள்நாட்டுச் செலவு போன்ற திட்டங்களுக்காக அளிக்கப்பட்டது.

விவசாயப் பன்முகம் மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றை அதிகரிப்பதற்கான ஆதாரக் கருத்திட்டங்கள், விவசாயிகளுக்கு முன்னேறிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல், அத்துடன் கமம் சார்ந்த வர்த்தகச் சந்தைப்படுத்தல் திறமையை மேம்படுத்தல் ஆகியவற்றின் மூலம் இலங்கையில் விவசாயத் துறையை அபிவிருத்தி செய்ய ஐக்கிய அமெரிக்கக் குடியரசு அர்ப்பணமாகியுள்ளது. மாசற்ற காற்று மற்றும் வலுச் செயற்றிறன், உயிரியல் பன்முகத்தன்மையை உறுதிப்படுத்தல் அத்துடன் கரையோரத்தையும் கரையோர வளங்களையும் பாதுகாத்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதாக யூஎஸ்எய்ட்டின் இலங்கையின் சுற்றாடலுக்கான பங்களிப்பு அமைந்துள்ளது.

மலேரியா பரவுவதைத் தடுத்தல், போசாக்கை அதிகரித்தல் மற்றும் நீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களைச் சீர்திருத்தல் போன்றவற்றை உள்ளிட்டதாக சுகாதாரத் துறை முன்னெடுப்புகள் அமைந்துள்ளன. இலங்கையில் இரண்டாம் நிலை மற்றும் பல்கலைக் கழகக் கல்வியினை மேம்படுத்துவதில் யூஎஸ்எய்ட் தன் பங்களிப்பை வழங்கியுள்ளதோடு, தொழிற் கல்வி மற்றும் தொழில் பயிற்சியை இலக்காகக் கொண்ட திட்டங்களுக்கு ஆதரவும் வழங்கியுள்ளது.

யூஎஸ்எய்ட்டின் ஜனநாயகம் மற்றும் ஆளுமைக்கான திட்டங்கள், ஜனநாயக நிறுவனங்களைப் பலப்படுத்தி, சமாதானத்துக்கு ஆதரவு நல்கி சிவில் சமாஜத்தின் திறனைக் கட்டியெழுப்புவதற்காகச் செயற்படுகிறது. சமாதானம் நிலைபெறச் செய்வதற்காக பல்வேறு குழுக்களுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக சமூகங்களுக்கு இடைக்கால முனைப்புக்கள் அலுவலகம் உதவுகின்றது.

யுத்தத்தினால் திடுக்கமடைந்த மக்களுக்குச் சிறந்த பராமரிப்புச் சேவைகளையும் வலுகுறைந்தோருக்கு ஆதரவையும் மனிதாபிமான உதவி பெற்றுக் கொடுக்கிறது. மேலும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் உதவி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள் தொட்டு இலங்கைக்கு உணவு உதவி வழங்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்தினால் நேர்ந்த அழிவின் பின், இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் உதவிக்கான முன்னுரிமைகள் பாரிய அளவில் மாற்றமடைந்தன. தப்பிப் பிழைத்தவர்களின் சிதைந்த வாழ்வினை மற்றும் அவர்களின் அழிந்து போன சமூகங்களை மீண்டும் கட்டியெழுப்புவது இத் துயர் படிந்த நிகழ்வின் பின்னால் உள்ள சவாலாகும்.

அரசியல் ரீதியில் இன்று இலங்கை ஒரு திருப்பு முனையை அடைந்துள்ளது. சமாதானச் செயற்பாட்டுக்கு ஆதரவு வழங்கி, இலங்கையின் சகல பிரதேசங்களிலும், இனத்துவ மற்றும் சமயக் குழுக்களுக்கும் செழிப்பையும் நியாயத்தையும் வழங்குவதற்கானதொரு ஏற்ற சூழலை உருவாக்குவதில் யூஎஸ்எய்ட்டின் நாடு சார்ந்த அபிவிருத்தித் திட்டம் குறிப்பிடத்தக்கதொரு பங்கினை வகிக்க முடியும். இலங்கையின் 20 மில்லியன் குடிமக்களுக்கும் பாதுகாப்பான மற்றும் செழிப்பானதொரு எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையுடனான அதன் பங்குதாரர் தொடர்பினை மேலும் வலுவடையச் செய்ய யூஎஸ்எய்ட் எதிர்பார்க்கிறது.

1956 ஏப்பிரல் 28

ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் இலங்கைக்கான பொருளாதார உதவியி-ன் முதலாவது ஒப்பந்தம் 1956, ஏப்பிரல் 28ஆம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இந்த 50 வருடப் பங்காளர் உறவு அவ்வாறு அன்று ஆரம்பமாகியது. இலங்கையின் பிரதம மந்திரியும், பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்காவும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் தூதுவர், மாண்புமிகு திரு. பிலிப் குரோவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் தூதுவர் பிரதம மந்திரிக்கு எழுதி அனுப்பிய அந்த ஒப்பந்தம் பின்வருமாறு ஆரம்பிக்கிறது:

"அபிவிருத்தி உதவித் திட்டமொன்று பற்றி எமது இரு அரசாங்கங்களும் கலந்துரையாடிய விடயம் பற்றிக் குறிப்பிடுவதில் நான் பெருமிதமடைகிறேன். பொருளாதார உதவி, இலங்கையில் பொருளாதார வளர்ச்சிக்கும் ஸ்திரத்தன்மைக்கும் வழிகோலும் என்பதை இரு அரசாங்கங்களும் அறிந்துள்ளதாலும், ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் பாராளுமன்றம் இயற்றியுள்ள சட்டத்தின் கீழ் அத்தகைய உதவியை ஐக்கிய அமெரிக்கக் குடியரசு இலங்கை அரசாங்கத்துக்கு வழங்க முடியும் என்பதைக் கவனத்துக்கெடுத்தும், ஐக்கிய அமெரிக்கக் குடியரசு அரசாங்கம் அத்தகைய உதவியை வழங்குவதையும் இலங்கை அரசாங்கம் அத்தகைய உதவியைப் பெறுவதையும் நெறிப்படுத்துவதற்கான புரிந்துணர்வுகளைக் குறிப்பிடுவது விரும்பத்தக்கது எனக் கொள்ளப்பட்டதாலும், இரு அரசாங்கங்களும் மேற்படி நோக்கங்களை அடைவதற்காகத் தனியாகவும் இணைந்தும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்."

அது மேலும் குறிப்பிடுவதாவது,

"ஐக்கிய அமெரிக்கக் குடியரசு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவியிலிருந்து இலங்கை மக்கள் ஆகக் கூடிய நன்மையை அடைவதை உறுதிப்படுத்துவதற்காக, இலங்கையில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் நிலையான பொருளாதார நிலைமை-களைப் பேணவும் அத்தகைய நோக்கங்களை அடைவதற்கு அதற்குத் தேவைப்படும் உதவியைக் குறைத்துக் கொள்வதற்கும் தோதான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் நாடுகிறது என்பது புரிந்து கொள்ளப்பட்டுள்ளது."

இலங்கையுடனான அதன் 50 வருட காலப் பங்காளர் தொடர்புகள் பற்றி ஐக்கிய அமெரிக்கக் குடியரசு பெருமிதம் கொள்கிறது. வருடங்களினூடாக இலங்கையுடன் இணைந்து நின்று அதன் வளர்ச்சிக்கான பங்களிப்பை வழங்க முடிந்ததை ஒரு கௌரவமாக அது கருதுகிறது. இலங்கையரே தம் முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் நிலையில் தொடர்ந்தும் இலங்கையுடன் சேர்ந்து செயற்படுவதில் யூஎஸ்எய்ட் நாட்டம் கொண்டுள்ளது.

1959 ஏப்பிரல் 28ஆம் திகதி, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு உதவித் திட்டத்தின் முன்றாண்டு நிறைவைக் குறிக்குமுகமாக நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கைப் பிரதம மந்திரி எஸ். டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா உரையாற்றுகிறார் (மேலே வலது புறம்). ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் தூதுவர் பேர்னார்ட் கபர், வர்த்தக அமைச்சர் ரீ.பீ. இலங்கரத்னாவுடன் உணவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகிறார் (மேலே).

உணவு உதவி

1954 யூலை 10 ஆம் திகதி விவசாய வர்த்தக அபிவிருத்தி உதவிச் சட்டம் அல்லது பகிரங்கச் சட்டம் 480 (PL 480) இனை ஜனாதிபதி ட்வைட் டீ. எய்சன்ஹோவர் ஒப்பமிட்டு சட்டமாகச் செயற்படுத்தினார். " எமக்கும், எமது நாட்டு அத்துடன் வேறு நாடுகளின் மக்களுக்கும் நிலையான நன்மைகளை அளிக்கும் வகையில் எமது விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியின் நிரந்தர விசாலிப்புக்கான அடிப்படையை அமைப்பதே" இச்சட்டத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி குறிப்பிட்டார். பிஎல் 480 சட்டத்தின் I, II மற்றும் III ஆம் ஒதுக்கீடுகளின் கீழ் இலங்கைக்கான உதவியை யூஎஸ்எய்ட் வழங்கியுள்ளது.

வளர்முக நாடுகளின் அரசாங்கங்களுக்கும் தனியார் அமைப்புக்களுக்கும் சலுகைக் கடன் அடிப்படையில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் விவசாயப் பண்டங்களை விற்பனை செய்வதற்கான ஏற்பாட்டினை ஒதுக்கீடு I வழங்குகிறது. 1956ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் இலங்கைக்கான முதலாவது உதவித் திட்டங்களுள் ஒதுக்கீடு I இன் கீழான உணவு உதவியே ஆரம்ப இடத்தைப் பிடித்துள்ளது. இலங்கையில் உணவுத் தானியத்துக்கான கிராக்கியை நிறைவு செய்ய அது உதவியதோடு விவசாயத்துக்கும் கிராமிய அபிவிருத்திக்கும் அது துணை நின்றதோடு கொடுப்பனவுகள் நிலுவையின் விரிசலையும் குறைக்க உதவியது.

1980 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் இருந்து, பிஎல் 480 ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அரசாங்கத்தின் தேசிய விவசாய, உணவு மற்றும் போசாக்கு உத்திகளை அபிவிருத்தி செய்ய ஒதுக்கீடு I துணையாக இருந்துள்ளது. பொதுவாக, ஒதுக்கீடு I கொள்கை சார்பற்றதாகும். இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களின் போதும் இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் கொள்கை சீராக்கல்களின் போதும் தொடர்ந்தும் பண்டங்களை ஐக்கிய அமெரிக்கக் குடியரசு வழங்கியே வந்துள்ளது.

பிஎல் 480 ஒதுக்கீடு I இன் கீழ் வழங்கப்பட்ட கோதுமை, மாவாக அரைக்கப்பட்டு உணவு ஆணையாளரினால் கூட்டுறவுச் சங்கங்கள், வெகுப்பகங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட சில்லறைக் கடைகளுக்கு விநியோகிக்கப்பட்டது. இலங்கை அரசின் உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் கோதுமை மா மற்றும் பாணை இக்கடைகளில் இருந்து வேண்டினர். சகலருக்கும் வழங்கப்பட்ட இலக்குப் பார்க்கப்படாத பங்கீட்டுத் திட்டத்துக்குப் பதிலாக உணவு முத்திரை வேலைத்திட்டம் அமைந்தது.

சமாதானத்துக்காக உணவு என்றழைக்கப்படும் ஒதுக்கீடு II, அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் அவசர உணவு உதவித் திட்டங்கள் ஆகியவற்றின் உணவுப் பாதுகாப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பண்டங்களை அன்பளிப்புச் செய்கிறது. இலங்கையில் பாடசாலை மதிய போசனம் மற்றும் தாய்-சேய் ஆரோக்கியத் திட்டங்களுக்காகவும் ஒதுக்கீடு II இன் கீழ் வழங்கப்பட்ட உதவியை யூஎஸ்எய்ட் பயன்படுத்துகிறது. இவ்விரு திட்டங்களையும் தனியார் துறை சுயாதீன அமைப்பான கெயர் நிருவகிக்கிறது.

பாடசாலை மதிய போசனைத் திட்டம் 1956 இல் ஆரம்பிக்கப்பட்டது. அது பின்னர், வருடந்தோறும் பாடசாலை செல்லும் குழந்தைகளுக்குத் தினமும் 44 கிராம் போசாக்குச் சத்துள்ள விசுக்கோத்துக்களை வழங்கும் முயற்சியான பாடசாலை விசுக்கோத்து வேலைத் திட்டமாக மாற்றமடைந்தது. கல்வி அமைச்சுடன் இணைந்து முகாமைத்துவப்படுத்தப்பட்ட இத்திட்டம் குழந்தைகளுக்கு அன்றாட உணவு குறைநிரப்பிகளையும் போசாக்குக் கல்வியையும் வழங்கியது.

கற்ற பாடங்கள்: 1982 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டொன்றினால் பாடசாலை உணவுத் திட்டத்தின் தாக்கத்தை நிர்ணயிக்க முடியவில்லை. இலங்கை அரசாங்கத்தினால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றும் நடைபெற்று வரும் ஆய்வுகளும், இந்த அணுகு முறை போசாக்கற்ற தன்மையை நீக்குவதற்கான பயனுறு முறையாக இராது என்பதை எடுத்துக் காட்டியது. இதன் விளைவாக, போசாக்கற்ற தன்மையை தணிப்பதற்காக தாய்-சேய் ஆரோக்கியத் திட்டத்தைப் பலப்படுத்த அரசாங்கத்துடன் இணைந்தும் அது செயற்படும் அதே வேளையில், வளர்ச்சிச் சக்கரத்தின் ஆரம்பக் கட்டத்தில் அதன் வளங்களை பயன்படுத்துமாறு அரசாங்கத்தை யூஎஸ்எய்ட் உற்சாகப்படுத்தியது.

தாய்-சேய் ஆரோக்கிய வேலைத் திட்டம் 1972 இல் ஆரம்பிக்கப்பட்டதோடு சுகாதார அமைச்சோடு இணைந்து அது முகாமைப்படுத்தப்பட்டது.

1950 இன் இறுதிப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சித்தப்பாலயம் மகா வித்தியாலயத்தில் பாடசாலை உணவுத் திட்டத்தின் கீழ் யூஎஸ்எய்ட் வழங்கிய விசுக்கோத்துக்களை சாப்பிடும் மாணவர்கள்.

இலங்கையில் மூன்று போசாக்குத் திட்டங்களான புரதச் சத்துக் கலோரிப் பற்றாக்குறை, போசாக்கற்ற சோகை மற்றும் விட்டமின் ஏ குறைபாடு ஆகியவை தொடர்பில் அது நடவடிக்கை எடுத்தது. . ஏற்கனவே சமைக்கப்பட்ட திரிபோச குறைநிரப்பி சத்து உணவு சுமார் 550,000 கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார் மற்றும் முன் பள்ளிச் சிறுவர்களுக்கு மாதாந்தம் விநியோகிக்கப்பட்டது. உலகளாவிய ரீதியில் சமாதானத்துக்காக உணவு என்ற திட்டங்களுள் திரிபோச மிகவும் வெற்றிகரமானதொன்றாகக் கருதப்படுகிறது.

1991 இல் ஒதுக்கீடு III இன் கீழான உதவியை யூஎஸ்எய்ட் இலங்கைக்கு வழங்க ஆரம்பித்தது. 1956 முதல் 1990 வரை தொடர்ச்சியாக இலங்கைக்கு உணவு மற்றும் உதவி வழங்கி வந்த ஒதுக்கீடு I இன் தொடர்ச்சியாக அது அமைந்தது.

இலங்கைக்கான ஒதுக்கீடு III திட்டத்தின் ஒப்பந்தம், ஒவ்வொன்றும் சுமார் 35 மில்லியன் டொலர் பெறுமதி கொண்ட மூன்று கொடுப்பனவுகளை அனுமதித்தது. இலங்கை அரசாங்கம் அமுல் செய்யும் நிறுவக ரீதியிலான சீர்திருத்தம், கொள்கைச் சீர்திருத்தம் மற்றும் எதிர்காலச் சீர்திருத்தங்களுக்கான தயார் நிலை ஆய்வுகள் ஆகியவற்றின் நிபந்தனைக்கேற்ப அவை வழங்கப்பட்டன.

நெடுஞ்சாலை அபிவிருத்தி

1950 ஆம் ஆண்டுகளில், உபகரணங்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற ஆளணியினர் இல்லாத நிலையில், இலங்கை அரசாங்கம் அதன் ஆறு ஆண்டு வீதி அபிவிருத்தித் திட்டத்தில் மந்தகரமான முன்னேற்றத்தையே அடைந்தது. 1957ஆம் ஆண்டில் யூஎஸ்எய்ட் முகவர் நிலையத்துக்கு முன்பிருந்த ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாகம் நெடுஞ்சாலைகள் நிர்மாணம் மற்றும் பேணல் தொடர்பான சகல அம்சங்களிலும் பயிற்சி அளிப்பதற்காக நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தை ஆரம்பித்தது.

வரட்சி வலயத்தில் அலுத்நுவர மற்றும் பதியதலாவைக்கு இடையே 22 மைல் நீளமான கிராமிய நெடுஞ்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக பொது மராமத்துத் திணைக்களத்துக்கு இந்த நெடுஞ்சாலை அபிவிருத்திக் கருத்திட்டம் நிர்மாண உபகரணங்களை அன்பளிப்புச் செய்தது.

"அமெரிக்க நட்புறவு நெடுஞ்சாலை" எனப் பெயர் சூட்டப்பட்ட இந்த முன்னோடிக் கருத்திட்டம் நெடுஞ்சாலை நிர்மாண மற்றும் பேணல் ஆளணியினருக்கு மனைசார்ந்த பயிற்சியை அளித்தது மாத்திரமல்லாது, கண்டிக்கும் மட்டக்களப்புக்குமிடையிலான தூரத்தை சுமார் 100 மைல்களால் குறைக்கவும் உதவியது.

பொது மராமத்துத் திணைக்களம் எதிர்காலத்தில் அதன் வளங்களைப் பாவித்து கணிசமான அளவு முன்னேற்றம் அடையக் கூடிய வகையில் கன ரக நிர்மாண இயந்திரங்களைப் பாவிப்பதில் ஆரம்ப அனுபவத்தை இத்தகைய உபகரணங்கள் அதற்கு வழங்கியுதவியது.

அலுத்நுவர-பதியத்தலாவை நெடுஞ்சாலை நிர்மாணத் திட்டத்திற்கு தேவையான உபகரணங்களை யூஎஸ்எய்ட் அன்பளிப்புச் செய்தது.

பொது மராமத்துத் திணைக்களத்தைச் சேர்ந்த 300 ஊழியர்களுக்கும் அதே எண்ணிக்கையிலான கூலியாட்களுக்கும் மனைசார்ந்த பயிற்சி வழங்கப்பட்டது. இந்த நெடுஞ்சாலை அபிவிருத்திக் கருத்திட்டம் 1963 ஆம் ஆண்டில் முடிவுற்றது.

கண்டியையும் மட்டக்களப்பையும் இணைக்கும் இந்த 22-மைல் நீளமான "அமெரிக்க நட்புறவு நெடுஞ்சாலை" 1957 இல் பூர்த்தியாக்கப்பட்டது.

"அமெரிக்க நட்புறவு நெடுஞ்சாலை" எனப் பெயர் சூட்டப்பட்ட இந்த முன்னோடிக் கருத்திட்டம் நெடுஞ்சாலை நிர்மாண மற்றும் பேணல் ஆளணியினருக்கு மனைசார்ந்த பயிற்சியை அளித்தது மாத்திரமல்லாது, கண்டிக்கும் மட்டக்களப்புக்குமிடையிலான தூரத்தை சுமார் 100 மைல்களால் குறைக்கவும் உதவியது.

புகையிரதப் புனருத்தாபனம்

1950இல் யூஎஸ்எய்ட் இலங்கைக்கு வழங்கிய டீசல் வலு ரயில் வண்டிகளுள் சில இன்றுகூட சேவையில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம்.

1950இன் கடைசிப் பகுதியில், கொழும்பின் இரயில்வே போக்குவரத்து வசதிகள் அவசரமாகத் திருத்தப்பட்டு விசாலிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தன. தேசத்தின் வர்த்தக மற்றும் கைத்தொழில் மத்தி என்ற வகையில், கொழும்பின் அபிவிருத்திக்கு சீர்திருத்தப்பட்ட புகையிரதப் போக்குவரத்து முக்கியமானதொரு பங்களிப்பை வழங்கும் நிலைச்சக்தியைக் கொண்டிருந்தது.

இம்முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, இலங்கை அதன் இரயில் சமிக்ஞைத் திட்டங்களை சீர்திருத்துவதற்கு ஐக்கிய அமெரிக்கக் குடியரசு உதவியதோடு, நெடுஞ்சாலைகள் மற்றும் இரயில் தண்டவாளத் திட்டத்தின் முழுமையானதொரு போக்குவரத்து ஆய்வுக்காக நிதியை வழங்கியது.

இரயில்வேப் போக்குவரத்தை சீர்திருத்துவதன் மூலம் நகரத்துக்குத் தினமும் பயணம் செய்யும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் மேலும் வசதியாகவும், கெதியாகவும் பயணம் செய்வதற்கான வாய்ப்புக் கிடைக்கிறது.

இச்சீர்திருத்தங்கள், கொழும்புத் துறைமுகத்திலிருந்து பொருட்களை கால விரயமன்றி எடுத்துச் செல்ல வழிவகுத்தன. கொழும்பின் சேரிகளின் பெருக்கத்தை, காணி விலைகளை மற்றும் வாடகைச் செலவினைக் கட்டுப்படுத்த இலங்கையின் புகையிரத சேவையை புனருத்தாபனம் செய்வது அரசாங்கத்துக்கு உதவும் என்பதோடு கைத்தொழில் உற்பத்திக்காக மேலும் பல பிரதேசங்களைத் திறந்து விடவும் அது வசதியளிக்கும்

இத்தேவையை நிறைவு செய்வதற்காக, இலங்கைக்கு 25 டீசல் வலு ரயில் வண்டிகளை ஐக்கிய அமெரிக்கக் குடியரசு வழங்கியது. இந்த இரயில் பெட்டிகளும் என்ஜின்களும் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் நெரிசலைக் குறைத்து இலங்கையின் இரயில் போக்குவரத்துச் சேவைகளை முன்னேற்ற உதவின.

முன்னர் பாவனையிலிருந்த நிலக்கரி ரயில் என்ஜின்களை விட இந்த டீசல் வலு வண்டிகள் வினைத்திறன் அதிகமுள்ளவையாக இருந்ததோடு ஒவ்வொரு இரயில் மைல் பயணத்துக்கும் கணிசமான அளவில் ஒரு ரூபா வெளிநாட்டுச் செலாவணியை மிச்சம் பிடிக்க அது உதவியது. இதன் விளைவாக, 1958 இல் புகையிரத சேவை நாளொன்றுக்கு 36,000 பயணி-களை ஏற்றிச் செல்ல முடிந்தது.

இன்று கூட, இவ்வாறான சில ரயில் வண்டிகள் சேவையில் ஈடுபட்டிருப்பதை இலங்கை முழுவதிலும் காணக்கூடியதாக உள்ளது.

1960 ஆம் ஆண்டுகளின் இறுதியில் இலங்கை

1965 இல் இலங்கையின் பொருளாதாரம் மந்தகரமாக இருந்தது. தொடர்ந்து பல வருடங்களாக அதன் ஏற்றுமதிகளான தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பொருட்களுக்கான உலகச் சந்தை விலைகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்த வண்ணமிருந்ததோடு குறிப்பாக உணவு இறக்குமதிகளுக்கான கிராக்கி அதிகரித்துக் கொண்டே சென்றது. மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதி குறைக்கப்பட்டு அபிவிருத்தி ஓரங்கட்டப்பட்டது. முதலீடுகள் தாழ்வாக

இலங்கையின் கொடுப்பனவு நிலுவைச் சிக்கல்களுக்கான சிறந்த குறுகிய கால நிவாரணமாக இறக்குமதிக்குப் பதிலாக தனக்குத் தேவையானவற்றைத்தானே உற்பத்தி செய்யும் முன்னெடுப்பே இருந்தது.

இருந்ததோடு, மொத்த தேசிய உற்பத்தியும் சனப் பெருக்கமும் ஒரே அளவில் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தன.

இறக்குமதிக்குப் பதிலாகத் தனக்குத் தேவையான உணவைத் தானே உற்பத்தி செய்யும் முன்னெடுப்பே இலங்கையின் கொடுப்பனவு நிலுவைச் சிக்கல்களுக்கான சிறந்த குறுகிய கால நிவாரணமாக இருந்தது. 1967 இல் இலங்கை அரசாங்கம் மிகவும் வெற்றிகரமான அதிக உணவை உற்பத்தி செய்யும் ஒரு திட்டத்தை ஆரம்பித்ததோடு, அதன் பிரதிபலனாக விவசாய உற்பத்தியும் விவசாயிகளின் வருமானமும் கணிசமான அளவு அதிகரித்தன.

உள்நாட்டு உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்ட அதே வேளையில் உணவு நுகர்வுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டன. மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட அரிசியின் அளவு அரைவாசியாகவும் ஏனைய பங்கீடுகள் கணிசமான அளவும் வெட்டப்பட்டன. உணவுப் பண்டங்களின் இறக்குமதி வெகுவாகக் கத்தரிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் விவசாய உற்பத்தி முயற்சிகளுக்குத் தேவையான ஊக்குவிப்பை உண்டாக்கின.

1967 இல் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வமான பணமதிப்பைக் குறைத்தல், 1968 இன் விருப்பத்தெரிவு இறக்குமதி – ஏற்றுமதி வீதம் மற்றும் உற்பத்திக்குத் தேவையானவை சார்பில் நுகர்வோர் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தம் திருத்தப்பட்ட இறக்குமதிக் கொள்கை ஆகியவற்றை உள்ளிட்ட பலவிளைவுகளை ஏற்படுத்தக் கூடிய கொள்கைகள் மூலம் கைத்தொழில் உற்பத்தி உந்தப்பட்டது.

நெல் விளைச்சலை அதிகரிப்பதற்காக 1960 இல் யூஎஸ்எய்ட் வழங்கிய உரத்தை இலங்கை விவசாயிகள் பெற்றார்கள்.

இலங்கை எதிர்நோக்கிய குறுகிய கால வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையை சர்வதேச நாணய நிதியம் வழங்கிய ஸ்திரமாக்கும் கடன்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற உதவி தளர்த்தியது.

1970 ஆம் ஆண்டில் இருந்தவாறாக, 1965 ஆம் ஆண்டு தொடக்கம் உதவி வழங்கும் குழுவொன்று உறுதியளித்த 310 மில்லியன் டொலர் தொகையின் 67 மில்லியன் டொலர்களை ஐக்கிய அமெரிக்கக் குடியரசு வழங்கியது. 20 மில்லியன் டொலர் அபிவிருத்திக் கடன்கள் மற்றும் பிஎல் 480 ஒதுக்கீடு | இன் கீழான உணவு உதவி ஆகியவை ஐக்கிய அமெரிக்கக் குடியரசு வழங்கிய உதவியில் அடங்கும்.

இலங்கையின் உர இறக்குமதித் தேவையின் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்காக 1970ஆம் நிதியாண்டில் 5 மில்லியன் டொலர் அபிவிருத்திக் கடனொன்றையும் யூஎஸ்எய்ட் ஏற்பாடு செய்தது. குறிப்பாக விவசாய உற்பத்தியை விரிவாக்குவதைக் கொண்ட இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்கு இவ்வுதவி துணையாகவிருந்தது.

USAID FROM THE AMERICAN PEOPLE

திரிபோச : பிள்ளைகளுக்கான போசாக்கு ஊட்டம்

1972 இல், இலங்கையின் தாய்மார் மற்றும் குழந்தைகள் ஆரோக்கியம் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்காக யூஎஸ்எய்ட்டின் சமாதானத்துக்கான உணவு உதவித் திட்டம் விஸ்தரிக்கப்பட்டது. இப்புதிய திட்டம் சுகாதார அமைச்சுடன் இணைந்து முகாமைத்துவம் செய்யப்பட்டதோடு அதனை கெயர் நிறுவனம் நிருவகித்தது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட மாதாந்த குறைநிரப்பி போசாக்கு விநியோகத்தின் மூலம் புரதச் சத்துக் கலோரி பற்றாக்குறை, போசாக்குச் சத்துச் சோகை மற்றும் விட்டமின் ஏ குறைபாடு ஆகிய இலங்கையில் இருக்கும் மூன்று போசாக்கு சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதை அது நோக்காகக் கொண்டிருந்தது.

இப் போசாக்குக் குறைநிரப்பி "திரிபோச" என்று அழைக்கப்பட்டது – அதாவது, மூன்று போசாக்குப் பிரிவுகள் என்பது அதன் அர்த்தமாகும். ஆரம்பத்தில் அது கோதுமை-சோயா-பால் ஆகியவற்றின் கலவையாக இருந்தது. சமாதானத்துக்காக உணவு என்பதினூடாகப் பண்டங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இதனைப் பெறுவோரின் எண்ணிக்கையைப் பெருக்கும் முயற்சியாக, விசுக்கோத்துக்களை உற்பத்தி செய்வதற்காக வாற்கோதுமை அரைக்கப்பட்டு மாவாகப் பெறப்பட்டு பின்னர் அது மீண்டும் அரைக்கப்பட்டு கோதுமை-சோயாவுடன் பிசையப்பட்டது.

எதிர்காலத் தேவைகளை இச்செயற்பாட்டின் மூலம் ஈடு செய்ய முடியாதென்பதால், இந்த வெதுப்பகச் செயற்பாட்டை மாற்றியமைப்பதற்கானதொரு தீர்மானம் 1975 இல் எடுக்கப்பட்டது. யூஎஸ்எய்ட் மற்றும் கெயர் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட வார்ப்பு உலை ஒன்றின் மூலம் உள்நாட்டில் கிடைக்கக் கூடிய பண்டங்களைப் பிரயோகிக்கும் வாய்ப்பு ஏற்பட்டதால், இக் கலவை சோளம்-சோயா-பாலாக மாற்றப்பட்டது.

யூஎஸ்எய்ட் உதவி பெறும் தொழிற்சாலை ஒன்று குழந்தைகளுக்காக போசாக்கு மிக்க விசுக்கோத்துகளை உற்பத்தி செய்கின்றது.

திரிபோசவுக்கான அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கொழும்புக்கு அருகில் ஜாஎலவில் புதியதொரு பல்கூட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது. இத்தொழிற்சாலைக்கான நிதிகளையும் உபகரணங்களையும் யூஎஸ்எய்ட் மற்றும் கெயர் கொடுத்துதவின. இத்திட்டத்துக்கான தொழில்நுட்ப உதவியை யூஎஸ்டிஏ மற்றும் கொலராடோ மாநிலப் பல்கலைக்கழகத்தினூடாக யூஎஸ்எய்ட் வழங்கியது. இயந்திரத்தொகுதியொன்று, உண்டிச்சாலை, களஞ்சியம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் ஆகியவற்றை அது கொண்டிருந்தது.

மூன்று போசாக்குப் பிரிவுகள் கொண்ட போசாக்குக் குறைநிரப்பியான திரிபோசாவின் உற்பத்தியினால் இவர்களைப் போன்ற குழந்தைகள் நன்மையடைந்தனர்.

அதன் நேரடிப் போசாக்கு விளைவுக்கு மேலாக, திரிபோச பயனடைவோர் கிரமமாக சுகாதார நிலையங்களுக்கு வருவதற்கானதொரு ஊக்குவிப்பையும் வழங்கியது. இதனால் அங்கு வருவோருக்கான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சுகாதார நிலைய ஊழியர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. உலகளாவிய ரீதியில் அனுசரணை வழங்கப்பட்ட சமாதானத்துக்கான உணவுத் திட்டத்தின் கீழ் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கான சிறந்த சுகாதார நடவடிக்கைகளை திரிபோசத் திட்டத்தின் மூலம் பெற முடிந்தது என்பதை 1982 மேற்கொள்ளப்பட்ட சமாதானத்துக்காக உணவுத் திட்ட மதிப்பீடொன்று எடுத்துக் காட்டியது.

இன்று கூட திரிபோச பாவனையில் உள்ளது. கடற்கோள் அனர்த்தம் மற்றும் சுகாதார வீடயங்கள் தொடர்பான உலக சுகாதார ஸ்தாபனத்தின் 2005 பெப்ரவரி நிலவர அறிக்கையொன்று, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முகாம்களில் உள்ள குழந்தைகளுக்கு திரிபோச விநியோகிக்கப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளது.

மலேரியா ஒழிப்பு

பல நூற்றாண்டு காலமாக மலேரியா நோய் இலங்கையில் பாரியதொரு பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. 1930 ஆம் ஆண்டுகளில், இலங்கை அரசாங்கம் நீண்டதொரு மலேரியா நோய் ஒழிப்புத் திட்டத்தை ஆரம்பித்தது. மலேரியா ஒழிப்புத் திட்டம் என்ற அமைப்பினூடாக அமுலாக்கப்பட்ட மலேரியாத் தடுப்பு வேலைத் திட்டங்கள் நாடு பூராவும் ஏற்படுத்தப்பட்டன.

1957 ஆம் ஆண்டில், ஐக்கிய அமெரிக்கக் குடியரசு இலங்கையில் அதன் முதலாவது உதவித் திட்டமாக இந்த மலேரியா நோய் ஒழிப்பு முயற்சியில் இணைந்து கொண்டது. மருந்து தெளித்தல் மற்றும் ஊர்ஜிதம் செய்யப்பட்ட மலேரியா நோயாளிகளைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளிப்பதற்கான தீவிரக் கண்காணிப்பு ஆகியவற்றினூடாக முதலில் மலேரியா நோயைக் கட்டுப்படுத்திப் பின்னர் நாட்டில் இருந்து அதனை ஒழிப்பதை இந்நடவடிக்கை நோக்காக் கொண்டிருந்தது.

1963 ஆம் ஆண்டில், 17 மலேரியா நோயாளிகள் மாத்திரமே கண்டு பிடிக்கப்பட்டதோடு, நாட்டின் வரலாற்றில் முதற்தடவையாக இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டது. 1960 ஆம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் மலேரியா நோய் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்ததால், இந்த வெற்றி சிறிது காலமே நீடித்திருந்தது. டீடீரீ (DDT) பூச்சிக்கொல்லி மருந்துக்கு எதிராக நோய் பரப்பும் நுளம்புகள் தடுப்புச் சக்தியை ஏற்படுத்திக் கொண்டதே இதற்கான முக்கிய காரணமாகும்.

சுகாதார ஊழியர்களுக்கான மீள் பயிற்சி இன்மை, புற பணியாட் தொகுதியினரின், உபகரணங்களின் மற்றும் பொருட்களின் பற்றாக்குறை இந்த நோயின் எழுச்சிக்குப் பங்களிப்பை வழங்கின. பதியப்பட்ட நோயாளர் எண்ணிக்கை 1972 இல் 133,604 இல் இருந்து 1975 ஆம் ஆண்டில் 400,777 வரை அதிகரித்தது. குழந்தைகளுக்கும் தடுப்புச் சக்தி குறைந்த சனத்தொகையினருக்கும் வெகுவாக ஆபத்தை விளைவிக்கக் கூடிய மூளைக் காய்ச்சல் மலேரியா நோயும் அதிகரித்துக் கொண்டிருந்தது.



1972 – 82 வரை இலங்கையில் மலேரியா நோயின் தோற்றத்தைக் குறிக்கும் வரைவு.

ஐந்து வருட கால எல்லையினுள் மலேரியா நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை 1977 ஆம் ஆண்டில் அரசாங்கம் ஆரம்பித்தது. 1978 இல் இலங்கை மலேரியா தடுப்புக் திட்டத்தை நிறுவுதல், பூச்சிக்கொல்லிகள், உபகரணங்கள், ஆராய்ச்சி மற்றும் முன்னோடி பரிசீலனை, தொழில்நுட்ப உதவி மற்றும் ஆட்களுக்கான பயிற்சி ஆகியவை மூலம் 1978 ஆம் ஆண்டில் இத்திட்டத்துக்கு யூஎஸ்எய்ட்

மலேரியா ஒழிப்புத் திட்டத்தைச் சேர்ந்த இலங்கை விஞ்ஞானிகள் பாவிக்கும் யூஎஸ்எய்ட் அன்பளிப்புச் செய்த நுண்ணோக்காடிகள்.

அதன் பங்களிப்பை வழங்கியது.

துரித மஹாவலித் தொட்டி அபிவிருத்தித் திட்டத்தினால் ஏற்பட்ட மேலதிக மலேரியா தடுப்புச் செலவுகள் மற்றும் அரசாங்கத்தின் மலேரியா நோய் தடுப்புத் திட்டத்துக்குத் தேவையான பூச்சிக் கொல்லிகளுக்கான அந்நியச் செலாவணிக் குறைபாடு ஆகியவற்றையும் வழங்கப்பட்ட பங்களிப்புகள் மேவின. 1981 இல் மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை 47,949 ஆக வீழ்ச்சியடைந்தது.

1983 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மலேரியா ஒழிப்புத் திட்டத்துக்கான அதன் ஆதரவை யூஎஸ்எய்ட் நிடித்தது. சீர்திருத்தப்பட்ட மலேரியா நோய் சிகிச்சைத் திட்டம் ஒன்று யூஎஸ்எய்ட் மலேரியா தடுப்புக் கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டதோடு, பரவலான மருந்து தெளிப்பதைக் குறைக்கும் விதத்தில் நோய் பரப்பும் நுளம்பைக் கட்டுப்படுத்தும் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மலேரியா நோய் தடுப்பு நடவடிக்கைகளில் யூஎஸ்எய்ட் இலங்கை அரசாங்கத்துடன் 1988 ஆம் ஆண்டு வரை இணைந்து செயற்பட்டது.

மலேரியா ஒழிப்புத் திட்டம் மற்றும் ஏனைய அரசாங்க அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான பட்டறையொன்றின் போது, மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் எம். யூ. எல். பீ. சமரசிங்க பகிரங்கமாகவே யூஎஸ்எய்ட் நிறுவனத்துக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். மலதியோன் பூச்சிக் கொல்லி மருந்தை வழங்குவது, பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் மலேரியா தடுப்புத் திட்ட நடவடிக்கைகளில் துறையினருக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தல் போன்றவற்றினூடாக யூஎஸ்எய்ட் வழங்கிய பெறுமதி மிக்க உதவியையும் ஆதரவையும் மெச்சி அவர் பாராட்டினார்.

USAID FROM THE AMERICAN PEOPLE

பெண்கள் தொழில்வாய்ப்பு

1970 ஆம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில், இலங்கையில் பெண்கள் தொழில் வாய்ப்பு தொடர்பான சிக்கல்களை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான திட்டங்களுக்கு யூஎஸ்எய்ட் ஆதரவு வழங்கியது. அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் கூடிய எண்ணிக்கையிலான பெண்களை உட்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் மற்றும் 1978 ஆம் ஆண்டில் இலங்கைப் பெண்கள் பணியகம் நிறுவப்பட்டதுக்கேற்ப இவை அமைந்திருந்தன.

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகளுக்கான தீர்வுகளைக் காணல், பெண்கள் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களைப் பலப்படுத்துவதில் உதவி வழங்கல், பாரம்பரியமற்ற பொருளாதார நடவடிக்கைகளில் பெண்களை முழுமையாக ஒன்றிணைப்பதற்கான பயிற்சியை அளித்தல் அத்துடன் இலங்கை அரசாங்கம் பெண்கள் தொழில் வாய்ப்பில் தடைகளை அகற்ற உதவும் வகையில் பெண்கள் பிரச்சினைகள் பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்ளல் ஆகியவை யூஎஸ்எய்ட் / இலங்கைக்கு இடையிலான பொதுவான உத்தியாக அமைந்தது.

பட்டதாரிப் பெண்களுக்கிடையே நிலவும் அதிக அளவிலான தொழிலற்ற தன்மையை நீக்குவதற்காக இலங்கை பல்கலைக்கழகப் பெண்கள் சம்மேளனம் 1978 ஆம் ஆண்டில் மேற்கொண்ட தீர்மானம் இந் நடவடிக்கைகளில் ஒன்றாக அமைந்தது.

அன்று பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை கிடைக்கக் கூடிய தொழில்வாய்ப்புக்களைவிட மிக அதிகமாயிருந்தது. இது பெண்களுக்கான சந்தர்ப்பங்களை மிகவும் மட்டுப்படுத்தியதோடு, தகைமை பெற்ற கலைத்துறைப் பட்டதாரிகள் தொழில்வாய்ப்பினைப் பெறுவதை அதைவிடக் கடினமாக்கியது.

அன்று பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளின் எண்ணிக்கை கிடைக்கக் கூடிய தொழில்வாய்ப்புக்களைவிட மிக அதிகமாயிருந்தது. இது பெண்களுக்கான சந்தர்ப்பங்களை மிகவும் மட்டுப்படுத்தியதோடு, தகைமை பெற்ற கலைத்துறைப் பட்டதாரிகள் தொழில்வாய்ப்பினைப் பெறுவதை அதைவிடக் கடினமாக்கியது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில், பெண்களை ஆளணியிக்குள் ஒருங்கிணைப்பதற்கான மூன்று கட்ட, முப்பது மாதத் திட்டமொன்றுக்கு ஆதரவாக யூஎஸ்எய்ட் மானியமொன்றை வழங்கியது. இதன் நோக்கம், அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதாகவிருந்தது. ஆரம்பத்தில், இலங்கை பல்கலைக்கழகப் பெண்கள் சம்மேளனம் பெண் கலைப் பட்டதாரிகள் தொழில் பெறுவதற்குத் தடையாகவுள்ள முக்கிய காரணிகளை இனங்காண்பதற்காக ஆய்வொன்றை நடாத்தியது. தொழில் வாய்ப்புத் தேவைகளை மதிப்பீடு செய்யவும் பயிற்சி தேவைப்படும் துறைகளை இனங்காணவும் அரச மற்றும் தனியார் துறைகளின் ஆதரவு தேடப்பட்டது.

ஆய்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் பயிற்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. பின்னர் தொழிலற்ற பட்டதாரிப் பெண்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு அவர்கள் ஈடுபாடுள்ள மற்றும் அவர்களுக்கு ஏற்ற துறைகளில் அவர்களுக்குத் தொழில் திறன் பயிற்சி வழங்கப்பட்டு தொழில் வாய்ப்புக்களைத் தேடிக் கொள்ள உதவியும் அளிக்கப்பட்டது. கருத்திட்டத்தின் இறுதியில், 110 பெண்களுக்கு அவர்கள் பயிற்றப்பட்ட தொழில்கள் தேடிக் கொடுக்கப்பட்டன,

பெண்களுக்கான இரவு வேலை பற்றிய இலங்கைப் பெண்கள் பணியகத்தின் ஆய்வொன்றுக்கு யூஎஸ்எய்ட் உதவியளித்தது. முன்பு, இலங்கையில் அமுலில் இருந்த சட்டங்களின் படி, இலங்கையினால் உறுதிப்படுத்தப்பட்ட சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் ஒப்பந்தத்துக்கு இணங்க, இரவு 10.00 மணிக்கும் காலை 8.00 மணிக்கும் இடையில் தொழிற்சாலைகளிலும் கைத்தொழில்களிலும் பெண்களை வேலைக்கமர்த்துவது தடை செய்யப்பட்டிருந்தது. இது பெண்களுக்கெதிராகக் காட்டப்படும் பாரபட்சம் என உணர்ந்த தொழில் அமைச்சு, பெண்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களின் கருத்துக்களையும் தேவைகளையும் ஆய்வொன்றின் மூலம் அறியுமாறு பெண்கள் பணியகத்தைக் கேட்டுக் கொண்டது.

வாசனைத் திரவியக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பெண்கள். பெண்களுக்கான தொழில்வாய்ப்புக்களை பரவலாக்குவதற்கு ஏதுவாக தொழில் சட்டங்களைச் சீர்திருத்துவதற்காக யூஎஸ்எய்ட் ஒத்தாசை நல்கியது.

யூஎஸ்எய்ட் வழங்கிய மானியம் ஒன்றைப் பிரயோகித்து, இந்த ஆய்வினை பெண்கள் பணியகம் 1980 யூலை மாதம் ஆரம்பித்தது. அதன் பெறுபேறுகள் 1981 இல் பிரசுரிக்கப்பட்டதோடு பெண்கள் இரவு நேரத்தில் தொழில் புரிவதை இனிமேலும் தடைசெய்யாதவாறு சட்டங்களை மாற்றியமைக்க இலங்கை அரசாங்கத்துக்கு அது வழிவகுத்தது. இப்போது தமக்குக் கிடைக்கும் தொழில் சந்தர்ப்பங்களை உயர் நிலைக்கு எடுத்துச் செல்வதற்கான வாய்ப்பு இலங்கைப் பெண்களுக்கு உண்டு.

கல் ஓயா நீர்ப்பாசனத் திட்டம்

விசாலமாகப் படர்ந்த கால்வாய்ப் பின்னல்களினூடாக குள நீர்ப்பாசனம் பற்றிய நீண்டதொரு சம்பிரதாயம் இலங்கையில் இருந்து வருகிறது. ஆதிகால இராஜதானிகளைத் தாங்கி நிற்பதில் 5ஆம் நூற்றாண்டு முதல் 15ஆம் நூற்றாண்டு வரை நீர்ப்பாசன நடவடிக்கைகள் பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளன. நீர்ப்பாசனக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதன் மூலம் உள்நாட்டுக் கமத்தொழிலுக்கு புத்துயிர் அளிக்கும் வகையிலான அரசாங்க ஈடுபாடு 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்படத் தொடங்கியது.

1900 இல் நீர்ப்பாசனத் திணைக்களம் அமைக்கப்பட்டதன் மூலம் பொதுவான அபிவிருத்தி உத்திகளிடையே நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இயன்ற அளவு ஆகக் கூடிய எண்ணிக்கையிலான நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைத்து அபிவிருத்தி செய்வதே இதன் பிரதான நோக்கமாக இருந்தது. 1955 – 1980 காலப்பகுதியில் நீர்ப்பாசனம் வழங்கப்பட்ட நிலப்பரப்பு சுமார் 650,000 ஏக்கரிலிருந்து 1.2 மில்லியன் ஏக்கருக்கு மேலாக அதிகரித்தது.

சகல நீர்ப்பாசனத் திட்டங்களாலும் தம் பிரதேசங்களுக்குட்பட்ட எல்லா விவசாயிகளுக்கும் உரிய முறையில் சேவையாற்ற முடியவில்லை. இந்நிலையில், இலங்கையின் கிழக்கு வரட்சி வலயத்தில் கல் ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தில் முன்னோடிக் கருத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசாங்கம் முடிவெடுத்தது. மிகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டமாகவும் ஆகக் கூடிய புனரமைப்புத் தேவையைக் கொண்டதாகவும் அது இருந்தது.

அநேகமாக நெற் பயிர்ச் செய்கையைக் கொண்ட பிரதேசத்தை மேவும் இடது கரைக் கால்வாய் அமைப்பிலேயே இத்திட்டம் கவனம் செலுத்தியது. 1979 ஆகஸ்ட் 30 ஆம் திகதி கல் ஓயா நீர் முகாமைத்துவக் கருத்திட்டத்துக்கான ஒப்பந்தம் ஒன்று இலங்கை அரசாங்கத்துக்கும் யூஎஸ்எய்ட்டுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது.

ஆய்வொன்றை மேற்கொண்டு, நீர் முகாமைத்துவத் திட்டத்தின் நோக்கெல்லையை நிர்ணயிப்பதற்காக CH2M Hill என்ற அமெரிக்கத் தனியார் உசாத்துணை நிறுவனத்தின் சேவையை யூஎஸ்எய்ட் பெற்றுக் கொண்டது. பௌதிகப் புனருத்தாபனம், சீர்திருந்திய பயிற்சித் திட்டம், நிடிப்புத் திட்டத்தை மேம்படுத்துவதற்கான உதவி, விசாலித்த மத்திய அமைப்பின் ஆதரவு மற்றும் சமூக-பொருளாத ஆராய்ச்சித் திட்டமொன்று ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டமொன்றை கல் ஓயாவில் செயற்படுத்துவதை CH2M Hill இன் குழு சிபாரிசு செய்தது. விவசாயிகளிடையே நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக விவசாய அமைப்புக்களுக்கான பரீட்சார்த்த தொகுதியொன்றை உட்படுத்துவதை யூஎஸ்எய்ட் பரிந்துரைத்தது.

தள நடவடிக்கைகள் 1981 ஆம் ஆண்டு ஆரம்பித்தன. புனரமைப்பு நடவடிக்கையினால் கல் ஓயா இடது கரை அமைப்பின் நீரியல் செயற்பாடு வெகுவாக அபிவிருத்தியடைந்தது. அநேகமான பிரதான, கிளை மற்றும் விநியோகக் கால்வாய் அமைப்புக்கள் திருத்தப்பட்டன. இப்புனருத்தாபன நடவடிக்கைகள் காரணமாக கணிசமான அளவு நீர் சேமிக்கப்பட்டதோடு, இடது கரையில் நீர்ப்பாசனம் வழங்கப்படும் பிரதேசங்களும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தன. பயிரிடப்பட்ட காணியின் அளவும் அலகொன்றுக்கான உற்பத்தித் திறனும் மேலுயர்ந்தது. ஐந்து வருடக் கருத்திட்டத்தின் முடிவில் தாம் நன்மையடையவுள்ளனர் என்பதை விவசாயிகள் உணர்ந்து கொண்டதோடு, அவர்களிடையே முன்னைவிட எதிர்காலத்தைப் பற்றிய சுய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் காணப்பட்டது.

விவசாயிகள் அமைப்புத் திட்டம் கல் ஓயாக் கருத்திட்டத்தின் அதி வெற்றிகரமான அம்சமாக அமைந்தது. இவ்வமைப்பின் மீள்வடிவமைப்பு, நிர்மாணம், செயற்பாடு மற்றும் பேணல் ஆகியவற்றுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை விவசாயிகள் அமைப்புக்கள் வழங்கின. கால்வாய் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் பற்றிய விவசாயிகளின் அறிவைப் பாவிப்பதற்கான சந்தர்ப்பம் இத்திட்டத்தின் பிரயோசனமானதொரு விளைவாகும். கிட்டத்தட்ட சகல விவசாய அமைப்புக்களும் சுழற்சி விநியோகம், நீர் சேமிப்புத் தொழில்நுட்பம் ஆகியவற்றை மேற்கொண்டு குழுக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பேணல் நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

சிறிய பழுதுபார்த்தல்கள் மற்றும் பேணல் நடவடிக்கைகள், பாரம்பரிய சமூக சேவை ஒத்துழைப்பு முறையான, சிரமதான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. நீர் பற்றிய பிணக்குகள் பாரிய அளவில் குறைந்ததோடு, பிணக்குகளை தீர்ப்பதற்கான ஒழுங்கானதொரு அமைப்பும் அங்கு உருவாகியது. இந்த விவசாய அமைப்புத் திட்டத்தின் வெற்றி காரணமாக, இலங்கையில் ஏனைய பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும் இந்த மனவுருக்களையும் முறைகளையும் இலங்கை அரசாங்கம் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது.

புதிய நீர்ப்பாசன மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள் இலங்கையில் பயிர் விளைச்சலை வெகுவாக அதிகரித்துள்ளன.

மஹாவலி நதி

207 மைல் நீளமான இலங்கையின் பிரதான நதியான மஹாவலி கங்கை இலங்கையின் ஈர மற்றும் வரட்சி வலயங்கள் இரண்டினூடாகவும் செல்கிறது. யூஎஸ்எய்ட் நிறுவனத்துக்கு முன்பிருந்த ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் பரஸ்பர பாதுகாப்புத் திட்டத்தினால் 1958 – 1961 ஆம் காலப்பகுதியில், மஹாவலி நதியின் வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்பக் கண்ணோட்ட மட்டத்திலான திட்ட ஆய்வுக்கான நிதியளிப்பு வழங்கப்பட்டது.

இத்திட்டத்தைத் தொடர்ந்து, 1965 க்கும் 1968 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், இலங்கை அரசாங்கத்தின் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து, ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும் பாரிய திட்டமொன்றை வடிவமைத்தன. இலங்கையின் வரட்சி வலயத்தின் பிரதான பிரதேசங்களுக்கு நீர்ப்பாசனத்தை வழங்குவதற்கும் நீர் மின்சக்தியை பெற்றுக் கொள்வதற்கும் மஹாவலி நதி மற்றும் அதன் கிளைகளைப் பாவிப்பது இத்திட்டத்தின் நோக்காக இருந்தது.

இந்த துரித மஹாவலித் திட்டம் 30-வருடக் காலப்பகுதியொன்றில் பதினைந்து நீர்த்தேக்கங்களை அமைப்பதையும் அவற்றுள் பதினொன்று மின்சக்தி நிலையங்களைக் கொண்டதாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், ஏற்கனவே அரைவாசி நீர்ப்பாசன வசதியைக் கொண்ட 246,000 ஏக்கர் காணியுடன் 654,000 ஏக்கர் புதிய நிலப்பரப்பைக் கொண்ட 900,000 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்வதையும் இத்திட்டம் உள்ளடக்கியது. இத்திட்டத்தின் முதலாம் கட்ட நடவடிக்கைகள் 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

1977 இல் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம், துரித மஹாவலித் திட்டத்தை ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்கான அதன் நோக்கத்தை அறிவித்ததோடு, அதன் நோக்கெல்லையையும் முகாமைப்படுத்தக் கூடிய அளவுக்குக் குறைத்தது. இத்திட்டத்தினூடாக 470 மெகாவொட் மின் உற்பத்திக் கொள்ளளவுக்கு வழி ஏற்பட்டதோடு வரட்சி வலயத்தில் மேலுமொரு 365,000 ஹெக்டெயர் காணிக்கான நீர்ப்பாசனத்தை வழங்கவும் முடிந்தது. நிர்மாணத்தைத் தொடர்ந்து நீரோட்டப் பிரதேச முகாமைத்துவம், நீர் முகாமைத்துவம், பயிர்களைப் பன்முகப்படுத்தல், பங்கேற்கும் முகாமைத்துவம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்திக்கு கவனம் செலுத்தப்பட்டது.

1970 ஆம் ஆண்டுகளின் கடைசிப் பகுதியில், விவசாயக் கல்வி, ஆராய்ச்சி, நீர் முகாமைத்துவம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் போன்ற பலதரப்பட்ட நிறுவக ரீதியிலான அமைப்பைக் கட்டியெழுப்பும் கருத்திட்டமொன்றினூடாக இலங்கைக்கான யூஎஸ்எய்ட் திட்டம் உணவு உற்பத்தியை அதிகரிப்பதை வலியுறுத்தியது.

துரித மஹாவலித் திட்டத்தில் பங்குபற்றுவது இலங்கையில் அதன் மிகப் பெரிய அபிவிருத்தி நடவடிக்கையாக இருக்கும் என யூஎஸ்எய்ட் தீர்மானித்தது. இலங்கை அரசாங்க அபிவிருத்தி நடவடிக்கையில் முன்னணி இடத்தைத் துரித மஹாவலித் திட்டம் பெற்றிருந்ததும், இத்திட்டத்தில் பல உதவி வழங்குவோரின் ஈடுபாடும், தொழில்வாய்ப்பை ஏற்படுத்தி, காணியற்ற விவசாயிகளுக்கு காணியை வழங்கி அதிகரித்த உணவு உற்பத்திக்கான வாய்ப்புக்களை வழங்குதவதற்கான யூஎஸ்எய்ட்டின் சட்ட ரீதியிலான வரம் இத்தீர்மானத்துக்கு உடந்தையான காரணங்களாகவிருந்தன.

207 மைல் நீளமான மஹாவலி நதி இலங்கையின் ஈரலிப்பு மற்றும் வரண்ட வலயங்களை மேவுகிறது. 1970 ஆம் ஆண்டுகளில் துரித மஹாவலித் திட்டத்துடன் தொடர்புபட்ட ஒன்பது கருத்திட்டங்களுக்கு யூஎஸ்எய்ட் உதவியளித்தது.

துரித மஹாவலித் திட்டம்
யூஎஸ்எய்ட் உதவி வழங்கிய கருத்திட்டங்கள்

- மஹாவலி விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்தி.
- மஹாவலி தொட்டி அபிவிருத்திக் கட்டம் I மற்றும் II.
- மஹாவலி நதி நீர்ப்பாசனம்.
- மஹாவலி தொழில்முயற்சி அபிவிருத்தி.
- மஹாவலி சுற்றாடல் கருத்திட்டம்
- மஹாவலி துறைசார்ந்த உதவி.
- பண்ணையில் நீர் முகாமைத்துவம்.
- மீள் வன நடுகை மற்றும் நீரோட்டப் பிரதேச முகாமைத்துவம்

கை இயக்க ஜல சூத்திரங்கள்

திறந்த கிணறுகளுக்காக யூஎஸ்எய்ட்டின் கை இயக்க ஜல சூத்திரங்களை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மிகத் தோதானதொரு நாடு என 1979 இல் காணப்பட்டது. கிராமிய ஜனத்தொகை மிகப் பரந்து வாழ்வதால் குழாய் மூலம் நீர் வழங்கும் திட்டங்கள் சிக்கனமாக இருக்காது என்ற காரணத்துக்காகப் பாரிய அளவில் கை இயக்க ஜல சூத்திரங்களை நிறுவுவதற்கு ஏற்றதாக குறிப்பாக இலங்கை விளங்கியது. புற காரணிக-ளால் மாசடைவதைத் தடுப்பதற்காக அடைக்கப்பட வேண்டிய கிணறுகள் அதிக எண்ணிக்கையில் இருப்பதும் இதற்கானதொரு காரணமாகும்.

1980 ஆம் ஆண்டுகளில், ஐந்து மாவட்டங்களில் 79 ஜல சூத்திரங்கள், 39 அமைவிடங்களில் பொருத்தப்பட்டன.

கை இயக்க ஜல சூத்திரங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு தொழில்நுட்பத்துக்கான ஜோர்ஜியா நிறுவனத்தை யூஎஸ்எய்ட் கேட்டுக் கொண்டது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மிகக் குறைந்த விலையில் தரமான ஜல சூத்திரங்களை உற்பத்தி செய்யக் கூடிய திறனைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். அலகொன்றின் விலை 149 டொலராக இருந்தது. அதற்கு நிகராக ஒப்பிடக் கூடிய அமெரிக்கத் தயாரிப்பின் விலை 350 டொலர் விலை என்பதால், அது ஒரு பாரிய மிச்சப்படுத்தலாக இருந்தது.

எனவே, 90 கை இயக்க ஜல சூத்திரங்களின் உற்பத்திக்கான தொழில்நுட்பட உதவியை வழங்குமாறும் உற்பத்தி மற்றும் பொருத்தலை மேற்பார்வை செய்யுமாறும் ஜல சூத்திரங்களின் திறனையும் பாவனையாளர்கள் அதனை ஏற்றுக் கொள்வதை மதிப்பீடு செய்யுமாறும் தொழில்நுட்பத்துக்கான ஜோர்ஜியா நிறுவனத்தை யூஎஸ்எய்ட் கேட்டுக் கொண்டது.

கிணறுகளை மாசடையா வண்ணம் மூடுவது மற்றும் சூத்திரங்களைப் பொருத்தல் தொடர்பாக எவ்வித பிரச்சினையும் இன்றி யூஎஸ்எய்ட் இன் கை இயக்க ஜல சூத்திரங்கள் கிராமிய மக்களால் அமோகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இக்கருத்திட்டத்தின் வெற்றி பற்றிய செய்தி தீவிரமாகப் பரவியதோடு, ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகவும் இந்த ஜல சூத்திரங்களைப் பெற்றுக் கொள்ள திட்ட அமுலாக்கல் அமைச்சு நடவடிக்கை எடுத்தது.

1980ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில், சமசிறி ஹல்லர் உற்பத்தியாளர் 45 ஆழமற்ற மற்றும் 45 ஆழமான கிணறுகளுக்கான கை இயக்க ஜல சூத்திரங்களை உற்பத்தி செய்தது. இலங்கை அரசாங்கத்தினால் இனங்காணப்பட்ட 39 அமைவிடங்களில் எழுபத்து ஒன்பது ஜல சூத்திரங்கள் பொருத்தப்பட்டன. இவ்வமைவிடங்கள் களுத்துறை, அம்பாந்தோட்டை, கண்டி, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களை மேவியது.

பொதுவான செயற்பாட்டுத் திறனுக்காக கை இயக்க ஜல சூத்திரங்கள் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டதோடு ஒவ்வொரு அமைவிடத்திலும் நீரின் தன்மை பரீட்சிக்கப்பட்டது.

சீரற்ற பொருத்தல், பேனல் அல்லது பழுது பார்த்தல் நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகள், மேலதிக அமைவிட பயிற்சி மூலம் இலங்கை அரசாங்கத்தின் பேனல் கட்டமைப்பின் சகல மட்டங்களினாலும் தீர்க்கப்பட்டன.

கிணறுகளை மாசடையா வண்ணம் மூடுவது மற்றும் சூத்திரங்களைப் பொருத்தல் தொடர்பாக எவ்வித பிரச்சினையும் இன்றி யூஎஸ்எய்ட் இன் கை இயக்க ஜல சூத்திரங்கள் கிராமிய மக்களால் அமோகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இக்கருத்திட்டத்தின் வெற்றி பற்றிய செய்தி தீவிரமாகப் பரவியதோடு, ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காகவும் இந்த ஜல சூத்திரங்களைப் பெற்றுக் கொள்ள திட்ட அமுலாக்கல் அமைச்சு நடவடிக்கை எடுத்தது.

கிராமிய நீர் பற்றிய அதன் பத்து வருடத் திட்டத்தை அமுலாக்குவதற்கும் இலங்கை அரசாங்கத்துக்கு யூஎஸ்எய்ட் கை இயக்க ஜல சூத்திரத் திட்டம் அனுமதி வழங்கியது.

சனத்தொகை செறிவுள்ள பிரதேசங்களுக்கு குழாய் மூலம் நீர் வழங்கும் நீண்ட கால திட்டங்களை அரசாங்கம் தயாரிக்கும் அதே வேளை, கை இயக்க ஜல சூத்திரங்களைப் பொருத்துவது உடனடித் தாக்கத்தை ஏற்படுத்த உதவியது.

USAID FROM THE AMERICAN PEOPLE

உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாத்தல்

உலகில் வேறெங்கும் காணப்படாத பல இனங்களை உள்ளிட்ட செறிவுள்ளதொரு தாவர மற்றும் வன இனங்களின் தொகுதியொன்றை இலங்கை கொண்டுள்ளது. 1970 ஆம் தசாப்தத்தின் ஆரம்பத்தில், சர்வதேச உதவி வழங்குவோர் ஆதரவுடன், இலங்கை அரசாங்கம் மஹாவலி ஆற்றுப் பள்ளத்தாக்கு நீர்ப்பாசனத் திட்டத்தை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்தது. இத்திட்டக் கட்டமைப்பின் பெரும்பகுதிக்கான நிதியை உலக வங்கியும் உதவி வழங்குவோரும் அளித்ததோடு, புதிதாக நீர்ப்பாசனம் வழங்கப்பட்ட பிரதேசங்களில் விவசாய உற்பத்தித் திட்டங்களை சீர்திருத்துவதற்கு யூஎஸ்எய்ட் உதவி வழங்கியது.

விவசாய உற்பத்திக்கான சீர்திருத்தங்கள் மற்றும் அதிகரித்த நீர் மின்சாரம் ஆகியவற்றுடன் மஹாவலித் திட்டம் இலங்கையின் பலதரப்பட்ட தாவரங்கள் மற்றும் வனவிலங்குகளைப் போசித்த சூழவுள்ள வாழ்க்கைச் சுற்றாடலைப் பெரிதும் மாற்றியமைத்தது.

அநேகமான தாழ்ந்த பிரதேசங்கள் நீரைக் களஞ்சியப்படுத்துவதற்காக அல்லது நீர்ப்பாசன விவசாயத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், அங்கிருந்த வன விலங்குகள் ஏற்கனவே வன விலங்குகளினால் நிரம்பியிருந்த மலைப் பிரதேசங்களுக்குப் பின்வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மஹாவலிப் பிரதேசங்களில் பெருகி வரும் சனத்தொகை காரணமாக இக்காட்டுப் பிரதேசங்களும் இப்போது குன்றி வருகின்றன.

இத்திட்டத்தினுள் பாதுகாக்கப்பட்ட வனவிலங்குப் பூங்காக்களையும் ஒதுக்குகளையும் கொண்டதொரு திட்டத்தை ஏற்படுத்தி முகாமைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவி அளிப்பதற்காக 1982 ஆம் ஆண்டில் 10-வருட கால மஹாவலிச் சுற்றாடல் கருத்திட்டத்தை யூஎஸ்எய்ட் ஆரம்பித்தது. எஞ்சியிருக்கும் இவ்வனப் பிரதேசங்களில் பயிர் விளைத்தல், மிருகங்களை மேயவிடல், மரம் தறித்தல் மற்றும் வேட்டையாடல் நடவடிக்கைகள் வியாபிப்பதை நிறுத்தி நாட்டின் ஈடுசெய்ய முடியாத உயிரியல் வளங்கள் தொடர்ந்தும் இல்லாதொழிதலை தடுத்து நிறுத்த இக்கருத்திட்டம் நாடுகிறது.

யூஎஸ்எய்ட் உதவியளிக்கும் தேசியப் பூங்காக்கள்

மஹாவலிச் சுற்றாடல் கருத்திட்டத்தின் கீழ் எழு பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் நிறுவப்பட்டன:

வெள்ளப்பெருக்குத் திறந்தவெளி தேசியப் பூங்கா	17,350 ஹெக்டெயர்
மாதுரு ஓயா தேசியப் பூங்கா	58,850 ஹெக்டெயர்
சோமாவதிய தேசியப் பூங்கா	37,762 ஹெக்டெயர்
வஸ்கொமுவ தேசியப் பூங்கா	37,063 ஹெக்டெயர்
மின்னேரிய-கிரிதலே இயற்கை ஒதுக்குகை	42,000 ஹெக்டெயர்
திருகோணமடு இயற்கை ஒதுக்குகை	25,019 ஹெக்டெயர்
விக்டோரியா – ரன்தெனிகல – ரன்தம்பே பாதுகாப்பு ஒதுக்குகை	41,600 ஹெக்டெயர்

மஹாவலி சுற்றாடல் கருத்திட்டமானது, கிராமிய அபிவிருத்தித் திட்டமொன்றினுள் உயிரியல் பன்முகத்தன்மையைப் பேணுவதை உட்படுத்துவதற்காக யூஎஸ்எய்ட் மேற்கொண்ட ஆரம்பகால

இலங்கையில் அதிக எண்ணிக்கையாகக் காணப்படும் யானைகளைத் தேசியப் பூங்காக்கள் பாதுகாக்கின்றன.

முன்னெடுப்பாகும். பகிரங்கமாக இனங்காணப்பட்ட எல்லைகளினுள் ஏழு பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை ஏற்படுத்துவதற்கு மஹாவலி சுற்றாடல் கருத்திட்டம் இலங்கை அரசாங்கத்துக்கு உதவியது. இந்நடவடிக்கை இலங்கையின் உயிரியல் பன்முகத்தன்மையைப் பேணுவதற்காக எடுக்கப்பட்ட முதலாவது முக்கிய செயற்பாடாகும். இப்புதிய பிரதேசங்கள் இலங்கையின் தற்போதுள்ள பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் 30 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதோடு அவை மஹாவலித் தொட்டியின் சுமார் 45 சதவீதப் பிரதேசத்தைக் கொண்டதாகும். இக்குறித்துரைக்கப்பட்ட பாதுகாப்புப் பிரதேசங்களுள் மனிதக் குடியேற்றங்கள் மற்றும் பயிர்ச்செய்கை நிறுத்தப்பட்டது, இலங்கையின் வாழ்க்கைச் சுற்றாடலைப் பாதுகாப்பதில் யூஎஸ்எய்ட் வழங்கிய உதவியின் மிக வெளிப்படையான தாக்கமாக அமைந்தது.

இந்த மஹாவலிச் சுற்றாடல் கருத்திட்டம் 1991 ஆம் ஆண்டில் முடிவுற்றபோதிலும், பின்னர் மேற்கொண்ட முன்னெடுப்புக்கள் மூலமாக யூஎஸ்எய்ட் தொடர்ந்தும் உயிரியல் பன்முகத்தன்மைக்கு ஆதரவு வழங்கி வந்துள்ளது. 1990 இல் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றாடல் கொள்கைக் கருத்திட்டத்தை யூஎஸ்எய்ட் ஆரம்பித்தது. அரசாங்கத்துக்கிடைப்பட்ட சுற்றாடல் அலகுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் மற்றும் இலங்கையில் வன அத்துடன் கடல் சார்ந்த வன விலங்குப் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கும் விதத்தில் உதவியை விரிவுபடுத்துவது இதன் நோக்காகவிருந்தது.

விவசாயக் கல்வி அபிவிருத்தி

1975க்கு முன், பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாயப் பீடம், சிறிய, எளிய உபகரணங்களைக் கொண்ட கல்விமான்கள், ஆண்டுதோறும் 100 விஞ்ஞானப் பட்டதாரி-களை உற்பத்தியாக்கும் ஒரு இடமாகவே காட்சியளித்தது. இலங்கையில் விவசாயத்தை சீர்திருத்துவதற்காக, 1975 இல் விஞ்ஞான முதுமாணி, சித்தாந்த முதுமாணி மற்றும் தத்துவஞானக் கலாநிதிப் பட்டங்களை வழங்குவதற்காகப் பட்டத்துக்குப் பிந்திய விவசாய நிறுவனம் (PGIA) நிறுவப்பட்டது.

உள்நாட்டிலேயே பட்டத்துக்குப் பிந்திய பட்டதாரிகளை உருவாக்குவதற்காக, பீஜீஐஏ மற்றும் விவசாயப் பீடத்தின் திறனை மேம்படுத்துவதை நோக்காக் கொண்டு, 1978 இல் விவசாயக் கல்வி அபிவிருத்திக் கருத்திட்டத்தை யூஎஸ்எய்ட் மேற்கொண்டது. பட்டத்துக்குப் பிந்தியப் பட்டப் படிப்புக்கான பொதுவான வசதிகளை பீஜீஐஏ மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் பகிர்ந்து கொள்கின்றன. இக்கொள்ளளவை மேம்படுத்துவதன் பொருட்டு, உயர் பட்டங்களைப் பெறுவதற்காக மாணவர்கள் மூன்று அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு மாணவர்கள் பெனிசில்வேனியா மாநிலப் பல்கலைக்கழகம், விர்ஜீனியா பொலிடெக்னிக் நிறுவனம் மற்றும் மாநில பல்கலைக்கழகம், அத்துடன் டெக்ஸாசிலுள்ள ஏ அண்ட் எம் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

இவர்களுக்கான செலவு அனைத்தையும் யூஎஸ்எய்ட் ஏற்றுக் கொண்டது. மாணவர்கள் தம் புறச் செயற்பாடுகளை இலங்கையில் மேற்கொள்ள வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டதோடு, அவர்கள் நாடு திரும்பியதும் பீஜீஐஏ இல் அவர்களுக்கு பீட நியமனம் ஒன்றும் வழங்கப்பட்டது. இவ்வாறு மொத்தம் 39 மாணவர்கள் அனுப்பப்பட்ட போதிலும், அவர்கள் வெளிநாட்டில் இருந்த போது இலங்கையில் ஏற்பட்ட இன மோதல் காரணமாக 14 பேர் நாடு திரும்பவில்லை.

1970 ஆம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் கருத்திட்டத்தின் ஊழியர்களின் செயலாற்றலை அதிகரிப்பதற்காக பீஜீஐஏக்கு உழவு இயந்திரங்களையும் ஏனைய சாதனங்களையும் யூஎஸ்எய்ட் வழங்கியது. தொழில் நுட்ப உதவியும் வழங்கப்பட்டது.

"கருத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு எங்களுக்குத் தேவையான உந்துதலை யூஎஸ்எய்ட் வழங்கியது." – கலாநிதி ரபெல் தட்டில். பி.எச்.டி.

தெரிவு செய்யப்பட்ட 39 மாணவர்களுள் ஒன்பது பேர் பெண்களாவர். நாடு திரும்பியவர்களுள், 23 பேர் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றதோடு இருவர் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தைச் சம்பாதித்துக் கொண்டனர். மேலும் ஐவர் பட்டம் சாராத தொழில்நுட்பப் பயிற்சியைப் பெற்றனர். இந்த விவசாயக் கல்வி அபிவிருத்திக் கருத்திட்டம் பணியாட்டொகுதியினரின் திறமைகளை மேம்படுத்துவதற்காக பீஜீஐஏக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால தொழில்நுட்ப உதவியையும் வழங்கியது.

பீஜீஐஏவுக்கு சிறந்த சாதனங்களை வழங்குமுகமாக, கணனிகள், ஆய்வுகூட உபகரணங்கள், ஜீப் வண்டிகள் மற்றும் உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. புத்தகசாலையின் தரத்தை மேம்படுத்துவதற்காக புத்தகங்கள், சஞ்சிகைகள் மைக்ரோபிச் ஆகியவை வழங்கப்பட்டன. இக்கருத்திட்டம் 1986 இல் முடிவுற்றது.

பீஜீஐஏ இன் தற்போதைய பணிப்பாளர், ரபெல் ஓ.தட்டில், விர்ஜீனியா தொழில்நுட்ப நிறுவனத்தில் மற்றும் மாநிலப் பல்கலைக்கழகத்தில் இருந்து தத்துவஞானக் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர்களுள் ஒருவராவார். மாணவர்கள் திரும்பி வந்து பீடத்தில் சேர்ந்ததும் அவர்களால் பீஜீஐஏ இன் தரத்தை உயர்த்த முடிந்தது என அவர் குறிப்பிட்டார்.

தெரிவு மூலம் அல்லாது நியமன மூலமாக பீடாதிபதியையும் பிரிவுகளின் தலைவர்களையும் தெரிவு செய்யும் முறையையும் அவர்கள் சீர்திருத்தினர். அவர்களின் தலைமையின் கீழ் இப்போது பீஜீஐஏ வளர்ச்சியடைந்து 1,000 விண்ணப்பதாரிகளுள் ஆண்டொன்றுக்கு 450 மாணவர்களை அது தெரிவு செய்கிறது. பீஜீஐஏ நிறுவனத்துக்கு யூஎஸ்எய்ட் வழங்கிய பங்களிப்புப் பற்றி கலாநிதி தட்டில் வெகுவாக மெச்சிக் கருத்துத் தெரிவித்தார். 'யூஎஸ்எய்ட் உதவி இன்றேல், இவ்வளவு தூரத்துக்கு பீஜீஐஏ வளர்ச்சியடைந்திருக்காது" என அவர் குறிப்பிட்டார்.

USAID FROM THE AMERICAN PEOPLE

அரிசி ஆராய்ச்சி

இலங்கையில் அரிசி ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியில் பெறுமதி மிக்கதொரு பங்களிப்பை யூஎஸ்எய்ட் வழங்கியுள்ளது. 1977 முதல் 1984 ஆண்டு வரையிலான அரிசி ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் மூலம் முன்னேறிய அரிசி வகைகளை மேலும் அபிவிருத்தி செய்து பிரயோகிப்பதைத் துரிதப்படுத்தவும் புதிய பயிர்ச்செய்கைத் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்யவும் விவசாயத் திணைக்களத்துக்கு யூஎஸ்எய்ட் உதவி அளித்தது.

உற்பத்தி மற்றும் ஆராய்சித் தொழில்நுட்பம், கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றுக்கான தொழில்நுட்ப உதவிக்குக் கருத்திட்டம் நிதியளித்ததோடு, ஆராய்ச்சிப் பண்ணைகளின் உற்பத்திக்காகப் பண்டங்களையும் வழங்கியது.

அரிசி ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் நேரடி விளைவாக, ஐந்து புதிய அரிசி வகைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன. பூச்சிகள் மற்றும் நோய்களுக்கான தடுப்புச் சக்தியுள்ளதும் வேறுபட்ட பிரதேசங்களின் சீதோஷ்ண மற்றும் புவியியல் குணாதிசயங்களுக்கு ஏற்றதாகவும் புதிய வகைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இலங்கை கிட்டத்தட்ட அரிசியில் தன்னிறைவு அடையும் அளவுக்கு இப்புதிய வகைகள் உற்பத்தியைப் பெருக்கின. இக்கருத்திட்டக் காலப்பகுதியில், இலங்கையில் அரிசி உற்பத்தி மதிப்பிட்டளவில் 70 சதவீத தன்னிறைவு நிலையில் இருந்து 90 சதவீத தன்னிறைவை அடைந்தது.

சில பிரதேசங்களில் தீவிரப் பயிர் நடுகைக்கு வழிவகுத்த உற்பத்தித் தொகுதிகளையும் இக்கருத்திட்டம் அபிவிருத்தி செய்தது. இச்செயற்பாடு விவசாய உற்பத்தியில் நேரடிப் பயனை ஏற்படுத்தியதோடு விவசாய விஞ்ஞானிகள், பொருளியலாளர்கள், விஸ்தரிப்பு அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கிடையே கலந்துரையாடலை ஊக்குவிப்பதன் மூலம் ஆராய்சித் திட்டத்தின் பயனுறு தன்மையையும் மேலோங்கச் செய்தது.

அரிசி ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் கீழ், 158 பேர்களுக்கு, 33-நீண்ட கால மற்றும் 125 குறுகிய கால பயிற்சியும் வழங்கப்பட்டது. தம் பயிற்சியை முடித்துக் கொண்டதும், அரிசி மற்றும் ஏனைய பயிர்கள் பற்றிய ஆராய்சியை மேற்கொள்ளும் 20 ஆராய்ச்சி நிலையங்களுக்கு இந்த ஆராய்ச்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

மரபுரிமை அணு மதிப்பீடு மற்றும் உபயோகத் திட்டத்தையும் இக்கருத்திட்டம் வழங்கிய தொழில்நுட்ப உதவியும் பயிற்சியும் வலுவடையச் செய்தன. ஆராய்ச்சிக்கான அணுகுமுறையைப் பன்முகப்படுத்துவதன் மூலம் மிகப்பயனுறு விதத்தில் துறைகளுக்கிடையிலான அரிசி ஆராய்ச்சி செயற்பாட்டுக் குழுவினை இக்கருத்திட்டம் ஒழுங்கு செய்தது. இந்த அரிசி செயற்பாட்டுக் குழு மிகத் திறமையுடன் அதன் நடவடிக்கைகளை மேற்கொண்டதால், அரிசி ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் நன்மைகளைப் பெருக்கும் விதத்தில் இந்த மனவுரு ஏனைய பயிர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

1970 ஆம் ஆண்டுகளின் பிந்திய பகுதியில், படலந்த அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் மாணவர்கள் ஆய்வு நாட்டுப் பண்ணையொன்றைப் பராமரிக்கின்றனர்.

குடும்ப சுகாதாரமும் வருவாய் உற்பத்தியும்

வழக்கப்படி, இலங்கையில் கிராமியப் பெண்கள் ஆண்களை விடக் கல்வி மற்றும் தொழில்வாய்ப்புகளைப் பெறுவதற்கான குறைந்த வாய்ப்புகளுடன் முடங்கி வாழ்வதோடு வீட்டில் அவர்கள் செய்யும் வேலை மதிக்கப்படுவதுமில்லை. ஆயினும், தம் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தில் முக்கிய ஆதிக்கத்தை அவர்கள் செலுத்துவதோடு தம் குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுக்காக அவர்கள் தம் வருமானத்தை விவேகமாகப் பாவிக்கிறார்கள். 1980 மற்றும் 1982 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில், குடும்பச் சுகாதாரம் மற்றும் வருமானம் பற்றி நடவடிக்கை எடுப்பதற்காக பெண்களுடன் இணைந்து செயற்படுவதற்கானதொரு திட்டத்துக்கு யூஎஸ்எய்ட் நிதியுதவி அளித்தது. இக்காரணிகளுக்கிடையே நெருங்கிய தொடர்பிருப்பதும் இவ்விரு துறைகளிலும் பெண்களுக்குப் பாரிய பங்களிப்பு உள்ளதாலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கிராமப்புறங்களில் விஸ்தரிப்புச் சேவைகளை வழங்குவதற்கான அரசாங்க அபிவிருத்தி அலுவலர்களின் திறமைகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் குறைந்த வருமானம் பெறும் கிராமியப் பெண்களை வருவாய் உற்பத்தி அத்துடன் சுகாதார நடவடிக்கைக-ளில் ஈடுபடுத்துவதை இக்கருத்திட்டம் நோக்காகக் கொண்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் பெண்கள் பணியகத்தினால் அது அமுல் செய்யப்பட்டதோடு அதற்கான தொழில்நுட்ப உதவியை வொசிங்டன் டி.சியிலுள்ள வெளிநாட்டுக் கல்வி நிதியம் வழங்கியது.

அபிவிருத்தி அலுவலர்கள் கலைப் பட்டதாரிகள் என்பதோடு அந்தப் பதவி நிலைகள் முக்கியமாக தொழிலற்ற பிரச்சினைகள் காரணமாக ஏற்படுத்தப்பட்டன. அவர்களுள் அநேகர் ஆண்களாவர். பெண்கள் பணியகம் வழங்கிய இப்பயிற்சியே அநேகமான அபிவிருத்தி அலுவலர்கள் பெற்ற மனைசார்ந்த பயிற்சியாகும்.

> *"கிராமியப் பெண்களை அபிவிருத்தியில் ஒன்றிணைப்ப" தற்கான பெண்கள் பணியகத்தின் வீரிவான திட்டத்துக்கு யூஎஸ்எய்ட் இன் கிராமியப் பெண்களுக்கான குடும்ப சுகாதாரம் மற்றும் வருமான உற்பத்தியை சீர்திருத்துவதற்கான விஸ்தரிப்புச் சேவைகள் கருத்திட்டம் இயைவாக இருந்தது.*

ஒன்பது கற்கை நெறிகள் நடாத்தப்பட்டதோடு, அவற்றின் மூலம் மொத்தம் 92 அபிவிருத்தி அலுவலர்கள் பயிற்றப்பட்டார்கள். முறைசாராத கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி பற்றிய அடிப்படைத் திறன்களை மேம்படுத்துவதை |ஆம் கட்ட ஒரு-மாத மனைப் பயிற்சி உள்ளடக்கியது. கிராம மட்டத்தில் முன்னோடி நடவடிக்கைகளை ஆராய்வதிலும் அது ஈடுபட்டது. திட்டமிடல், குழுக்களாகச் சேர்ந்து செயற்படல், கேள்விகளைத் தொடுத்தல் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தல், முறைசாராத கல்வி அணுகுமுறைகளைப் பிரயோகித்தல், பிரதேச வளங்களைச் செயற்படுத்தல், மதிப்பிடு செய்தல் மற்றும் கற்பிப்பதற்கான உபகரணங்களை உற்பத்தி செய்தல் போன்ற துறைகளில் தம் திறன்களை இக்கற்கை நெறிகளில் கலந்து கொண்டோர் மேம்படுத்தினர். அபிவிருத்தி அலுவலர்களின் மேற்பார்வையாளர்களான உதவி அரசாங்க அதிபர்கள் 52 பேருக்கான இரண்டு நாள் பட்டறையொன்றும் கட்டம் I க்கு உட்படுத்தப்பட்டது.

மென்மையான விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் இவர்களைப் போன்ற இலங்கைப் பெண்கள் யூஎஸ்எய்ட் குடும்ப சுகாதார திட்டத்தின் உதவியுடன் வருமானத்தை ஈட்டியதுடன் சமுதாயத்தில் தமது மரபுரீதியான பங்கையும் நிறைவேற்றினர்.

II ஆம் கட்டத்தில் அபிவிருத்தி அலுவலர்கள் இன்னுமொரு ஒரு மாத வதிவிடப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். அதன் மூலம் சுகாதாரம் மற்றும் வருவாய் உற்பத்தி தொடர்பான தொழில்நுட்பத் துறைகளை அத்துடன் முறைசாராத கல்வியுடன் எவ்வாறு தொழில்நுட்ப அடக்கத்தை ஒன்று சேர்க்கலாம் என்பவற்றை வலியுறுத்தியது. கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்பு, செடி வளர்ப்பு, தும்பு உற்பத்தி, வாழை பயிரிடல், பன்றி வளர்த்தல் மற்றும் சோயா பயிர்ச் செய்கை போன்ற துறைகளில் தம் திறமையைக் கட்டியெழுப்பினர்.

II ஆம் கட்டத்தை அடுத்து, சிறிய அளவிலான கருத்திட்டங்களில் கிராமப் பெண்களுடன் சேர்ந்து இந்த அலுவலர்கள் தாம் புதிதாகக் கற்ற திறன்களை செயற்படுத்தினர். சுகாதாரம் மற்றும் / அல்லது வருவாய் உற்பத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக புறச்செயற்பாடுகளுக்கு அவர்களுக்கு சுமார் 7 மாத அவகாசம் இருந்தது. தம் மாவட்டங்களில் சேவை செய்யும் பதவிகளில் அபிவிருத்தி அலுவலர்கள் ஏற்கனவே இருந்ததால், தாம் கடமை புரியும் இடங்களில் புதிய முறைகளைச் செயற்படுத்தும் வாய்ப்பாக இப்புறச் செயற்பாடு அமைந்திருந்தது.

இப்பயிற்சியின் நேரடி விளைவாக, 3,000 க்கும் அதிகமான கிராமியப் பெண்களின் பங்களிப்புடன் கிராமிய மட்டத்தில் 2,000 க்கும் மேற்பட்ட சுகாதார மற்றும் வருவாய் உற்பத்திக் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அடிமட்ட அபிவிருத்தித் தொழிலாளிகளுக்குப் புதுமையான பயிற்சித் திட்டமொன்றையும் இக்கருத்திட்டம் அபிவிருத்தி செய்தது. இந்நடவடிக்கையை இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் தொடர்வதற்காக சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பயிற்சிக் கைநூல் ஒன்று பிரசுரிக்கப்பட்டது.

USAID FROM THE AMERICAN PEOPLE

சுகாதாரத் துறைகள் பற்றிய தேசிய நிறுவனம்

1980 இல் இருந்து 1987 வரை, இலங்கையின் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்காக தேசிய சுகாதாரத் துறைகள் பற்றிய நிறுவனத்தின் கொள்ளளவை அதிகரிப்பதற்காக பல உதவி வழங்குவோர் கலந்து கொண்ட கருத்திட்டமொன்றில் யூஎஸ்எய்ட் பங்கெடுத்துக் கொண்டது.

இலங்கையின் சுகாதார விநியோகத் திட்டங்கள் மற்றும் சுற்றாடல் சுகாதாரம் ஆகியவற்றை சீர்திருத்துவதற்காக சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களின் எண்ணிக்கையையும் தரத்தையும் மேம்படுத்துவதற்காக சுகாதார அமைச்சும் சுகாதாரத் துறைகள் பற்றிய தேசிய நிறுவனமும் இணைந்து இக்கருத்திட்டத்தை அமுல் செய்தன.

சுகாதாரத் துறைகள் பற்றிய தேசிய நிறுவனத்தின் பௌதிக வசதிகளை விசாலிப்பது யூஎஸ்எய்ட்டின் பங்களிப்பாக இருந்தது. ஆரம்ப ஒப்பந்தம் பின்வரும் கட்டிடங்கள் மற்றும் வசதிகளை களுத்துறையில் அமைப்பதை உள்ளடக்கியது. அவை பூரணப்படுத்தப்பட்டு சுகாதாரத் துறைகள் பற்றிய தேசிய நிறுவனத்துக்கு 1986 இல் கையளிக்கப்பட்டன.

போதனா கட்டிடம், நூலகம், கேட்போர் கூடம், ஆய்வு கூடம், உண்டிச்சாலை, கூரை சகிதம் வாகனம் நிறுத்துமிடங்கள், பேணல் வேலைத்தலங்கள் மற்றும் வாகனம் பழுது பார்க்குமிடங்கள், மின்உற்பத்தி அறை, பாதுகாப்புக் கூடங்கள், கூரை சகிதம் நடைபாதைகள், ஜல சூத்திர அறை, குழாயமைப்பு மற்றும் இயந்திரம் பொருத்தல் அத்துடன் தொலைத்தொடர்புத் திட்டம், மேற்பரப்பு வடிகால் அமைப்பு, வீதிகள், நடைபாதைகள், வாகனம் நிறுத்தும் இடங்கள், உடைத்தல் மற்றும் புவியலங்காரம்.

ஆரம்பத்தில் கருத்திட்டம் சில பின்னடைவுகளை எதிர்கொண்ட போதிலும், அவை கால அட்டவணைக்கேற்ப வேலையை முடிப்பதைத் தடை செய்யவில்லை என்பதோடு எதிர்பாராததொரு நன்மையையும் அது வழங்கியது. வெளிநாட்டுச் செலாவணி வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக ஒப்பந்தத்துக்குக் கிட்டிய கணிசமான செலவு மிச்சப்படுத்தலும் கட்டிடக் கைத்தொழிலில் ஏற்பட்ட முன்னேறிய போட்டாபோட்டியிடும் தன்மையும் இத்தாமதங்களால் கிடைத்த நன்மைகளாகும். பாரிய திட்டத்தில் காட்டப்பட்டிருந்து ஆயின் ஆரம்ப நிர்மாணத் திட்டத்துக்கு உட்படுத்தப்படாத பெண்கள் விடுதிக் கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கான நிதியை இச்சேமிப்புக்கள் வழங்கின. இப்பெண்கள் விடுதிக் கட்டிடம் 1987 ஆரம்பத்தில் முடிக்கப்பட்டது.

1986 இல் சுகாதாரத் துறைகளின் தேசிய நிறுவனத்தின் விஸ்தரிப்புக்கு யூஎஸ்எய்ட் உதவியது.

குறைந்த வருமான வீடமைப்பு

யூஎஸ்எய்ட் இன் குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புத் திட்டம் 1981 இல் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்துக்கு வீடமைப்புக் கடன் உத்தரவாதங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கான வீடமைப்பு உத்தரவாதத் திட்டம் அனுமதிக்கப்பட்ட பின் இது ஆரம்பிக்கப்பட்டது. ஒப்பந்தக்காரர்களினால் கட்டப்படுவதற்கு மாறாக அனுசரணையுடனான சுய உதவித் திட்டத்தின் கீழ் அரசாங்கம் அதன் கிராமிய வீடமைப்புத் திட்டத்தை முழுமையாக மாற்றியமைத்திருந்தது. பின்பு, 1982 இல் பத்து இலட்சம் வீடுகள் திட்டம் என்றழைக்கப்பட்ட தீவிர பன்முகப்படுத்தப்பட்ட முன்னேறிய திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

மட்டுப்படுத்தப்பட்ட அரசாங்க உதவியுடன் குறைந்த வருமானம் பெறும் கிராமியச் சமூகங்கள் தமது வீடுகளைத் தாமாகவே கட்டிக் கொள்ளும் அமைப்பை கொண்ட கிராமிய வீடமைப்பு முன்னெடுப்பாக அனுசரணையுடனான சுய உதவித் திட்டம் அமைந்தது. நகரப்புற சேரிக் குடியிருப்பாளர்கள் தம் வீடுகளின் தரத்தை மேம்படுத்தி சமூக அபிவிருத்தி அத்துடன் சமூக சேவைகள் வேலைத் திட்டங்களைப் பலப்படுத்துவதற்காக சேரி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டமொன்றும் வடிவமைக்கப்பட்டது. பகிரங்க மற்றும் தனியார், எளிய மற்றும் விலை உயர்ந்த, கிராமிய மற்றும் நகர்ப்புற சகல வீடமைப்புத் திட்டங்களையும் இந்த பத்து இலட்சம் வீடுகள் திட்டம் மேவியது.

இலங்கை அரசாங்கத்தின் பல்வேறு வீடமைப்புத் திட்டங்களின் குறைந்த வருமான வீடமைப்பு வகுதிகளுக்கு யூஎஸ்எய்ட் வீடமைப்பு உத்தரவாதத் திட்டம் ஆதரவு அளித்தது. கடன்களுக்கான உத்தரவாதங்களை வழங்குவதன் மூலம் இத்திட்டங்களின் மூலதனச் செலவுகளை ஈடு செய்ய யூஎஸ்எய்ட் உதவியது. அவற்றின் திறமைகளை நேர்த்தியாக்கி வஸ்தீரணப்படுத்துவதற்கான, வீடமைப்புக் கடன் வங்கி அமைப்பு ஒன்று போன்ற புதிய மனவுருக்களை அரசாங்கத்துக்கு அறிமுகப்படுத்துவதற்கு அத்துடன் தனியார் துறை கட்டிட நடவடிக்கைகளைத் தூண்டுவதற்கான தொழில்நுட்ப உதவியும் வழங்கப்பட்டது.

கடன்களுக்கான உத்தரவாதங்களை வழங்குவதன் மூலம் இத்திட்டங்களின் மூலதனச் செலவுகளை ஈடு செய்ய யூஎஸ்எய்ட் உதவியது.

1980 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் யூஎஸ்எய்ட் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட மில்லியன் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் இக்குடும்பங்கள் நன்மையடைந்தன.

இந்த வீடமைப்பு உத்தரவாதத் திட்டம் மூன்று கட்டங்களை கொண்டதாகவிருந்தது - குறைந்த வருமானம் பெறுவோருக்கான கடன்கள், வறிய குடும்பங்களுக்கான மானியங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கான தொழில்நுட்ப உதவி அவையாகும். இலங்கை மத்திய வங்கி கடன் அம்சத்தை அமுல் செய்ததோடு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மான்யம் வழங்கும் அம்சத்தைச் செயற்படுத்தியது. 1985 இல், மஹாவலிப் பிரதேசத்தின் புதிய காணிகளுக்கு இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உதவுவதற்கான மூன்றாம் கட்டம் அனுமதிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டுகளின் கடைசி வரை யூஎஸ்எய்ட் இத்திட்டத்துக்கு ஆதரவு அளித்து வந்தது. 1992 ஒக்டோபரில் இருந்து 1995 டிசம்பர் வரை மாத்திரம் மாதமொன்றுக்கு 113 டொலருக்குக் குறைவான வருமானமுடைய சுமார் 61,500 குடும்பங்களுக்கு வீடமைப்புக்காக நீண்ட கால கடன் வழங்கப்பட்டது. புது வீடுகளை அமைப்பதற்காகவும் தற்போதுள்ள வீடுகளுக்குச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காகவும் மேலுமொரு மிகக் குறைந்த வருமானம் பெறும் 76,055 குடும்பங்களுக்கு மொத்தம் 4.35 மில்லியன் டொலர் தொகையிலான மானியம் வழங்கப்பட்டது. வீடமைப்புக் கடன்களுள் முப்பத்தொரு வீதம் பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

கடன்களைப் பெறுவதற்கு மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களுக்கு மாத்திரம் அரசாங்கம் மான்யங்கள் அல்லது உதவி-களை வழங்க ஆரம்பித்ததானது இத்திட்டத்தின் இன்னுமொரு வெற்றிகரமான அம்சமாகும். ஏனைய சகல குடும்பங்களும் சந்தை விலையில் நிதிகளைப் பெற வேண்டியிருந்தது. உதவி அதிகம் தேவையுள்ள மிகவும் வறியவர்களுக்கு உதவி வழங்குவதற்காக அரிதாயிருக்கும் அரசாங்க நிதிகளைப் பிரயோகிக்க இது வாய்ப்பளித்தது.

வலுச் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்தல்

1983 இல், நாட்டின் வலு வினைத்திறனைக் கட்டியெழுப்புவதற்கான உதவியை இலங்கை அரசாங்கம் யூஎஸ்எய்ட் இடம் கேட்டது. தெற்காசிய பிராந்திய வலு முன்னெடுப்புத் (SARI/Energy) திட்டத்தினூடாக வலு கணக்காய்வுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான பயிற்சித் திட்டமொன்றை யூஎஸ்எய்ட் உருவாக்கியது. 30 பேர்களைக் கொண்ட முதலாவது தொகுதியினர் 1983 டிசம்பரில் பயிற்றப்பட்டதோடு, அதன் பின்னர் வருடம் விட்டு வருடம் இப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சர்வதேச அனுபவத்தை உட்புகுத்துவதற்காக ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் 1999 இல் பாட நெறி புதுப்பிக்கப்பட்டது.

சாரி / வலு ஒரே பார்வையில்

தெற்காசிய பிராந்திய வலு முன்னெடுப்பு (SARI – சாரி) வலு வினைத்திறனை மேம்படுத்தி, மீளப் பாவிக்கக் கூடிய வலுவின் பாவனையை அதிகரித்து அத்துடன் பொருளாதார வளர்ச்சிக்குத் துணையாக இருப்பதற்காக வலுத்துறைக்கு சட்ட மற்றும் மறுசீரமைப்புக்கான தொழில்நுட்ப உதவியை வழங்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் யூஎஸ்எய்ட் இன் பிராந்தியத் திட்டமொன்றாகும். இத்திட்டம் ஆறு செயற்பாட்டு அம்சங்களைக் கொண்டதாகும்: தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி, பிராந்தியப் பங்காளர் தொடர்புகள், வர்த்தக கூட்டமைப்புக்கள், சிறியதொரு மான்யத் திட்டம், வலு புள்ளிவிவரங்கள் மற்றும் தரவு, அத்துடன் மீளப் பாவிக்கப்படக் கூடிய வலு வளம் பற்றிய தரவு என்பன அவையாகும்.

இது மூன்று வாரங்களைக் கொண்ட தீவிர வதிவிடக் கற்கை நெறியாகும். இதில் பங்குபற்றும் அதிகமானோர் உற்பத்திக் கைத்தொழிலில் அல்லது வலு விநியோகத்தர்களுக்கான பொறியியலாளர்களாவர். பயிற்சியின் ஒரு பகுதி புற நடவடிக்கைகளை உள்ளடக்குகிறது. 15 பேர்களைக் கொண்ட இரு குழுக்களாக பங்குபற்றுவோர் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஒரு கம்பனியைக் கணக்காய்வு செய்து, அக்கம்பனிகள் எவ்வாறு அவற்றின் வலு வினைத்திறனை மேம்படுத்தலாம் என்பதற்கான யோசனைகளை முன்வைக்கும். ஒரு வருடம் கழிந்த பின், தமது பரிந்துரைகள் அமுல் செய்யப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்கு பங்குபற்றுவோர் கம்பனிகளுக்கு மீண்டும் விஜயம் செய்வர்.

முதலாவது பயிற்சி முடிந்ததும், அதில் பங்குபற்றியவர்கள் இலங்கை வலு முகாமையாளர் சங்கத்தை (SLEMA) அமைத்தனர். பத்து வருடமாக எஸ்எல்ஈஎம்ஏ பதிவு செய்யப்பட்டதொரு சங்கமாக செயற்பட்டதோடு, 1994 இல் பாராளுமன்றச் சட்ட மூலம் ஒன்றினூடாக கூட்டுச்சேர்க்கப்பட்டு அது அரசாங்க அங்கீகாரத்தையும் சலுகைகளையும் பெறும் வாய்பினைப் பெற்றது. இப்போது எஸ்எல்ஈஎம்ஏ இல் 300 அங்கத்தவர்கள் இருப்பதோடு, அங்கு மூன்று முழு நேர ஊழியர்கள் சேவை புரிகிறார்கள். அதற்கு 17 உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றும் உள்ளது.

அதன் தற்போதைய பணிப்பாளராகிய கலாநிதி திலக் சியாம்பலபிற்றிய ஆரம்பத்தில் தேர்ச்சி பெற்ற குழுவினருள் ஒருவராவார். ஆரம்பத்தில் பயிற்சிபெற்ற பன்னிருவர் இன்று கூட எஸ்எல்ஈஎம்ஏ இன் அங்கத்தவர்களாகவுள்ளனர். அங்கத்தவர்களின் திறமையைக் கட்டியெழுப்பல், பயிற்சிகளை வழங்கல் மற்றும் அங்கத்தவர்களுக்கு ஒப்புவித்தல்களை அளித்தல் ஆகியவற்றில் அவர்கள் கவனம் செலுத்துகின்றனர். தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்துக்கு வலு வினைத்திறன் பற்றிய உசாத்துணையினையும் எஸ்எல்ஈஎம்ஏ வழங்குகிறது.

இலங்கையில் காற்று வலு

யூஎஸ்எய்ட் எஸ்ஏஆர்ஜ/வலு (SARI/Energy) அமைப்பினால் வடிவமைக்கப்பட்ட திட்டமாக ஆரம்பித்த எஸ்எல்ஈஎம்ஏ இப்போது இலங்கையின் தற்போதைய வலு வினைத்திறன் தேவைகள் பற்றி SARI/energy க்கு உசாத்துணை சேவைகளை வழங்குகிறது. பட்டறைகள் மற்றும் ஆலோசனைகள் பற்றிய உசாத்துணையை எஸ்எல்ஈஎம்ஏ வழங்குவதோடு, ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்காக சில சிறிய மானியங்களையும் SARI இடம் இருந்து பெற்றுள்ளது. அத்தோடு யூஎஸ் ஆசிய சுற்றடால் திட்டத்துடன் (USAEP) சேர்ந்து மாநகர சபை சேவைகளில் வலு வினைத்திறன் பற்றி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதில் ஒரு திட்டம், கொழும்பில் தெரு விளக்குகள் வலுக்கணக்காய்வு, நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் கழிவகற்றல் பற்றியதாக இருந்தது. எஸ்எல்ஈஎம்ஏ இலங்கை அரசாங்கத்துடனும் சேர்ந்து செயற்படுவதோடு வலுக் கணக்காய்வாளர்களை அத்தாட்சிப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் புதிய தேவைப்படுத்தலை அமுல் படுத்தவும் அது தெரிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தை நோக்குமிடத்து, எஸ்எல்ஈஎம்ஏ இப்போது கிராமிய வலு சம்பந்தப்பட்ட விடயங்களிலும் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் சூரிய வலு

நீரும் சுகாதாரமும்

1985 – 1991 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆறு வருடகால யூஎஸ்எய்ட் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த கருத்திட்டம் இலங்கை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் செயற்பாட்டை பலப்படுத்துவதாக அமைந்தது. 1975 இல் நிறுவப்பட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களுக்கு, வீடுகளுக்கு மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காக திறமையானதொரு நீர் விநியோக மற்றும் சாக்கடைக் குழாய் வசதிகளை வழங்குவதோடு அத்துறையில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அளிப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது.

பாதுகாப்பான மற்றும் நிலையாக வழங்கப்படும் குடிநீரை அதிகமான மக்கள் பெற்றுக்கொள்வதற்கான நீர் வழங்கல் திட்டங்கள் அத்துடன் போதியளவு சுகாதார வசதிகள் ஆகியவற்றினூடாக இலங்கை மக்களின் சுகாதாரம் மற்றும் மக்களின் சுகதேகியான வாழ்க்கை ஆகியவற்றை மேம்படுத்துவதை இந்த யூஎஸ்எய்ட் கருத்திட்டம் நோக்காகக் கொண்டிருந்தது. மேலும், நீர் சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் அவற்றினால் விளையும் மரணங்களைக் குறைப்பதும் அதன் நோக்கமாயிருந்தது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிறுவக ரீதியிலான அம்சத்தை முழுமையாகக் கட்டியெழுப்புவது மற்றும் சுகாதாரக் கல்வியையும் கிராமிய சுகாதாரச் சேவைகளை சீர்திருத்தும் திட்டமொன்றையும் இக்கருத்திட்டம் உள்ளடக்கியது.

யூஎஸ்எய்ட் தனது நீர் மற்றும் சுகாதார திட்டங்களின் ஒரு பகுதியாக இது பேன்ற மலசலகூடங்களை புனருத்தாபனம் செய்வதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டது.

இக் கருத்திட்டம் பாதுகாப்பான நம்பிக்கையான நீர் விநியோக முறைமைகளை மேம்படுத்த உதவியது.

முன்பு நீர் வழங்கல் வடிகாலமைப்புத் திணைக்களமாக இருந்த அரசாங்க நிறுவனமொன்றை உள்நாட்டு அரசாங்க, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழானதொரு பகிரங்கக் கூட்டுத்தாபனமாக மாற்றுவதன் மூலம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நிறுவப்பட்டது. அதன் ஆரம்ப 10 வருட காலத்தின் போது, புதிய நீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களை அமைப்பதில் அது சிறப்பாகச் செயற்பட்ட போதிலும், செயற்பாட்டு மற்றும் பேணல் அத்துடன் நுகர்வோர் கட்டண ஆவணங்களைத் தயாரிப்பது என்பனவற்றில் அதன் செயற்பாடு திருப்தியளிப்பதாக இருக்கவில்லை.

இத்துறைகளில் திறமையைக் கட்டியெழுப்புவதற்காக, முகாமைத்துவம், வரவுசெலவுத் திட்டத் தயாரிப்பு, மனித வள அபிவிருத்தி, வசதிகளின் முகாமைத்துவம், நடவடிக்கைகள் மற்றும் பேணல் அத்துடன் விசேட சேவைகள் போன்ற துறைகளில் தொழில்நுட்ப உதவியையும் பயிற்சியையும் யூஎஸ்எய்ட் வழங்கியது.

கருத்திட்டத்தின் அமுலாக்கத்தின் போது நிறுவக ரீதியிலான பலப்படுத்தல் துறையில் பாரிய முன்னேற்றம் காணப்பட்டதை கருத்திட்டத்தின் இரண்டாண்டு நிறைவின் பின் மேற்கொள்ளப்பட்ட தாக்க ஆய்வொன்று எடுத்துக் காட்டியது. நிதிச் சிக்கனம் மற்றும் வர்த்தகச் செயற்பாடு ஆகியவற்றில் வினைத்திறன் கணிசமான அளவு முன்னேற்றமடைந்து காணப்பட்டது. கட்டண ஆவணத் தயாரிப்பு 98 சதவீத வளர்ச்சியையும் கட்டணம் சேகரிப்பு 125 சதவீத வளர்ச்சியையும் காட்டின. 1992 இல், நடவடிக்கைகள் மற்றும் பேணல் செலவுகள் மற்றும் கடனடைப்பில் மூன்றில் இரு பாகம் தொடர்பான அதன் கூட்டுத்தாபன இலக்குகள் அடையப் பெற்றதோடு அது மேன்மிகையொன்றையும் பெற்றது.

கிராமிப்புறங்களில் சுகாதாரச் சேவைகள் மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவற்றிலும் சித்திகள் அடையப்பெற்றன. 5,400 பெரியவர்களுக்கான மலகூடங்கள் மற்றும் 1,300 முன்பள்ளி மலகூடங்கள் இக்கால கட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டன. பயிற்சிப் பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டு அமுல் செய்யப்பட்டதோடு, சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக 370 கிராமியச் சுகாதாரத் தொண்டர்கள் பயிற்றப்பட்டார்கள். இதனால் கருத்திட்டம் முடிவுற்ற பின்னரும், பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதார வசதிகளினூடாக மேலும் சிறந்த ஆரோக்கியத்தை அடைவதற்காகத் தொடர்ந்தும் முன்னேறும் வாய்ப்பு கிராமியச் சமூகங்களுக்குக் கிட்டியது.

அக்ரோமார்ட்: கிராமியப் பெண் தொழில்முயற்சியாளர்கள்

இலங்கையில் கிராமியப் பெண்களின் பொருளாதார நிலை பற்றிய கரிசனை காரணமாக பெண்கள் வர்த்தக மன்றத்தின் முன்னாள் தலைவியாகவிருந்த திருமதி பியூலா முணசிங்க மற்றும் சில நண்பர்களால், 1989 இல் அக்ரோமார்ட் மன்றம் நிறுவப்பட்டது. விவசாய மற்றும் சிறு கைத்தொழில் துறையில் தொழில்முயற்சித் திறனை மேம்படுத்தி, கிராமியத் துறையைச் சேர்ந்தவர்கள் தொழில்முயற்சியாளர்களாக மாறுவதற்கான பயிற்சியை அளித்து அத்துடன் தொழில்முயற்சிக்குத் தேவையான திறனை அபிவிருத்தி செய்வதற்காக கடன் வசதி மற்றும் தகவல் பரிமாற்றத்தை வழங்குவது என்பவற்றை அக்ரோமார்ட் நோக்கமாகக் கொண்டிருந்தது.

வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண்கள் தன்னிறைவு அடைவதற்கு உதவி வழங்குவதனைக் கொண்டு அக்ரோமார்ட் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. 1993 இல், வறுமை நிலவும் தென் மாகாணத்தில் விவசாய வர்த்தகத்தில் கிராமியப் பெண்களுக்கான பயிற்சியை அக்ரோமார்ட் விசாலித்தது. யூஎஸ்எய்ட் PVO Co - பினான்சிங் II (யூஎஸ்எய்ட் - தனியார் சுயாதீன அமைப்புக்கள் இணை நிதியளிப்பு II) கருத்திட்டத்தின் உதவியுடனே இந்த விசாலிப்பினை மேற்கொள்ள முடிந்தது.

1987 இல் ஆரம்பிக்கப்பட்ட, PVO (தனியார் சுயாதீன அமைப்பகள்) இணை நிதியளிப்பு II கருத்திட்டம் இலங்கையில் வறியவர்களை அணுகுவதற்கான வழியாக தனியார் சுயாதீன அமைப்புக்களின் முகாமைத்துவத் திறன்களை பலப்படுத்துவதை வலியுறுத்தியது. அது PVO இணை நிதியளிப்பு I ஆம் கருத்திட்டத்தின் தொடர் என்பதோடு அவை இரண்டும் இலங்கையில்

> ***"எமது இயக்கம் பெண்கள் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய உதவுவதோடு, மனைவிக்கும் கணவனுக்கும் இடையேயுள்ள பங்குதாரர் தொடர்பைப் பலப்படுத்துகிறது. பொருளாதார ஆளுமையினால் குடும்ப அலகுகள் நூற்றுக்கு நூறு வீதம் ஒற்றுமைப் பட்டது எமது வெற்றிக் கதைகளாகும்."***
> ***– திருமதி பியூலா முணசிங்க.***

தனியார் சுயாதீன அமைப்புக்களுக்கு 1979 முதல் 1989 வரையிலான பத்து வருட ஆதரவை வழங்கியது. பிரதேச சமூகங்கள் தமக்கே உரித்தான அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை மேம்படுவத்துவதற்காக இரு கருத்திட்டங்களும் செயற்பட்டன.

பிவிஓ இணை நிதியளிப்புக் கருத்திட்டங்கள் உதவி வழங்கிய நடவடிக்கைகளுள் சிறிய அளவிலான கமத்தொழில் உற்பத்தி, சேமிப்பு ஊக்குவிப்பு, குடும்பத் திட்டச் சேவைகள், தொழிற்பயிற்சி அத்துடன் சித்தசுவாதீனமற்றவர்களுக்கான உதவிச் சேவைகள் அடங்கின. இச்சேவைகளினூடாக, சுமார் 300,000 க்கும் அதிகமான மக்கள் நேர்முகமாக அல்லது மறைமுகமாக நன்மையடைந்தனர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உதவி வழங்கப்பட்டவர்கள் வறியவர்களாகவும் ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருந்ததோடு, அவர்களுள் அதிகமானோர் பெண்களாயிருந்தனர். இலங்கையில் அகோரமான சிவில் மோதல் நடை-

யூஎஸ்எய்ட் உதவி வழங்கிய அரச சார்பற்ற அமைப்பான அக்ரோமார்ட் மன்றம், 1990ம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு சிறிய மான்யங்களை வழங்கியது.

பெற்றுக் கொண்டிருந்த காலக்கெடுவில் இக்கருத்திட்டங்கள் இரண்டும் செயற்படுத்தப்பட்டன என்பதால் அவைகளின் பெறுபேறுகள் குறிப்பிடத் தக்கவையாகும்.

அக்ரோமார்ட்டின் தயவிலும், அது யூஎஸ்எய்ட் இடம் இருந்து பெற்ற உதவி காரணமாகவும், கிராமியப் பெண் தொழில்முயற்சியாளர்களின் வருமானங்கள் கணிசமான அளவு உயர்ந்தன.

நிதி நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை மீட்டல்

1980ஆம் ஆண்டுகளில், வங்கி சாராத நிதி நிறுவனங்களை மேற்பார்வையிட்டு அவற்றுக்கு உதவி வழங்குவதற்கான அதன் திறமையைக் கட்டியெழுப்புவதற்காக இலங்கையின் மத்திய வங்கிக்கு யூஎஸ்எய்ட் அதன் அபிவிருத்திச் சேவைகள் கருத்திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உதவியை அளித்தது.

தொழில்நுட்ப உதவி கோரப்பட்ட 1980ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், நிதி நிறுவனங்களின் நிதி ஸ்திரத்தன்மை பற்றி வளர்ந்து வரும் அவதானம் காரணமாக நிலைத்தகவுள்ள ஒரு சிக்கலை இலங்கை எதிர்நோக்கியிருந்தது. நிதி நிறுவனங்கள் மீது நம்பிக்கையின்மையானது, அவற்றிலிருந்து வைப்புக்களை பெருவாரியாகப் பெறும் ஒரு சடுதியான நிலையைத் தோற்றுவித்து, அதைத் தடுக்காவிட்டால், நிதி நிறுவனங்கள் சரிந்து விடும் நிலை உருவாகி காலக்கிரமத்தில் அது வங்கித் துறைக்கும் பரவும் ஆபத்து நிலவியது.

1979 ஆம் ஆண்டின் நிதி நிறுவனச் சட்டம் மாத்திரமே நிதி நிறுவனங்கள் பற்றிய ஒரேயொரு சட்டத்தொகுப்பாக இருந்ததோடு அதன் மூலம் நிதிக் கம்பனிகளின் நடவடிக்கைகளை நெறிப்படுத்த சில அதிகாரங்களே மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தன. எனவே, மத்திய வங்கியின் வேண்டுகோளுக்கிணங்க, நிதி நிறுவனங்களை நெறிப்படுத்துவதற்காக, புதிய சட்டங்களை உள்ளிட்ட மாற்றங்களைச் சிபாரிசு செய்வதற்காக யூஎஸ்எய்ட் உசாத்துணையாளர் ஒருவரை வழங்கியது.

1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நிதிக்கம்பனிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய சட்ட மாற்றங்களைச் சிபாரிசு செய்வதற்கு ஆலோசகர்களைத் தந்துதவுமாறு இலங்கை மத்திய வங்கி யூஎஸ்எய்ட்டைக் கேட்டுக் கொண்டது.

இச்சிபாரிசுகளின் அடிப்படையில், இலங்கை அரசாங்கம் 1988 ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்தை நிறைவேற்றியது. சகல நிதி நிறுவனங்களும் 1990 ஆண்டுக்கு முன்பதாக அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதை இச்சட்டம் தேவைப்படுத்தியது. இதற்குத் தகைமை பெறுவதற்காக, நிதி கம்பனிகள் ரூபா. 5 மில்லியன் செலுத்தப்பட்ட மூலதனத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றிருந்ததால், அனுமதிப் பத்திரத்தைப் பெறும் கம்பனிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டு, அதன் மூலம் நிதி ஸ்திரமுள்ள அத்துடன் பொருளாதார ரீதியில் பொறுப்புள்ளதொரு நிதிக் கைத்தொழிலை உருவாக்க வழியேற்பட்டது.

மத்திய வங்கி பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள நிதிக் கம்பனிகளை விரைவாக இனங்கண்டு திருத்த நடவடிக்கை எடுப்பதற்கு வசதியளிக்கும் கண்காணிப்புத் திட்டமொன்றையும் யூஎஸ்எய்ட் உசாத்துணையாளர் அபிவிருத்தி செய்தார். நலிவுற்ற நிதிக் கம்பனிகளின் முகாமைத்துவத்தையும் நடைமுறைச் செயற்பாட்டையும் மேற்பார்வையிடுவதற்காக பரிசோதகர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் அடிப்படைக் குழுவொன்றை கட்டியெழுப்புவதற்கான முழுமையானதொரு பயிற்சித் திட்டமும் வடிவமைக்கப்பட்டது.

உத்தேச மாற்றங்களைச் செயற்படுத்துவதற்குக் கூடிய கவனம் செலுத்துமுகமாக, வங்கி-சாராத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைக்கான திணைக்களத்தை மத்திய வங்கி நிறுவியது. பரிந்துரைகள் பற்றிய தொடர் நடவடிக்கை எடுப்பதற்காகவும் பயிற்சித் திட்டத்தை அமுல் படுத்தவும் இன்னுமொரு உசாத்துணையாளரின் சேவையும் பெறப்பட்டது. "இப்புதிய திணைக்களம், புதிதாகப் பயிற்றப்பட்ட ஆளணியினரின் உதவியுடன், நிதிக் கம்பனிகள் துறையில் பொதுமக்கள் நம்பிக்கையை மீட்க முடிந்தது. அனுமதிப்பத்திரங்களைப் பெற்ற நிதிக் கம்பனிகள் நன்கு முகாமைத்துவப்படுத்தப்பட்டு நிதி ஸ்திரத் தன்மையைக் கொண்டனவாக விளங்குகின்றன. பிரச்சினை முகாமைத்துவதிலிருந்து விலகிக் கொள்கை விடயங்களுக்கு இப்போது கவனம் செலுத்த முடிவதோடு அது தோதானதாயுமுள்ளது" என உசாத்துணையாளரின் இறுதி அறிக்கை குறிப்பிட்டது.

கொழும்புப் பங்குச் சந்தை

1980ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சுமார் 100 வருடங்கள் பழமைவாய்ந்த கொழும்புப் பங்குச் சந்தை, உறுதியான சந்தை வளர்ச்சிக்குத் தேவையான ஆழத்தை அப்போதும் கொண்டிருக்கவில்லை. 1989 இல் இருந்து 1992 வரை, கொழும்பு பங்குச் சந்தையை, உருவாகிவரும் சந்தை நிதி முகாமையாளர்களினால் நன்கு மதிக்கப்படும் சர்வதேசக் கவனத்தை ஈர்க்கக்கூடியதொன்றாக மாற்றியமைக்க யூஎஸ்எய்ட் இன் மூலதனச் சந்தை அபிவிருத்திக் கருத்திட்டம் செயற்பட்டது.

இந்த மூலதனச் சந்தை அபிவிருத்திக் கருத்திட்டம் நான்கு தூண்களைத் தாங்கி நின்றது: (1) வினைத்திறனுள்ள சந்தை, (2) நெறிப்படுத்தல் (3) கம்பனித் தகவலுக்கான பிரவேசத்தை வழங்கல், மற்றும் (4) பகுப்பாய்வாளர் மற்றும் தரகர்களுக்கான பயிற்சி. பங்குச் சந்தை ஆணைக்குழுவை அமைத்து கணக்காய்வுத் தரங்களை அபிவிருத்தி செய்வதில் பாரியதொரு விசையாக யூஎஸ்எய்ட் செயற்பட்டது. கொழும்புப் பங்குச் சந்தையை நவீனமயப்படுத்த கணனிகள் வழங்கப்பட்டதோடு பகுப்பாய்வாளர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

யூஎஸ்எய்ட் வழங்கிய தொழில்நுட்ப உதவி கொழும்பு பங்குச் சந்தையைச் சர்வதேச மட்டத்துக்குத் தரமுயர்த்த உதவியது. நிதிச் சந்தைத் தகவல் அமைப்பின் நம்பகத்தன்மையை நிதிச் சீர்திருத்தங்கள் சீர்திருத்தி முதலீட்டாளர் விசுவாசத்துக்கு வழிகோலியது. மூலதன மற்றும் நிதிச் சந்தைகளை விசாலிப்பதற்கான உதவி, அதிக எண்ணிக்கையிலான மக்கள் பொருளாதாரத்தில் பங்கெடுக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தியது. 1989 இல் இருந்து 1992 வரை, கொழும்பு பங்குச் சந்தையினால் திரட்டப்பட்ட மூலதனத்தின் அளவு 1,793% வீத வளர்ச்சியைக் காட்டியதோடு, கொழும்பு பங்குச் சந்தையை மூலதனத்தைத் திரட்டுவதற்கான முக்கியமானதொரு கருவியாக மாற்றியமைத்தது.

கொழும்பு வர்த்தகத் துறையின் இதயமாகவும், பங்குச் சந்தையின் இருப்பிடமாகவும் விளங்கும் வேள்ட் ரேட் சென்டர்

கொழும்பு பங்குச் சந்தையில் வர்த்தகர்கள் தமது நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சந்தையில் வளர்ச்சியை முகாமைத்துவப்படுத்துவதற்கான அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதற்கு மூலதன சந்தை அபிவிருத்திக் கருத்திட்டம் உதவியதோடு, மனித மற்றும் பௌதிக வளங்களுக்கான பயிற்சி மற்றும் பலப்படுத்தல் மீது அது அழுத்தத்தைக் கொடுத்தது. மூலதன சந்தை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் வெற்றியானது, ஒரு பின்தொடர் கருத்திட்டத்துக்கு மேலதிக வளங்களை வழங்க யூஎஸ்எய்ட் இனைத் தூண்டியது.

இவ்விரண்டாவது கருத்திட்டம் தனியார் துறைக் கொள்கை ஆதரவுக் கருத்திட்டத்தின் நிதிச் சந்தை அம்சத்தை உள்ளடக்கியது. வர்த்தகத்துக்குப் பிந்திய தன்னியக்கத் திட்டம், அதிகரித்த வர்த்தக நடவடிக்கை அளவுகளைச் சமாளிப்பதற்கான உதவி மற்றும் கொழும்புப் பங்குச் சந்தையின் வினைத்திறனையும் விசுவாசத்தையும் மேம்படுத்துவது போன்ற அம்சங்களுக்கு இந்த மேலதிக ஆதரவு உதவியாக இருந்தது.

"யூஎஸ்எய்ட் இன் ஆதரவு கிடைக்காமற் போயிருந்தால், இலங்கை பங்குச் சந்தை ஆணைக்குழு இவ்வமைப்பில் இன்று இருந்திராது", நிசாங்க வீரசேகர, முகாமைத்துவப் பங்காளர், ஓரியோஸ் கபிடல் மற்றும் யூஎஸ்எய்ட் மூலதனச் சந்தை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முன்னாள் கருத்திட்ட அலுவலர்.

மோதலின் போதான உதவி

பல வருடங்களாக இலங்கையில் நடந்தேறிய இன மோதல்களுக்குப் பின், இந்தியப் பிரதம மந்திரி ராஜிவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவும் 1987 யூலை மாதம் 29ஆம் திகதி இந்து-ஸ்ரீ லங்கா சமாதான ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டனர். தமிழ் கிளர்ச்சியாளர்களுக்கு உதவிகளை வழங்குவதை நிறுத்தவும் அமைதி காக்கும் படையொன்றை அனுப்பவும் இவ்வொப்பந்தத்தில் இந்தியா உறுதியளித்தது.

மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கவும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒன்று சேர்ப்பது பற்றிய கருத்தறியும் வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கும் அத்துடன் தமிழ் மொழிக்கு அரச கரும மொழி அந்தஸ்தை வழங்கவும் இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்தது.

1987 டிசம்பரில், பாரிசில் விசேட உலக வங்கிக் குழுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் புனரமைப்புக்கு மேலதிக உதவியை ஐக்கிய அமெரிக்கக் குடியரசு உறுதியளித்தது.

இதன் பயனாக, யூஎஸ்எய்ட் இலங்கையில் புனர்நிர்மாண உதவிக் கருத்திட்டத்தை நிறுவியது. நீர்ப்பாசன புனர்நிர்மாண வேலைகளில் உதவி, விவசாய உள்ளீடுகள் தனியார் தொழில் துறையை மீண்டும் ஆரம்பித்தல், வீடமைப்பு, மீள்நிர்மாணம் என்பவற்றை வழங்கக் கூடியதாக வடிவமைக்கப்பட்டது.

1991 இல் மீண்டும் பாரிய அளவில் யுத்தம் ஆரம்பித்ததும், யுத்த வலயத்தில்

இத் திட்டத்தின் முக்கியமான பலமாக இருப்பது அதன் மாறும் நிலைமைகளுக்கு ஏற்பச் செயற்படும் திறமையும், பயன்மிக்க முறையில் தொடர்ந்து இயங்குவதுமாகும்

வாழும் சமூகங்களுக்கு விதைகள் மற்றும் விவசாய உட்பாய்ச்சல்களை வழங்குவதற்காக இத்திட்டம் மீள்வடிவமைக்கப்பட்டது. வெடிகுண்டுகளைத் தயாரிக்க பாவிக்கப்படக் கூடுமென்பதால், உரத்துக்கான தடையை அரசாங்கம் விதித்தது. விவசாயக் காணியற்ற மக்களின் உணவுத் தேவைக்காக உணவு உற்பத்தியில் 10 சதவீதத்தைக் கூட்டுறவு அமைப்பொன்றினுள் திரட்டி வைப்பதற்கான ஒரு திட்டமும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

1988-1993 காலப்பகுதியில் இலங்கையில் யூஎஸ்எய்ட் கருத்திட்ட அபிவிருத்தி அலுவலராக இருந்து புனரமைப்பு உதவிக் கருத்திட்டத்தில் செயலாற்றிய பாமெலா பால்வின், தாம் பெற்ற அனுபவத்தை பொஸ்னியா போன்ற ஏனைய யுத்த பிரதேசங்களில் பிரயோகித்தார். மாறும் நிலைமைகளுக்கு ஏற்ப செயற்பட்டு தொடர்ந்தும் பிரயோசனமளிக்கும்

1980 ஆம் ஆண்டுகளில், மோதல்களிலிருந்து விடுபடுவதற்கு இலங்கைக்கு உதவக் கூடிய விதத்தில் யூஎஸ்எய்ட் புனர்வாழ்வு உதவிக் கருத்திட்டத்தை நிறுவியது. அடுத்த சில வருடங்களில், இக் கருத்திட்டத்தின் நோக்கம் மாற்றியமைக்கப்பட்டது.

அதன் திறன் இக்கருத்திட்டத்தின் பிரதானமானதொரு சக்தியாகும் என அவர் குறிப்பிட்டார்.

"இதுபோன்ற விவகாரங்களில் நன்றி பகரும் குறிப்புகள் கிடைப்பதில்லை, ஆயினும், தாம் தன்னம்பிக்கையுடன் இருப்பதற்காக அவர்களுக்கு விவசாய உட்பாய்ச்சல்களை வழங்கியமைக்காக எனக்கு நன்றி பகர்ந்து வடக்கிலிருந்து கடிதங்கள் வரவே செய்தன" என அவர் கூறினார்.

இலங்கையின் கரைகளைப் பாதுகாத்தல்

இலங்கையின் பல்வேறுபட்ட வளங்களுக்கிடையே, கரையோர வளங்கள் நாட்டில் பிரதானமான ஸ்தானத்தை வகிக்கிறது. சுற்றுலாத் துறையும் பிரதேச மக்களால், குறிப்பாக மேற்குக் கரையோரப் பகுதிகளில் ஏற்படும் அழுத்தங்களும், கரையோரங்களின் பயனுறு முகாமைத்துவத்தை 1990 ஆம் ஆண்டுகளில் தேவைப்படுத்தின. காற்று மற்றும் கடல் அலைகளுக்குப் புறம்பாக, மண் அகழ்வதும் பவளக் கற்படிவங்களை உடைப்பதும் கரையோர மண்ணரிப்பை உக்கிரமடையச் செய்தன. அதே போன்று, பிழையாக அமைக்கப்பட்ட கரையோரப் பாதுகாப்பு அமைப்புக்களும், கரையோரத் தாவரங்களின் இழப்பும், தவறான இடங்களில் அமைக்கப்பட்ட கரையோர ஹோட்டல்களும் மற்றும் ஏனைய சார்ந்த விளைவுகளும் இதற்கான ஏனைய காரணிகளாகவிருந்தன.

இலங்கை மற்றும் யூஆர்ஐ/சீஆர்சி முன்னணி சுற்றாடல், சமூக-பொருளாதார மற்றும் வளங்கள் முகாமைத்துவ நிபுணர்கள் மூன்று வருடங்களாக மேற்கொண்ட சளைக்காத முயற்சியின் பயனாக, "கோஸ்டல் 2000" என்ற திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் 1990ஆம் ஆண்டுகளிலும் அதற்குப் பின்னரும் கரையோரச் சீக்கல்கள் மீது நடவடிக்கை மேற்கொள்கிறது. கரையோரப் பகுதிகளில், சனத்தொகை அதிகரிப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் சுற்றாடல் தாக்கம் ஆகியவை தொடர்பான சுமார் 20 பின்னணி ஆய்வு அறிக்கைகள், ஆய்வுகள் ஆகியவற்றைக் கொண்ட தொடராக கோஸ்டல் 2000 விளங்கியது. அது அமைச்சரவையினால் 1994 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டு, திருத்தப்பட்ட தேசிய கரையோர வலய முகாமைத்துவத் திட்டத்தின் வடிவமைப்பு தொடர்பான கொள்கை வழிகாட்டல்களில் பிரயோகப்படுத்தப்பட்டது.

காற்று மற்றும் கடல் அலைகளுக்குப் புறம்பாக, மண் அகழ்வதும் பவளக் கற்களை உடைப்பதும், பிழையாக அமைக்கப்பட்ட கரையோரப் பாதுகாப்பு அமைப்புகள், கரையோரத் தாவரங்களின் இழப்பு தவறான இடங்களில் அமைக்கப்பட்ட கரையோர ஹோட்டல்களும் ஏனைய காரணிகளும் கரையோர மண்ணரிப்பை உக்கிரமடையச் செய்தன.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் பகிரங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் யூஎஸ்எய்ட் இன் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றாடல் கொள்கை (NAREP) கருத்திட்டத்தின் கீழ் ஏழு வருட கால முயற்சியொன்று 1990 ஆரம்பிக்கப்பட்டது. பயனுறு சுற்றாடல் திட்டங்களைத் தீட்டி அவற்றை அமுல் செய்வதையும் நிலைத்தகவுள்ள அத்துடன் சுற்றாடல் ரீதியில் உறுதியான அபிவிருத்தித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதையும் கருத்திட்ட நடவடிக்கைகள் ஊக்குவித்தன. கரையோர வளங்களைப் பொறுத்தவரையில், கரையோரப் பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பலதரப்பட்ட பிரயோகங்களை செயல் ரீதியில் முகாமைத்துவப்படுத்துவது போன்ற விடயங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான வினைத்திறனுள்ள கொள்கை முன்னெடுப்புக்கான உதவியை நாரெப் வழங்கியது. கரையோர முகாமைத்துவ நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்டோரையும் ஒருங்கிணைத்து வலுப்படுத்துவதையும் அது மேற்கொண்டது.

நாரெப் திட்டத்தின் கீழ், யூஎஸ்எய்ட்டும் ரோட் தீவு பல்கலைக்கழகத்தின் கரையோர வளங்கள் மத்தியும் (URI/CRC) இலங்கையின் 1990 ஆம் ஆண்டின் கரையோர வலய முகாமைத்துவத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக உதவி வழங்கியது. இதுவே வளர்முக நாடொன்றில் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய முதலாவது முயற்சியாகும்.

கரையோர முகாமைத்துவத்தில் இலங்கையின் தலைவர்களுக்கும் நாரெப் பயிற்சி அளிக்கிறது. கரையோர வளங்களின் முகாமைத்துவத்தில் பயிற்சி பெறுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர், கலாநிதி ஆர்.ஏ.டீ.பீ. சமரநாயக்கா ரோட் தீவு பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டார். கரையோரப் பாதுகாப்புக் கருத்திட்டத்தை எவ்வாறு திட்டமிடுவது மற்றும் ஒழுங்குவிதிகளின் தொழிற்பாடு என்பன பற்றிய தேர்ச்சிகளை அவர் அங்கு பெற்றார்.

இலங்கையின் கரையோர முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்வதில் யூஎஸ்எய்ட் இன் பங்களிப்புப் பற்றி அண்மையில் நடைபெற்ற நேர்காணல் ஒன்றின் போது கலாநிதி சமரநாயக்கா குறிப்பிட்டார். "கடற்கோள் அனர்த்தத்தைத் தொடர்ந்து கரையோர முகாமைத்துவம் இலங்கையரின் கூடுதலான அவதானத்தை ஈர்த்துள்ளது" என சமரநாயக்க கூறினார். "கடற்பாறைகளை அகழ்தல் மற்றும் சுற்றுலாத் துறை காரணமாக பாதிக்கப்பட்ட இடங்களே பாரிய இழப்பை எதிர்நோக்கியதால், பவளக் கல் படிவங்களைப் பாதுகாப்பது போன்ற விடயங்கள் இப்போது முன்னணி இடத்தைப் பிடித்துள்ளன." கடலோரப் பகுதிகளின் மெல்லினத் தன்மையும் அவற்றின் முக்கியத்துவமும் வெகு சீக்கிரம் மறக்கப்பட மாட்டாது என்பதோடு, கலாநிதி சமரநாயக்காவும் ஏனையோரும் இலங்கையின் வனப்புமிகு கரைகளைப் பாதுகாப்பதற்காக முனைப்புடன் முயன்று வருகிறார்கள்.

சமரசம்: நீதிமன்றங்களில் நெரிசலைக் குறைத்தல்

முறைசார்ந்த நீதி மன்ற அமைப்பின் ஒரு இணைப்பாக இணக்கப்பாட்டின் பிரயோகம் இலங்கையில் பண்டைக் காலம் தொட்டு இருந்து வருகிறது. அது காலனித்துவ ஆட்சிக்கு முன்பிருந்து பிரித்தானிய ஆட்சியினூடாக நீடித்து வந்துள்ளது. 1948 இல் சுதந்திரம் பெற்ற பின், நீதி மன்றங்களில் நிலவும் நெரிசலைக் குறைப்பதற்கான இலங்கை அரசாங்கம் சட்டப்படி இணக்க சபைகளை அமைத்தது. ஆயினும் இந்த இணக்க சபைகள் அரசியல் ஆதிக்கம் அதிகமான இடங்களாக மாறி, ஆதரவாளர்களுக்கு

2005 ஆம் ஆண்டில் யூஎஸ்எய்ட் அனுசரனை வழங்கிய ஆற்றல் மிக்க சமரசம் மீதான பயிற்சியாளர்களின் பயிற்சி ஒளிவு மறைவற்ற பதிலளிக்கும் பொறுப்புடைய உள்ளூராட்சிக் கருத்திட்டதின் ஒரு பகுதியாகும்.

பதவிகள் வழங்கப்பட்டு அவற்றின் தீர்மானங்கள் பக்கசார்பானவை எனக் கருதப்பட்டது. இப்படியான தீவிரச் சர்ச்சைக்கு மத்தியில் இலங்கை அரசாங்கம் இணக்க சபைகளை 1978 ஆம் ஆண்டு கலைத்தது.

1988 ஆம் ஆண்டளவில்,, 365,000 தீர்க்கப்படாத வழக்குகள் கீழ் நீதி மன்றங்களிலும் 17,000 வழக்குகள் மேல் முறையீட்டு நீதி மன்றத்திலும் தேங்கிக் கிடக்கும் நிலையில் நீதிமன்றங்களில் ஏற்பட்ட நெரிசல் மற்றும் வறியவர்கள் நீதி மன்றங்களுக்குச் செல்வதற்குத் தடையாக இருந்த வழக்காடலின் அதிக செலவு, மாற்று வழி சமரச வழிவகைகளை ஆராய்வதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தின. 1988 ஆம் ஆண்டின் இணக்க சபைகள் சட்டம் அனுமதிக்கப்பட்ட பின், யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர, நாடு பூராவிலும் 211 இணக்க சபைகளை நீதி அமைச்சு நிறுவியது. இந்த மாகாணங்களும் இத்திட்டத்தில் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டு, செயற்படும் சிவில் சமாஜத்தை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீண்டும் நிறுவுவதில் முக்கியமானதொரு பங்கு மேற்கொள்ளப்பட்டது.

1990 இல் இணக்க சபைகள் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, நீதி அமைச்சுக்கு அதன் இணக்க சபைத் திட்டத்துக்காக ஆசிய மன்றத்தினூடாக யூஎஸ்எய்ட் உதவி அளித்து வந்துள்ளது. யூஎஸ்எய்ட் மற்றும் ஆசிய மன்றத்துக்கிடையிலான சமரசத் திட்டங்களுக்கான பங்காளர் தொடர்பு, யூஎஸ்எய்ட் இன் மூன்று திட்டங்களான ஜனநாயக பன்முக முன்னெடுப்பு, பிரஜைகள் பங்காளர் திட்டம் மற்றும் மனித உரிமை-கள் முன்னெடுப்பு ஆகியவற்றை மேவின.

ஆரம்பத்தில், முன்னைய இணக்க சபைகளின் தோல்விகளைத் தவிர்த்துக் கொள்வதில் இவ்வுதவி முனைப்பாக இருந்தது. முன்னைய உச்ச நீதி மன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதி மன்றங்களின் நீதிபதிகளைக் கொண்ட இணக்கப்பாட்டு ஆணைக்குழுவினை அமைச்சு முதலில் அமைத்தது. இச்சபைகள் அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டிருப்பதையும், விறாந்து மற்றும் கட்டளையிடும் அதிகாரங்களை அகற்றுவதையும், பங்குபற்றுவதும் அமுல் படுத்துவதும் சுயாதீன விருப்புக்கேற்ப இருக்க வேண்டும் என்பதையும் இவ்வாணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இச்சபைகள் பயிற்றப்பட்ட தொண்டர் இணக்கப்பாட்டாளர்களை ஈடுபடுத்துவதோடு நிருவாகச் செலவுகளுக்காக அவர்களுக்கு சிறியதொரு படி அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது. சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றவர்களுக்கிடையே இருந்து இணக்கப்பாட்டாளர்கள் தெரிவு செய்யப்படுவதோடு, பெரும்பாலும் அவர்கள் இளைப்பாறிய ஆசிரியர்களாகவோ சிவில் அலுவலர்களாகவோ இருப்பர். ஐக்கிய அமெரிக்கக் குடியரசுக்கான அவதானச் சுற்றுலாக்கள் மற்றும் உள்நாட்டுப் பயிற்சியை வழங்குவது மூலம் இணக்கப்பாட்டாளர் பயிற்றுனர்கள் மற்றும் இணக்கப்பாட்டாளர்களின் தொழில்நுட்பத் திறனை கட்டியெழுப்புவதில் யூஎஸ்எய்ட் திட்டங்கள் முக்கியமானதொரு பங்கை ஏற்றுள்ளன.

1995, இணக்கப்பாட்டின் வினைத்திறனைக் கட்டியெழுப்பி இவ்வமைப்பில் மக்கள் நம்பிக்கையை அதிகரிப்பதற்காக யூஎஸ்எய்ட் உதவி கவனம் செலுத்தியது. பொதுமக்கள் அறிவூட்டல் சுவரொட்டிகள், மோதல் முகாமைத்துவத் திட்டமொன்றினூடாக இணக்கப்பாட்டு மனவுருவை பாடசாலையில் அறிமுகப்படுத்தல், இறுதி ஆண்டு சட்ட மாணவர்களுக்கான பயிற்சி மற்றும் உள்நாட்டரசாங்க அதிகாரிகள் அல்லது கிராமியத் தலைவர்கள் ஆகிய சகல மட்டங்களிலும் அறிவூட்டல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

2005 இல் இலங்கையில் 273 இணக்க சபைகள் இருந்தன. காணி மற்றும் குடும்ப விவகாரங்கள் அத்துடன் சிறிய குற்றச் செயல்கள் போன்ற சிவில் பிணக்குகளை அவை பொதுவாக சமரசத்துக்காக எடுத்துக் கொள்கின்றன. இணக்க சபைகள் முன் கொண்டு வரப்படும் பிணக்குகள் 90 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும் என்பதைச் சட்டம் தேவைப்படுத்துகிறது. நீதி மன்ற அமைப்பில் சாதாரண வழக்குகள் கூடத் தீர்க்கப்பட பல வருடங்கள் செல்லும். தாம் எடுத்துக் கொண்ட வழக்குகளில் 60 சதவீத வெற்றியை இணக்க சபைகள் பெற்றுள்ளன.

சிவில் மற்றும் சிறிய குற்றம் சம்பந்தப்பட்ட வழக்குகளைத் தீர்ப்பதற்கான திறனுள்ள மற்றும் சிக்கனமான வழியை இணக்க சபைகள் வழங்குகின்றன. இலங்கை மக்கள் நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான கூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக யூஎஸ்எய்ட் இன் இணக்கப்பாட்டுத் துறைக்கான உதவி உறுதியானதொரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

USAID FROM THE AMERICAN PEOPLE

வானொலியும் மனித உரிமைகளும்

இலங்கையில் ஆங்கிலம் பேசாத கிராமிய மக்களை இலக்குப் பார்த்து 1994 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பற்றியதொரு முன்னோடி வானொலி நிகழ்ச்சியை கொழும்புப் பல்கலைக்கழகப் பட்டதாரியான 25 வயதுடைய பிரதீப வீரசிங்க ஆரம்பித்தார். பத்திரிகைக் கலை, பொருளாதாரம் மற்றும் சர்வதேச தொடர்புகள் பிரதீபின் பட்டப்படிப்புப் பாடங்களின் பகுதிகளாயிருந்தன. மாணவர் பௌத்த காங்கிரஸ் மற்றும் பத்திரிகையாளர் சங்கம் போன்ற குழுக்களுடனான கல்விக்குப் புறம்பான அவரது நடவடிக்கைகள் மக்களுடன் இணைந்து செயற்பட்டு அர்த்தமுள்ள பல கலந்துரையாடல்களை நடாத்த அவருக்கு ஊக்கமளித்தன. பிரபல சட்டச் செயற்பாட்டாளர் மற்றும் பல்கலைக்கழகச் சட்ட விரிவுரையாளருமான, கலாநிதி தீபிக்கா உடுகம, பிரதீபின் மனித உரிமைகள் கற்கை நெறியை நடாத்தினார். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் கல்விக்கான நிலையத்தின் பணிப்பாளராகவும் கலாநிதி உடுகம சேவையாற்றினார்.

1994இல் மனித உரிமைகள் பற்றிய தனது வானொலி நிகழ்ச்சிக்காக பிரதீப் வீரசிங்க நேர்காணல் ஒன்றை நடத்துகிறார்.

1994 இன் நடுப்பகுதியில் தான் பட்டத்தைப் பெறும் தறுவாயில், அரச ஊடகமான இலங்கை ஒலிபரப்புச் சேவை இணைச் செயற்பாட்டு பேச்சு நிகழ்ச்சியொன்றை நடாத்தவிருப்பதாக பிரதீப் அறிந்து கொண்டார். சிங்கள மற்றும் தமிழ் மொழி பேசும் கிராமிய மக்களிடையே பிரபல்யமடைந்துள்ள வானொலியை கிராமிய இலங்கையருக்கு மனித உரிமைகள் பற்றி அறிவிக்க பிரதீப் நாடினார். அன்று கிராமிய சனத்தொகையில் 80 சதவீதமானோர் ஆங்கிலம் பேசக் கூடியவர்களாக இருக்கவில்லை.

ஆட்கள் காணாமற் போதல் தொடக்கம் கருத்துச் சுதந்திர மீறல்கள் வரையிலான பல்வேறு மனித உரிமைகள் விடயங்கள் பற்றி வாரமொன்றுக்குச் சுமார் 30 கடிதங்கள் பிரதீபுக்குக் கிடைத்தன.

மனித உரிமைகள் கல்விக்கான மத்தியின் உதவியுடன், இப்பேச்சு நிகழ்ச்சியை நடாத்துவதற்காகப் பிரதீப் தெரிவு செய்யப்பட்டார். 1994 யூலை மாதத்தில் மனித உரிமைகள் பற்றிய ஒரு மணி நேர வாராந்த முன்னோடி நிகழ்ச்சியொன்றினை அவர் ஆரம்பித்தார். ஆரம்பத்தில் தொலைபேசி அழைப்பினூடான கதைத்தல் நிகழ்ச்சியாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போதிலும், அநேகமான கேட்போருக்கு தொலைபேசி அழைப்புக்காக செலவு செய்ய வசதில்லையென்பதால், கடிதங்களையும் ஏற்றுக் கொள்ள நிகழ்ச்சித் திட்டம் இணங்கியது.

யூஎஸ்எய்ட் தனியார் சுயாதீன அமைப்புக்கள் இணை நிதியளிப்புக் கருத்திட்டத்தின் உதவியுடன், மனித உரிமைகள் கல்விக்கான மத்தி கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 1991 நவம்பரில் ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கையின் வறியவர்களை சென்றடைவதற்காக யூஎஸ்எய்ட் இலங்கைத் தனியார் தொண்டர் அமைப்புக்களுடன் சேர்ந்து அவர்கள் திறமையைக் கட்டியெழுப்புவதற்காகச் செயற்பட்டது. மனித உரிமைகள் பற்றிய கல்வி மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை மேம்படுத்தி வசதிபடைப்பதற்காக மனித உரிமைகள் கல்விக்கான மையம் அமைக்கப்பட்டது.

மனித உரிமைகள் விடயத்தில் பல தலைவர்களைப் பயிற்றுவிக்க மனித உரிமைகள் கல்விக்கான நிலையம் உதவியதோடு, கீழ்பட்டதாரிகளுக்கான கற்கை நெறியையும் மனித உரிமைகள் நடவடிக்கையாளர்களுக்கு டிப்ளோமா கற்கை நெறியொன்றையும் அது அறிமுகம் செய்தது. இலங்கையில் மனித உரிமைகளைக் கட்டிக் காக்கும் நாடு பூராவும் வியாபித்த முயற்சியில் இரு முக்கிய குழுக்களான ஆயுதப் படைகள் மற்றும் பொலிசாருக்கான கல்வித் திட்டங்களும் முன்வைக்கப்பட்டன.

விவசாயத்தைப் பன்முகப்படுத்தல்

பிரதான உணவான அரிசியில் இலங்கை தன்னிறைவை நெருங்கிக் கொண்டிருந்த போது 1984 இல் பன்முகப்படுத்தப்பட்ட விவசாய ஆராய்ச்சிக் கருத்திட்டம் (DARP) முன்னெடுக்கப்பட்டது. ஆயினும், ஏனைய பயிர்களில் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் நிலவின. டார்ப் என்றழைக்கப்பட்ட இத்திட்டம், யூஎஸ்எய்ட் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றுக்கிடையிலான ஒரு ஒப்பந்தமாகும். சிறு பண்ணைகளில் பயிர் உற்பத்தியையும் பன்முகப்படுத்தலையும் அதிகரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் விதைகளை உற்பத்தி செய்து கைமாற்றுவதற்காக திணைக்களத்தின் நிறுவகத் திறனைப் பலப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அதன் இறுதி மூன்றாண்டுகளான, 1991- 1993 காலப்பகுதியில், தனியார் துறை விதை தொழில்முயற்சிகளையும் பெறுமதி கூடிய ஏற்றுமதிக்கான அலங்காரத் தாவரங்களையும் அபிவிருத்தி செய்வதில் டார்ப் கவனம் செலுத்தியது. இம்முயற்சி இறக்குமதிக்குப் பதிலாக உற்பத்தி செய்வதுக்கு மாறாக, சந்தைகளைத் திருப்திப் படுத்தவும் உணவை விட பண்ணைகளின் வருவாய் மற்றும் தொழில்வாய்ப்பினை அதிகரிக்கவும் அழுத்தத்தைக் கொடுத்தது. தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கு வெகுஜனத் தொடர்பினைப் பாவித்து, கிராக்கியினால் உந்தப்பட்ட ஆராய்ச்சியை அது போசித்தது. கருத்திட்ட நடவடிக்கையின் மாற்றங்கள், சந்தைப் பொருளாதாரம், தனியார் துறை அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆகியவற்றுக்குச் சார்பாக அரசாங்கக் கொள்கைகளில் ஒரு மாற்றத்தை அது ஏற்படுத்தியது.

விவசாயத்துறையின் போக்கிலும் அதன் திசையிலும் ஏற்படுத்திய பாரியதொரு மாற்றம் டார்பினின் கருத்திட்டத்தின் முக்கியமானதொரு பெறுபேறாகும். கருத்திட்டம் பின்வருவனவற்றை ஏற்றுக் கொள்ள வைத்தது: (அ) தன்னிறைவை விட உணவில் தன்னம்பிக்கையுள்ள கொள்கை, (ஆ) தனியார் துறையின் முக்கியத்துவம், (இ) கிராமிய வறியவர்களின் வருமானங்களை அதிகரிப்பதற்காக விவசாயத்தை வாணிபமயமாக்கல் மற்றும் பன்முகப்படுத்தல், அத்துடன், (ஈ) உணர்வுள்ள வாடிக்கையாளர்களுக்கு அரசாங்க ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பச் சேவைகளின் அவசியம்.

எஸ். சீ. சார்ல்ஸ் "டார்ப் வழங்கிய நன்மைகள் மீது விவசாயிகள் முன்னேறிச் செல்வதை நீங்கள் இன்று கூடக் காணலாம்."

முழுமையான அரசாங்கத் துறை விதை வர்த்தகத்திலிருந்து விலகித் தனியார் துறை விதை இறக்குமதிக்கான நகர்வு மற்றும் வளர்ந்து வரும் உள்நாட்டு விதை உற்பத்திக் கைத்தொழில் ஆகியவற்றுக்காக நிறுவக ரீதியில் மற்றும் கொள்கை அபிவிருத்திக்காக டார்ப் இடம் இருந்து கிடைத்த உதவி வசதியளித்தது. பன்முகப்படுத்தப்பட்ட சிறிய பண்ணைப் பயிர் உற்பத்தியுடன் இணைந்து செயற்படும் விவசாயத் திணைக்களத்தின் திறனை டார்ப் பலப்படுத்தியது. திருத்தப்பட்ட ஆராய்ச்சித் திட்டமிடல், 448 பணியாட் தொகுதியினருக்கான வெளிநாட்டுப் பயிற்சி, தொழில்நுட்ப உட்பாய்ச்சல் திட்டங்கள் மற்றும் சீர்திருந்திய வசதிகள் அத்துடன் விவசாய ஆராய்ச்சி நிலையங்களுக்கான உபகரணங்கள் போன்றவை ஆராய்ச்சித் திறனை அதிகரிக்கச் செய்தன. அலங்காரச்செடிகள் ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவுவதற்கும் டார்பின் வழங்கிய உதவி துணையாக இருந்தது. பன்முகப்படுத்தப்பட்ட பயிர்கள் மீதான ஆராய்ச்சியைப் பரீட்சித்துப் பார்க்கும் நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தன. வினைத்திறனற்ற மற்றும் கூடிய செலவினைக் கொண்ட புற விஸ்தரிப்பு அலுவலர்களை வாபஸ் பெறத் தன் செயற்பாட்டை மாற்றிக் கொள்ளவும் சிக்கனமான விஸ்தரிப்புத் திட்டத்தை வெகுஜனத் தொடர்பு மூலம் மேற்கொள்ளும் திறனைக் கட்டியெழுப்பவும் இக்கருத்திட்டம் விவசாயத் திணைக்களத்துக்கு உதவியது.

விவசாயத்துறையின் போக்கிலும் அதன் திசையிலும் ஏற்படுத்திய பாரியதொரு மாற்றம் டார்பினின் கருத்திட்டத்தின் முக்கியமானதொரு பெறுபேறாகும்.

அண்மையில், டார்பின் வெற்றியை நினைவு கூர்ந்த யூஎஸ்எய்ட் கருத்திட்ட அலுவலர் எஸ்.சீ. சார்ல்ஸ், " விவசாயத் திணைக்களத்துடன் மிக நெருங்கி யூஎஸ்எய்ட் செயற்பட்டதாலும், முழுமையான உதவியை வழங்கியதாலும், டார்பினைச் சிறந்ததொரு கருத்திட்டமாக இலங்கை அரசாங்கம் கணித்தது. டார்ப் வழங்கிய நன்மைகள் மீது விவசாயிகள் முன்னேறிச் செல்வதை நீங்கள் இன்று கூடக் காணலாம்" எனக் குறிப்பிட்டார்.

வலு குறைந்தோருக்கான உதவி

இலங்கையில் நீண்ட காலமாக நடைபெற்று வந்த யுத்தம் சிவில் சனத்தொகையைப் பாரிய அளவில் பாதித்துள்ளது. இன்று கூட பண்ணைகள் மற்றும் கிராமங்களில் நிலக் கண்ணி வெடிகள் தூவப்பட்டுக் காணப்படுகின்றன. யுத்தம் காரணமாக நேரடியாக அங்கங்களை இழந்த சுமார் 30,000 அல்லது அதற்கு அதிகமானோர் இருக்கலாம் என மதிப்பிடு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு, யுத்தம் காரணமாகப் பாரதூரமான நோய்களும் பரவியுள்ளன. அங்கவீனமுற்றவர்களுள் சுமார் 80 சதவீதமானோர் 18 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருப்பதால், இலங்கையின் இளைஞர்கள் பாரிய இழப்பினை எதிர்நோக்கியுள்ளனர்.

1989 இல் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் காங்கிரஸ் சபை பட்ரிக் ஜே. லீஹி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர் நிதியத்தை நிறுவியதோடு அதனை யூஎஸ்எய்ட் நிருவகித்து வருகிறது. குறிப்பாக வெடிக்காமல் கிடந்த வெடிமருந்துகள், மிதிவெடிகள் ஆகியவற்றால் ஏற்பட்ட அங்கவீனம் காரணமாக வலுவற்றோராக வாழ்ந்து வருவோர் மற்றும் தடுப்பு மருந்து நடவடிக்கைகள் தடைப்பட்டதால் விளையக்கூடிய போலியோ அத்துடன் வேறு ஏதும் தடுக்கப்படக் கூடிய வியாதியினால் நடக்க முடியாதவர்கள் ஆகியோருக்கு இந்நிதியம் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது.

இலங்கையில் செயற்கை அவயவங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் பற்றிய தேவைகள் மதிப்பீடொன்று 1990 இல் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு அடுத்த வருடம், கொழும்பு ஆப்த நண்பன் சங்கத்தின் ஜெய்ப்பூர் பாதத் திட்டத்துடன் இணைந்து யூஎஸ்எய்ட் செயற்பட ஆரம்பித்தது. செயற்கை அவயவங்களைத் தயாரித்து வலு குறைந்தோருக்குப் புனருத்தாபனச் சேவைகளை ஜெய்ப்பூர் பாதத் திட்டம் வழங்குகிறது. கொழும்பு, கண்டி,

அங்கவீனமுற்றவர்களுக்கான உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக சக்கர நாற்காலி கூடைப்பந்தாட்டம் விளங்குகிறது

காலை இழந்த ஒரு சிறுமி யாழ்ப்பாணத்திலுள்ள ஜெய்ப்பூர் நிலையத்தில் தனது செயற்கைக் காலைப் பரீட்சித்துப் பார்க்கின்றார்.

காலி மற்றும் யாழ்ப்பாணத்தில் இத்திட்டத்தின் வேலைத் தளங்கள் அமைக்கப்பட்டன.

இன்று, வலு குறைந்தோருக்கான முழுமையான புனருத்தாபனத் திட்டமாக யூஎஸ்எய்ட் திட்டம் விளங்குகிறது. சர்வதேச அரச சார்பற்ற அமைப்பான, மோடிவேசன் சரிடபல் ட்ரஸ்ட் (Motivation Charitable Trust) அதனை முகாமைத்துவப்படுத்துகிறது. இந்த நம்பிக்கைப் பொறுப்பு ஆறு இலங்கை வலுகுறைந்தோருக்கான அமைப்புக்களுடன் பங்காளராகச் செயற்படுகிறது: கண்டியிலுள்ள வலு குறைந்தோருக்கான நிலையம், தங்காலையில் உள்ள நவஜீவன, ராகமையில் உள்ள முதுகந்தண்டு காயமடைந்தோர் சங்கம், கொழும்பிலுள்ள வலுவிழந்தோர் புனருத்தாபனத்துக்கான இலங்கை மன்றம், யாழ்ப்பாணத்திலுள்ள வலு குறைந்தோர் புனருத்தாபன யாழ்ப்பாண ஜெய்ப்பூர் மத்தி மற்றும் காலியிலுள்ள வலு குறைந்தோர் தெற்கு நிலையம் ஆகியவை அவையாகும்.

செயற்கைப் பாதங்கள் மற்றும் பாதங்களுக்கான பொருத்திகள் பற்றிய தொழில்நுட்பவியலாளர்களுக்கான சர்வதேச மட்டத்திலான பயிற்சி மற்றும் அத்தாட்சிப்படுத்தல், பொலிபிரபிலீன் தொழில்நுட்பம் மற்றும் தற்கால சில்லு நாற்காலிகள் அத்துடன் பாத உபகரணங்கள் உற்பத்தி இந்நடவடிக்கைகளுள் அடங்கும்.

நிலைத்தகவுள்ள பொருளாதார அபிவிருத்திக்கான விவசாயத் தொழில்முயற்சிகள்

பன்முகப்படுத்தப்பட்ட விவசாய ஆராய்ச்சிக் கருத்திட்டம் முடிவடைந்ததுடன், விவசாயத்துறையைக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டதன் பின், அடுத்த கட்டம் தனியார் துறை மீது கவனம் செலுத்துவதாகும் என்பதை யூஎஸ்எய்ட் உணர்ந்து கொண்டது. அதன் விளைவாக, விவசாயத் தொழில்முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டம் (AgEnt) 1992 இல் ஆரம்பிக்கப்பட்டது.

அக்என்ற்றின் தனியார் துறை விவசாயத் தொழில்முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டம் எட்டு வருடங்களைக் கொண்ட 1992 – 2000 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதாகும். வர்த்தக மற்றும் சுற்றாடல் ரீதியில் நிலைத்தகவுள்ள விவசாயத் தொழில்முயற்சிகளை ஏற்படுத்தி விசாலிப்பதற்கான உதவியை வழங்குவதன் மூலம் இலங்கையில் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுப்பது அக்என்ற்றின் பொறுப்பாகவிருந்தது.

மிகத் தேர்ச்சிபெற்ற உள்நாட்டு உசாத்துணையாளர்களைக் கொண்ட உயர்தொழில் புரியும் ஊழியர்களையும் சர்வதேச நிபுணர்களையும் அக்என்ற் கொண்டிருந்ததோடு அவர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்: விவசாய வர்த்தகம் / நிதி முகாமைத்துவம், கொள்கை கலந்துரையாடல், உற்பத்தி, சந்தைப்படுத்தல் / கமம் சார்ந்த பதனிடுகை மற்றும் துணைச் சேவைகள் என்பவற்றை அக்குழுக்கள் மேவின. விவசாய வர்த்தக அபிவிருத்திக்கு சந்தை நில-

இது போன்ற புதுத் தொழில்வாய்ப்புக்களை உற்பத்தி செய்து விவசாயப் பயிர்களை புது வழிகளில் பாவிப்பதற்காக, அநுராதபுரத்திலுள்ள சிந்தன பழச்சாற்றுத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அக்என்ற் உதவி வழங்கியது.

வரங்களைக் கொண்ட அணுகுமுறையைப் பாவித்து தொழில்முயற்சியாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசாங்க கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோருடன் இப்பணியாட் தொகுதியினர்

இலங்கையிலுள்ள சகல மெக்டொனால்ட் ரெஸ்டோரண்டுகளில் பாவிக்கப்படும் சலாது இலைகள் அல்பர்ட் கலவையூட்டப்பட்ட பொலி டனல்களிலேயே வளர்க்கப்படுகின்றன. இலங்கையில் மெக்டொனால்டுக்கு ஐஸ்பேர்க் சலாது இலைகளை வழங்கும் ஏக விநியோகஸ்தர் அபான்ஸ் இன் தொடர்பையும் அக்என்ற் ஏற்படுத்தியது.

இணைந்து செயற்பட்டனர். தமது வாடிக்கையாளர்களுக்காக அக்என்ற் பணியாளர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தைகளை இனங்கண்டதோடு, எப்போது எவ்வாறு உற்பத்தி செய்யலாம் மற்றும் அச்சந்தைகளுக்கான விநியோகத்தை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதில் அவர்களுக்கு உதவியும் வழங்கினர்.

நேரடியான மற்றும் பெறுபேறுகள் சார்ந்த அணுகுமுறையைப் பாவிக்கும் விவசாய வர்த்தக அபிவிருத்தியானது, விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் சர்வதேச போட்டாபோட்டியிடும் உத்தி ஆகியவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தியது. இலங்கையருக்கும் இலங்கையின் விவசாயக் கைத்தொழிலுக்கும் காட்டிய ஈடுபாட்டுக்காக இன்று கூட அக்என்ற்றின் முகாமைத்துவப் பணிப்பாளர் டேவிட் அன்டர்சன் மெச்சப்படுகிறார்.

இலங்கையின் விவசாயத்துறையில் அக்என்ற் நிலையானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது. பொலி டன்னல்ஸ் மற்றும் அல்பேர்ட் கலவை ஆகிய இரண்டும் இன்று கூடப் பாவனையிலிருக்கும் அக்என்ற் அறிமுகப்படுத்திய தொழில்நுட்பத்தின் உதாரணங்களாகும். மரக்கறி வகைகள், பழவர்க்கங்கள் மற்றும் மலர்களை வளர்ப்பதற்கு மிகவும் ஏற்ற சூழலாக இலங்கையின் கிராமப்புறங்களில் பொலி டன்னல்ஸ் அல்லது கிறீன் ஹவுஸ்கள் காணப்படுகின்றன.

பொலி டன்னல் மாதிரி ஐக்கிய அமெரிக்கக் குடியரசிலிருந்து கொண்டு வரப்பட்டதோடு, அதனைப் பொருத்துவது மற்றும் பாவிப்பது பற்றி உள்நாட்டு விவசாயிகளுக்கு விளக்கமளிப்பதற்காக நிபுணர் ஒருவர் இங்கு வரவழைக்கப்பட்டார். ஆரம்பத்தில், பொலி டன்னலின் செலவை அக்என்ற் கருத்திட்டம் சில வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து

கொண்டது. பின்னர், தமது முதலீட்டிலிருந்து பாரிய நன்மைகளை அடைய முடியும் என்பதை உணர்ந்ததும், விவசாயிகள் தாமாகவே அவற்றை நிர்மாணித்துக் கொண்டனர்.

அல்பர்ட் டன்னல்களில் வளர்க்கப்படும் செடிகளுக்கான உரத்தை வழங்குவதற்கு அல்பர்ட் கலவை உற்பத்தி செய்யப்பட்டது. நைதரஜன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் அத்துடன் சிறிதளவு மக்னீசியம் மற்றும் பொரொன் ஆகிய முக்கியமான ஊட்டச் சத்துக்களை இக்கலவை உள்ளடக்கியது. இக்கலவையை உற்பத்தி செய்த இலங்கையைச் சேர்ந்த விவசாயப் பொருளியலாளர் மற்றும் அக்என்ற்றின் முன்னைய ஊழியரான காலஞ்சென்ற திரு. அல்பர்ட்டின் பெயரில் இக்கலவை அழைக்கப்பட்டது. இதற்கான உரிமை இலங்கைக் கம்பனியொன்றினால் பெறப்பட்டுள்ளதோடு இன்று கூட அது உபயோகத்தில் இருந்து வருகிறது.

பொலி - ரனல்ஸ்.யூவி- தடுக்கும் ஆற்றல் உள்ள பொலிதீனால் மூடப்பட்டு கல்வனைஸ்ட் பைப்பினால் பிறேம் செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் நாட்டுப் புறத்ததைப் போல காய்கறிகள், பழங்கள் மற்றும் வெட்டுப் பூக்களை வளர்ப்பதற்குத் தேவையான சூழலைத் தருகிறது.

அக்என்ற் இதுபோன்ற பாஸ்ரா (PASTA) செய்யும் தொழில்முயற்சியை விரிவுபடுத்துவதற்கு உதவியது. இந்த நிகழ்ச்சித் திட்டம் தொழில் முயற்சியாளர்கள் எதை எப்படி உற்பத்தி செய்வது என்பதைத் தீர்மானிப்பதில் உதவி புரிந்தது.

அக்என்ற் பெற்ற சித்திகளைத் தொடர்ந்து முன்னேற்றுவதற்காக, கருத்திட்டத்தின் இறுதி வருடம், தேசிய விவசாய வர்த்தக சபை என்றதொரு பொதுவான அமைப்பை ஏற்படுத்துவதில் செலவிடப்பட்டது. "அக்என்ற் இலங்கையில் அதன் பங்களிப்புக்கான புதியதொரு விஸ்தரிப்பை ஏற்படுத்துவதற்கு தேசிய விவசாய வர்த்தக சபை தோதானதொரு முடிவு என நாம் நினைக்கிறோம்" என அன்டர்சன் குறிப்பிட்டார். "உதவியளிப்போர் நிதி வழங்கிய கருத்திட்டம் ஒன்றில் இருந்து நீண்ட கால நிலைத்தகவுள்ள (சம்பந்தப்பட்ட) துறையினால் செயற்படுத்தப்படும் பங்களிப்பு அமைப்பாக அக்என்ற் மாறியுள்ளது".

அக்என்ற் (AgEnt) சாதனைகளும் இலக்குகளும்

நடவடிக்கை	இலக்குப் பார்க்கப்பட்ட மட்டம் (1997)	நிஜ மட்டம் (2000)	இலக்கின் %
புதிய /விசாலிக்கப்பட்ட விவசாய தொழில்முயற்சிகள்	350	412	118%
அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பங்கள்	100	327	327%
அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய உற்பத்திகள் / சந்தைகள்	40/40	162/190	405%/475%
அதிகரிக்கப்பட்ட முதலீடுகள் - அக்என்ற் வாடிக்கையாளர்கள்	$12.0 மில்லியன்	$35.3 மில்லியன்	294%
உதவியளிக்கப்பட்ட துறைகளில் அதிகரித்த ஏற்றுமதிகள்	$4 மில்லியன்	$374 மில்லியன்	9350%
மதிப்பிடப்பட்ட அதிகரித்த வருடாந்த வருமானம் - விவசாயத் துறை	$8.2 மில்லியன்	$55.2 மில்லியன்	673%
உற்பத்தி செய்யப்பட்ட புதிய தொழில்வாய்ப்புகள்	10,000	20,971	210%
வாடிக்கையாளர் தொடர்புகள்	3,120	15,482	496%
வெளிநாட்டு அவதானிப்பு சுற்றுலாக்கள்	60	294	490%
பயிற்றப்பட்ட ஆட்கள்	1,400	40,080	2914%
% பெண் பயிலுநர்கள்		35%	
கொள்கை சீர்திருத்தங்கள்	12	20	166%

தும்பு: "வாழ்வாதார மரத்தின்" அறுவடை

தென்னை மரத்தின் சகல பாகங்களையும் பிரயோசனத்துக்கு எடுக்க முடியுமாதலால், இலங்கையில் பொதுவாக அதனை "வாழ்வாதார மரம்" என அழைப்பர். தேங்காயைச் சூழவிருக்கும் இழைகள் தும்பு எனப்படுகிறது. அதனை மூலப் பொருளாக விற்கலாம் அல்லது பெறுமதி கூடிய தும்புத்தடிகள், பிரஷ்கள், சப்பாத்து வருடிகள், கயிறு, படுக்கை, பின்னப்பட்ட மற்றும் தைக்கப்பட்ட இயற்கை துணிகள், இறப்பர் கலந்த தும்பு மெத்தைகள் மற்றும் ஆசனங்களை நிரப்புவது ஆகியவற்றுக்காகப் பதனிடலாம்.

இலங்கையின் சிறிய உள்நாட்டுச் சந்தை காரணமாக, இலங்கையில் தும்பு மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களின் உற்பத்தி கிட்டத்தட்ட முழுமையாகப் புறக் கிராக்கியினால் உந்தப்படுகிறது. உலகச் சந்தைக்கு ஆகக் கூடிய அளவு தும்பினை இலங்கை வழங்குவதோடு, இந்தியாவுடன் சேர்ந்து உலகளாவிய தும்பு ஏற்றுமதிகளின் சுமார் 90 சதவீதத்தை இலங்கை மேவுகிறது.

பலதரப்பட்ட கருத்திட்டங்களினூடாக இலங்கையில் தும்புக் கைத்தொழிலுக்கு யூஎஸ்எய்ட் உதவி அளித்துள்ளது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மட்டையிலிருந்து தும்பைப் பிரித்தெடுப்பதற்கான இயந்திரங்களை எட் என்ட் வழங்கியது. தும்பை எடுத்ததும் தும்புத் தூள் உப உற்பத்திப் பொருளாகக் கிடைக்கிறது. பல வருடங்களாக இந்தத் தும்புத் தூள் பாவனைக்கெடுக்கப் படவில்லை. அதிக அளவிலான தும்புத் தூள் சுற்றாடலையும் மாசடையச் செய்தது. செடிகளை நடும் ஒரு அடித்தளமாக தும்புத் தூளைப் பாவிப்பதை இனங்காண்பதற்கு எட் என்ட் உதவியது. இது மாசடைதல் பிரச்சினையைத் தீர்த்ததுமல்லாமல், இலங்கைக்கானதொரு புதிய ஏற்றுமதிப் பொருளையும் தோற்றுவித்தது.

பல்வேறுபட்ட சக்தியையும் பிரயோசனத்தையும் உடைய கயிறாக தும்பு திரிக்கப்படுகிறது. அதனை பாய்களாகவோ தேயிலைக் கொழுந்துகளை வைக்கும் பைகளாகவோ நெய்யலாம். அமெரிக்க மற்றும் ஜப்பானிய மலையடிவாரங்களிலும் ஓடைப்படுக்கைகளிலும் மண்ணரிப்பைத் தடுப்பதற்காகப் பாவிக்கப்படும் பெரிய பாய்களை தும்பினால் நெய்வதைக் கொண்டு யூஎஸ்எய்ட் புதியதொரு ஏற்றுமதிப் பொருளை இலங்கைக்கு அறிமுகம் செய்ய உதவியது. இப்பாயில் பெரிய இழைகள் உள்ளதால் அவற்றினூடாக புற்கள் வளர முடிவதோடு அவை இயற்கைப் பொருளினால் தயாரிக்கப்பட்டுள்ளதால் காலக்கிரமத்தில் பாதுகாப்பாக உயிரியல் ரீதியில் மண்ணோடு சேர்ந்தும் விடுகின்றன.

தும்புக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தனிநபர் தொழில்முயற்சியாளர்களுக்கும் யூஎஸ்எய்ட் உதவியளித்தது. அவர்களுள் ஒருவரான, குருநாகல் பண்டாரநாயக்க எக்ஸ்போர்ட்ஸ் (தனியார்) நிறுவனத்தின் எஸ்.என்.எஸ்.பி. பண்டாரநாயக்கா அக்என்றின் ஆதரவுடன் தும்பு பதனிடும் புது முறைகளைக் கற்பதற்காக இந்தியாவுக்குச் சென்றார். ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சிகளில் கலந்து கொள்ளவும் அவருக்கு உதவி கிடைத்ததோடு, அதன் விளைவாக ஐக்கிய அமெரிக்கக் குடியரசுக்கு அவர் தும்பு உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்துள்ளார்.

அம்பலாங்கொடையில் தொழிலாளி ஒருவர் தும்புக் கயிற்றினால் பாய் ஒன்றை நெய்கிறார்.

இன்று, தும்பு பதனிடுவதைச் சீர்திருத்துவதற்காக சிறு தொழில்முயற்சிகளுக்கு புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கான நிதியை யூஎஸ்எய்ட் வழங்குகிறது. தும்பை எடுப்பதற்காக பழைய வழக்கப்படி ஆறு மாதங்களுக்கு மட்டையை நீரில் ஊற வைக்கும் முறையை அகற்றி உற்பத்தியைத் துரிதப்படுத்த புதிய உபகரணங்கள உதவும். பெரிய இயற்கை துணிகளை சந்தைக்காகத் தயாரிப்பதற்கும் பாரம்பரிய உற்பத்திகளான மெத்தைகள், கால்துடைப்புக்கள் மற்றும் கயிறு உற்பத்தி செய்யவும் புதிய மற்றும் விசாலமான நெசவு இயந்திரங்கள் வழிகோலியது.

தும்புக் கைத்தொழிலும் யூஎஸ்எய்ட்டின் போட்டாபோட்டித் திறன் திட்டத்தின் கீழ் உதவி பெறும் "கொத்தணி" கைத்தொழில்களுள் ஒன்றாகும். மேலும், கடற்கோள் அனர்த்தத்தினால் அழிந்து போன சிறிய தொழில்முயற்சிகளை சிறு வர்த்தகர்கள் ஆரம்பிப்பதற்காக ரிவைவ் சுனாமிக்குப் பிந்திய ஜீவனாதார மீட்சிக் கருத்திட்டம் தும்பு திரிக்கும் சில்லுகளையும் சார்ந்த பொருட்களையும் கொடுத்துதவியது.

USAID FROM THE AMERICAN PEOPLE

இலங்கைக் கறுவாவின் பாரம்பரியத்தைப் பேணல்

கறுவா இலங்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளது. சினமோமொம் செலாநி-கம் என்ற அதன் பெயர் ஸ்ரீ லங்காவின் முந்திய சிலோன் என்ற பெயரிலிருந்தே பெறப்பட்டிருந்தது. 16ஆம் நூற்றாண்டில் இத்தீவை போத்துக்கேயர் ஆக்கிரமிப்புச் செய்ததும் பின்னர் ஒல்லாந்தர் 17 ஆம் நூற்றாண்டில் அவர்களுடன் போரிட்டதும் கறுவா போன்ற வாசனைத் திரவியங்களுக்கேயாகும்.

நாட்டின் பிரசித்தி பெற்ற கறுவாவின் பாரம்பரியத்தைப் பேணுவதற்காக, நிஜ கறுவாவுக்கான உரிய ஸ்தானத்தை வாசனைத் திரவியச் சந்தையில் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையின் பயிர்ச்செய்கையாளர்களுக்கும் பதனிடுவோருக்கும் யூஎஸ்எய்ட் உதவி வழங்குகிறது. இன்று கூட உலகின் முக்கிய கருவா மூலமாக விளங்கும் இலங்கை, உலகளாவிய அறுவடையில் 60 சத வீதத்தையும் இவ்வாசனைத் திரவியத்தின் மிகச் சிறந்த வகைக-ளில் ஐந்தில் நான்கு பகுதியையும் உற்பத்தி செய்கிறது.

சுவை குறைந்த ஆனால் பரவலாகக் கிடைக்கக்கூடிய கஸ்ஸியா கலக்கப்பட்ட நிலையில், இலங்கையின் கறுவா உற்பத்தியாளர்கள் பொருள் மற்றும் விலை வித்தியாசமின்மையால் சரித்திர ரீதியாக நட்டமடைந்தது மாத்திரமன்றி, கடற்கோள் அனர்த்தத்தைத் தொடர்ந்து கடல் நீர் நிலத்துக்குள் வந்ததால் அவர்கள் மேலும் கஸ்டத்தை எதிர்நோக்க நேர்ந்தது. சுமார் 125 ஏக்கர் கருவா பயிரிடப்பட்ட காணிகள் கடல் நீர் உட்புகுந்ததால் அழிந்ததோடு, நான்கு வர்த்தக அடிப்படையில-ான நாட்டுப் பண்ணைகளும் பெருமளவு சேதமடைந்தன. எல்லாமாக, 2,000 க்கும் அதிகமான தொழிலாளர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் ஜீவனோபாயம் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டது.

இத்தீவின் தெற்கு மற்றும் மேற்குக் கரையோரங்களில் வாழ்ந்து வரும் இந்த விசேட சமூகங்கள் சிலவற்றுக்கு கறுவா பயிர்ச்செய்கையும் பதனிடுதலும் ஒரு வாழ்க்கை முறையாக அமைந்துள்ளது. அவர்களுள் அநேகர் ஒரு ஏக்கருக்குக் குறைவான சிறிய காணிச் சொந்தக்காரர்களாக இருப்பதோடு, கடந்த ஐந்நூறு வருடங்களுக்கும் மேலாகப் பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டு வந்த பழமை வாய்ந்த உற்பத்தி முறைகளையே அவர்கள் பின்பற்றி வருகின்றனர்.

வாசனைத் திரவியங்கள் மற்றும் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் சங்கத்தை அமைத்த எக் என்ட் கருத்திட்டத்தைத் தொடர்ந்து கறுவாக் கைத்தொழிலுக்கான யூஎஸ்எய்ட் உதவி ஆரம்பமாகியது. தற்போது இக்கைத்தொழில் சங்கம் வாசனைப் பொருள் சபை என்று அழைக்கப்படுவதோடு அது யூஎஸ்எய்ட் இன் போட்டாபோட்டித் திறன் திட்டத்தின் ஓர் அங்கமாக உள்ளது. வாசனைத் திரவியச் சபையுடன் இணைந்து செயற்பட்ட யூஎஸ்எய்ட் இன் கடற்கோள் அனர்த்தத்துக்குப் பிந்திய ரிவைவ் முன்னெடுப்பு, கறுவாவை வினைத்திறனுடன் பதனிடுவதற்கான உள்நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பத்தைப் பாவிப்பதற்கு சமூகங்களுக்கு உதவியை வழங்கியது.

கடற்கோள் அனர்த்தத்தைத் தொடர்ந்து தமது ஜீவனோபாயங்களை இழந்த மக்களின் வாழ்வாதாரத்தை மீட்பதற்கானதொரு வழியாக ரிவைவ் இனை யூஎஸ்எய்ட் செயற்படுத்தியது. புதிய உபகரணங்கள், விசேடமாக வடிவமைக்கப்பட்ட மேசை, மாற்றுப் பயிர் வளங்கள், மற்றும் விவசாய உட்பாய்ச்சல்களை சமூகங்களுக்கான மான்யமொன்றின் கீழ் கறுவா உற்பத்தியாளர்களுக்கு ரிவைவ் வழங்கியது.

"கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இத்தொழிலாளிகளுக்கு வினைத்திறன் கூடிய உபகரணங்களை யூஎஸ்எய்ட் வழங்கியது, முன்பிருந்ததை விடச் சிறந்த நிலைக்கு கறுவாக் கைத்தொழிலை எடுத்துச் செல்ல பேருபகாரமாயிருந்தது" என வாசனைத் திரவியங்கள் சபையின் தலைவர் சாரதா டி சில்வா தெரிவித்தார். கறுவாப் பட்டையை உரிக்கும் உபகரணத் தொகுதி, புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட கறுவாப் பட்டை உரிக்கும் மேசையும் கதிரையும் அடங்கிய அலகுகள், தற்கால நாட்டுப் பயிர்கள், இராசாயனப் பொருட்கள் மற்றும் உர வகைகளை பதனிடுவோருக்கு வழங்கும் சந்தர்ப்பத்தில் இது பற்றி அவர் குறிப்பிட்டார்.

"கறுவாத் தொழிலில் வேலை செய்வதின் கௌரவத்தை மேம்படுத்துவது இக்கைத்தொழிலுக்குத் தொழிலாளர்களை ஈர்த்து அதில் தக்க வைப்பதற்கு முக்கியமானதாகும். யூஎஸ்எய்ட வழங்கிய பட்டை உரிக்கும் மேசைகள், நிலத்தில் இருந்து கொண்டு வேலை செய்யாமல் நிமிர்ந்திருக்கவும், ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் தொழில் பற்றிய கௌரவத்தை ஏற்படுத்தவும் உதவுகின்றன" என கருவாத் தோட்டச் சொந்தக்காரரான வீஜித் ஜயதிலக்க கூறினார்.

யூஎஸ்எய்ட் மிசன் பணிப்பாளர் டாக்டர் கரோல் பேக்கரும் தென்மாகாண கவர்னர் கிங்ஸ்லி ரீ. விக்கிரமரத்னவும் யூஎஸ்எய்ட்டினால் வழங்கப்பட்ட கறுவாப்பட்டை உரிக்கும் புதிய சாதனம் தொழிற்படுவதை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர்.

குளிர் களஞ்சியத் தொடர்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்காக நெல் உற்பத்தியை விட்டு விலகி அதிக இலாபமீட்டித் தரும் பயிர்களான வெள்ளரிக்காய், ஒக்ரா மற்றும் ஜேர்கின்ஸ் போன்ற பன்முகப்படுத்தப்பட்ட பயிர்களை மேற்கொள்வதற்காக மஹாவெலி திட்ட பி பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுடன் மஹாவலி விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்திக் கருத்திட்டம் (MARD) இணைந்து 1987 இல் செயற்பட ஆரம்பித்தது. உற்பத்தியை ஏற்றுமதிக்காகப் பாதுகாப்பாகப் போக்குவரத்துச் செய்வதற்கான அடுத்த முக்கிய நடவடிக்கையான பொதி கட்டும் இடம் மற்றும் குளிர் களஞ்சியத் தொடரை அமைப்பதில் 1992 இல் மார்ட் ஈடுபட்டது.

மார்ட் கருத்திட்டத்துடன் செயற்படுவதற்காக 1992 இல் ரெஸ் கம்பனித் தொகுதி, வரையறுக்கப்பட்ட ரெஸ் அக்ரோ நிறுவனத்தை நிறுவியது. ஆரம்பத்தில் ரெஸ் மீனுடன் சம்பந்தப்பட்டிருந்த போதிலும், இதுவே அது முதற்தடவையாக பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளில் ஈடுபட்ட சந்தர்ப்பமாகும்.

அரலகாவிலவில் ரெஸ் பொதி கட்டும் தொகுதி அத்துடன் இன்றுகூடப் பாவனையில் இருக்கும் அறுவடைக்குப் பிந்திய பதனீட்டுக்கான நீர் குளிர் சாதனத்தையும் அமைப்பதற்கான செலவில் அரை வாசியை யூஎஸ்எய்ட் வழங்கியது. குளிர் களஞ்சியத் தொடரை அமைப்பதற்காக இரண்டு குளிர்சாதன ட்ரக் வண்டிகளுக்கு யூஎஸ்எய்ட் நிதியளித்ததோடு மிக அண்மையிலேயே அவற்றை ரெஸ் அக்ரோ ஈடு செய்தது.

வயல்களிலிருந்து தொழிற்சாலை வரை குளிர் களஞ்சியத் தொடரை பராமரிக்கும் வசதிகளை கம்பனிக்கு வழங்கும் புதிய பொதிகட்டும் தொகுதியையும் ஹைட்ரோ கூலரையும் யூஎஸ்எய்ட் உதவியுடன் பெற்றுக் கொண்டதன் மூலம் ரெஸ் அக்ரோ காய்கறி சந்தைப்படுத்தலிலும் ஈடுபட்டுள்ளது.

ஏற்றுமதிக்காக மொத்த விற்பனயாளர்களுக்கு ரெஸ் அக்ரொவினால் விற்பனை செய்யப்படவுள்ள ஒக்ரா அறுவடையை ஒரு விவசாயி காட்டுகிறார்.

அரலகாவிலவில் ரெஸ் பொதி கட்டும் தொகுதி இன்றுகூடப் பாவனையில் இருக்கும் அறுவடைக்குப் பிந்திய பதனீட்டுக்கான நீர் குளிர் சாதனத்தையும் அமைப்பதற்கான செலவில் அரை வாசியை யூஎஸ்எய்ட் வழங்கியது.

பி பிரதேசத்தில் இருந்து தொடர்ந்தும் சுமார் 400 சிறிய விவசாயிகளிடமிருந்து அவர்கள் உற்பத்திகளை ரெஸ் அக்ரோ விலை கொடுத்து வாங்குவதோடு, அதன் நடவடிக்கைகளை ஏனைய பிரதேசங்களுக்கும் அது விசாலித்துள்ளது. மார்ட் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட வெள்ளரிக்காய் மற்றும் ஒக்ரா இன்று கூடப் பயிரிடப்படுவதோடு, அவ்வுற்பத்திப் பொருட்களை ரெஸ் அக்ரோ முக்கியமாக ஏற்றுமதிக்காக பெரும்பாலும் மொத்த விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்கிறது.

15 தொழிலாளிகளுடன் ஆரம்பித்த ரெஸ் அக்ரோவில் இப்போது 90 ஊழியர்கள் தொழில் புரிகிறார்கள். ஏனைய கம்பனிகளுக்கும் அவர்கள் இப்போது குளிர் களஞ்சிய தொடர் வசதிகளை வழங்குகின்றனர். 2002 டிசம்பரில் ரெஸ் அக்ரோ பகிரங்கக் கம்பனியாக மாறியது. சிறியதொரு குடும்ப வர்த்தகமாக இருந்த அவர்கள் வியாபாரத்தை பகிரங்கக் கம்பனியாக மாற்றுவதற்காக யூஎஸ்எய்டே உதவி வழங்கியது என அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

USAID FROM THE AMERICAN PEOPLE

அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக மன்றம்

இலங்கையின் தெற்குக் கரையில் அமைந்துள்ள அம்பாந்தோட்டையில் அஸ்மி தாஸிம் பிரபல வர்த்தகராவார். பிரதேச வர்த்தகங்களுக்கு உதவி அளிப்பதற்காக 1990 இல் நிறுவப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்ட தொழில்முயற்சியாளர் முகவர் நிலையத்தின் முதலாவது தலைவராக அவர் செயலாற்றினார். தனியார் துறை கொள்கை ஆதரவுக் கருத்திட்டத்தினூடாக தொழில்நுட்ப உதவியை 1992 இல் வழங்கி திரு. தாஸிம் மற்றும் தொழில்முயற்சியாளர் முகவர் நிலையத்துடன் யூஎஸ்எய்ட் இணைந்து செயற்பட ஆரம்பித்தது.

வர்த்தகமன்றம் ஒன்றை அமைப்பதனால் மாவட்டம் நன்மை அடையும் என்பது தெளிவானதும், மன்றத்தை நிறுவுவது பற்றிய தொழில்நுட்ப உதவியையும் அதனை ஆரம்பிப்பதற்கான அலுவலகத் தளபாடங்களையும் யூஎஸ்எய்ட் வழங்கியது. 1993 யூன் 25ஆம் திகதி மன்றத்தின் செயலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு, 1993 ஆகஸ்ட் 09ஆம் திகதி அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக மன்றம் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது. மன்றத்தின் முதலாவது தலைவராக திரு. தாஸிம் கடமை புரிந்ததோடு, இலங்கையில் மாவட்ட மட்டத்திலான முதலாவது மன்றமாக அது இருந்தது. இன்றுகூட, திரு.தாஸிம் மன்றத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் செயலாற்றுகிறார்.

ஆயினும், அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக மன்றத்துக்கும் யூஎஸ்எய்டுக்கும் இடையிலான தொடர்பு அத்துடன் நின்றுவிடவில்லை. யூஎஸ்எய்ட்டின் தனியார் துறையினருக்கான தொழில்நுட்ப முன்னெடுப்பு (TIPS – டிப்ஸ்) மற்றும் அம்பாந்தோட்டையில் விவசாய தொழில்முயற்சி அபிவிருத்தி (AgEnt – அக் கென்ட்) கருத்திட்டங்களுக்கான அலுவலக இடவசதியை மன்றம் வழங்கியது. மாவட்டத்துக்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான முதலீட்டுக் கருத்தரங்குகளை நடாத்துவதற்கான உதவியை டிப்ஸ் கருத்திட்டம் மன்றத்துக்கு வழங்கியது.

அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக மன்றத்தை அமைக்க யூஎஸ்எய்ட உதவியது. இன்று அது தகவல் தொழில் நுட்ப பயிற்சி போன்ற சேவைகளை வழங்குவதில் ஏனைய மாவட்டங்களுக்கு உதவுகிறது.

யூஎஸ்எய்ட் அனுசரணை வழங்கும் ரிப்ஸ் கருத்திட்டத்தின் கூட்டத்தில் மன்றத்தின் பணிப்பாளர் அஸ்மி தாஸிம் உரையாற்றுகின்றார்.

பாற்பண்ணை வர்த்தகம் பற்றி அறிந்துகொள்வதற்காக அவுஸ்திரேலியாவிலும் நியூசீலாந்திலும் சுற்றுலாக்களை மேற்கொள்வதற்காக மன்றத்தின் உறுப்பினர் ஒருவருக்கு அக் கென்ட் அனுசரணை வழங்கியது. இன்று கூட அவர் இவ்வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். டிப்ஸ் கருத்திட்டத்துடன் செலவைப் பகிர்ந்து கொண்டு மன்றம் 30 அங்கத்தவர்களைக் கொண்டதொரு குழுவை இந்தியாவில் நடைபெற்ற வர்த்தகச் சந்தை ஒன்றில் பங்குபற்ற வைத்தது.

இப்போது உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை மாவட்ட வர்த்தக மன்றத்தின் உறுப்பினர்கள் ஏனைய மாவட்டங்களிலும் மன்றங்களை அமைக்கும் நடவடிக்கைகளில் உதவி அளிக்கின்றனர். அவர்கள் தொடர்ந்தும் யூஎஸ்எய்டுடன் தொடர்புகளைப் பேணுவதோடு, மாவட்டத்தில் ஆங்கில மொழி வகுப்புகளை நடாத்துவதற்கு யூஎஸ்எய்ட்டின் இடைக்கால முன்னெடுப்புகளுக்கான அலுவலகத்துக்கு அண்மையில் உதவி வழங்கினர்.

“யூஎஸ்எய்ட் நடவடிக்கைகளைச் சரியாக மேற்கொண்டது – காசோலையை மாத்திரம் அவர்கள் வழங்காது ஆலோசனையையும் வழங்கினர். யூஎஸ்எய்ட் இடம் இருந்து நாம் பெற்ற உதவி யாராவது வந்து பரிசொன்றை அளித்து விட்டுச் செல்வதைவிட எமக்கு மிகப் பெறுமதியாகவுள்ளது” என அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கான யூஎஸ்எய்டின் உதவி பற்றி திரு. தாஸிம் குறிப்பிட்டார்.

யோகட் உற்பத்தியும் தொழில் வாய்ப்பும்

யூஎஸ்எய்ட்டின் மஹாவலி தொழில்முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டம் (MED – மெட்) பல சிறிய வர்த்தகங்களுக்கு உதவி அளித்துள்ளது. அவற்றுள் ஒன்று 1992 இல் தெற்குக் கிராமப் புறத்தில் ஆர்.ஏ.கே. ரணதுங்க ஆரம்பித்த ரணதுங்க இன்டஸ்ரீஸ் என்ற யோகட் உற்பத்திக் கம்பனியாகும். 1989 முதல் 1995 வரை மஹாவெலி கிராமிய அபிவிருத்திப் பிரதேசங்களில் நிரந்தர, தனியார்துறை தொழில்வாய்ப்புக்களின் உற்பத்தியைத் துரிதப்படுத்துவதை மெட் நோக்காகக் கொண்டிருந்தது.

1970 இல் உதவி வழங்குவோர் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட நீர்ப்பாசன குடியேற்றத் திட்டமான மஹாவலி அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக சந்தை சார்பானதொரு அணுகுமுறைக்கான அரசாங்கத்தின் ஈடுபாட்டைப் பலப்படுத்துவதிலும் இக்கருத்திட்டம் கவனம் செலுத்தியது.

12 மஹாவலி வர்த்தக அபிவிருத்தி நிலையங்களை அமைப்பது மெட்டின் அமுலாக்கத் திட்டத்தின் பிரதான அம்சமொன்றாக இருந்தது. சிறிய மற்றும் தனிநபர் தொழில்முயற்சிகளுக்கு தொழில்நுட்ப உதவியையும் பயிற்சிச் சேவைகளையும் இந்நிலையங்கள் வழங்கியதோடு ஏலவேயுள்ள நிதி நிறுவனங்களினூடாக கடன் வசதிகளைப் பெறுவதற்கான வசதிகளையும் செய்து கொடுத்தன. 1993 டிசம்பரில், எம்பிலிப்பிட்டியவில் உள்ள மெட்டின் ஆதரவைப் பெறும் வர்த்தக அபிவிருத்தி நிலையத்தின் உதவியை திரு.ரோஹனா நாடினார். மிக முக்கியமான வர்த்தகத் திட்டமிடல் மற்றும் நிதி முகாமைத்துவ வழக்கங்களுக்கான பிரவேசம் அத்துடன் தனது நடவடிக்கைகளை விசாலிப்பதற்கான கடன் உதவி ஆகியவற்றை திரு.ரோஹன பெற்றுக் கொண்டார்.

உற்பத்தி சார்ந்த முக்கியமான சிக்கல்களான குளிரூட்டல் மற்றும் பொதிக-ளில் அடைத்தல் ஆகியவற்றைத் தீர்த்துக் கொள்வதற்காக யூஎஸ்எய்ட் உதவி வழிவகுத்தது. பாரிய பாற்பண்ணை உற்பத்தியாளர்களுடன்

ஐந்து தொழிலாளிகளைக் கொண்ட தனி நபர் தொழில்முயற்சியொன்றாக ஆரம்பித்தது பத்து மாதங்கள் கழிந்ததும் 23 பேர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கியது. இளைஞர்களிடையே தொழிலற்ற தன்மை அதிகமாகக் காணப்படும் இப்பிரதேசத்தில் இவ்வாறு குறிப்பாக இரண்டாம் நிலை கல்வித் தகைமை பெற்ற இளம் பெண்களுக்கு அங்கு தொழில் கிடைத்தது.

போட்டியிட்டு கோப்பைகளில் அடைக்கப்பட்ட யோகட்டினை ரணதுங்க தொழிற்சாலை உற்பத்தி செய்தது. தனது உற்பத்தியினை பன்முகப்படுத்துவதன் மூலம், ஜெலட்டின் மேற்பாகத்தைக் கொண்ட யோகட் போன்ற உற்பத்திகளை உற்பத்தி செய்து சந்தையில் தனக்கென்ற தனியானதொரு இடத்தை திரு. ரணதுங்க பெற்றுக்

யூஎஸ்எய்ட் மெட் கருத்திட்டத்தினால் உதவி வழங்கப்பட்ட ரணதுங்க தொழிற்சாலையில் இளம் பெண்ணொருவர் யோகட்டினை பொதி செய்கிறார்.

கொண்டார். பாடசாலைக் குழந்தைகளிடையே பிரபல்யமடைந்த பிளாஸ்டிக் குழாய்களில் அடைக்கப்பட்ட பனிக்கட்டியான யோகட்டையும் அவர் உற்பத்தி செய்தார்.

இலங்கையின் கிராமப்புறங்களில் தொழிலற்ற தன்மையைக் குறைத்து குடும்ப வருமானங்களை மேம்படுத்துவதற்கான பிரதான நடவடிக்கைத் தலையீடாக யூஎஸ்எய்ட் இன் மெட் கருத்திட்டம் அமைந்தது. திரு. ரோஹன போன்றவர்களுக்கான தொழில்முயற்சி ஊக்குவிப்பு, இலங்கையின் நிலைத்தகவுள்ள கிராமப்புற அபிவிருத்திக்கு செயற்படுத்தக் கூடிய மற்றும் ஆக்கபூர்வமான தலையீடாக அமைந்தது.

சமட்ட சரண: அப்பாவிகளுக்கான உதவி

சேரிகள் நிறைந்த கொழும்பின் முகத்துவாரப் பகுதியில் வாழ்வோர், பாதையோரங்களில் தங்கியிருப்போர் மற்றும் அகதிகளுக்கு சமட்ட சரண சேவைகளை வழங்குகிறது. "சகல விதமான துஷ்பிரயோகம் மற்றும் மோதலினால் மனித கௌரவத்தை இழந்த அல்லது அது சேதமடைநத்வர்களின் வேதனையையும் கஸ்டத்தையும் நீக்கி, பௌதிக, பொருளாதார, மனோதத்துவ மற்றும் ஆன்மீகம் ஆகிய சகல மட்டங்களிலும் வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துவதை" அது நோக்காகக் கொண்டுள்ளது. அது 1988 இல் சகோதரி பேர்னி டி சில்வா மற்றும் பிதா ஜோ டி மெல் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது.

பாலர்கள், குழந்தைகள், பெண்கள், முதியோர், நோயாளிகள், குணப்படுத்த முடியாத நோயாளிகள் மற்றும் தொழிலற்றோரை இலக்குப் பார்த்து சமட்ட சரண சேவைகளை வழங்குகிறது. போசாக்கு மற்றும் சுகாதாரப் பராமரிப்பு, கல்வி அத்துடன் பயிற்சி, பகல் நேரக் குழந்தைகள் பராமரிப்புத் திட்டங்கள் மற்றும் புனருத்தாபனம் போன்ற பரந்த சேவைகளை அது வழங்குகிறது. சிறியதொரு கட்டிடத்தில் முதலில் செயற்பட்ட சமட்ட சரணத் திட்டத்துக்கு பின்னர் வசதியான இடமொன்றை அமைப்பதற்கான வளங்கள் தேவைப்பட்டது. முன்னர் குப்பை கொட்டப்பட்ட இடமொன்றை அவர்கள் பெற்றுக் கொண்ட போதிலும் கட்டிட நடவடிக் கைகளுக்காக அவர்களுக்கு வள ங்கள் தேவைப்பட்டன. இந்நி லையில், சகோதரி பேர்னியும் சமட்ட சரண திட்டமும் யூஎஸ் எய்ட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

2001 இல் சகோதரி பேர்னி (இடது) மற்றும் பிதா ஜோ (இடதில் அப்பால் மறைந்து காணப்படுகிறார்) நிர்வகிக்கும் சமட்ட சரண இல்லத்தில் தொழில் பயிற்சி மாணவர்கள் தையலில் ஈடுபட்டிருப்பதை இலங்கைக்கான முன்னாள் யூ.எஸ்.தூதுவர் ஈ.அக்ஸி விலிஸ் (மத்தியில்), எமது மிசன் பணிப்பாளர் வீக்கி டூர் (வலது) மற்றும் சொலிட்டா முத்துகிரிஷ்ணா (வலதில் இரண்டாவது) பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

1992 இல், சமட்ட சரண அதன் புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக உதவ யூஎஸ்எய்ட் முன்வந்தது. இரு மாடிகளைக் கொண்ட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக தனியார் தொண்டர் அமைப்பு இணை நிதியளிப்புக் கருத்திட்டம் II இன் கீழ் மூன்று வருட மானியமொன்றை சமட்ட சரண பெற்றது. ஏனைய மூன்று தட்டுக்களுக்கான நிதி நன்கொடையாகப் பெறப்பட்டது.

மூன்று வருடக் காலப்பகுதியொன்றுக்கான சமட்ட சரணவின் மீளவரும் செலவையும் யூஎஸ்எய்ட வழங்கியது. தனியார் தொண்டர் அமைப்பு இணை நிதியளிப்புக் கருத்திட்டம் II , இலங்கையில் வறியவர்களை சென்றடைவதற்காக தனியார் தொண்டர் அமைப்புக்களின் முகாமைத்துவத் திறன்களைக் குறிப்பாகப் பலப்படுத்துவதைக் கவனத்திற் கொண்டு, சமூகங்கள் தங்கள் அபிவிருத்தியில் தாமே பங்கெடுப்பதற்கான சந்தர்ப்பங்களை அதிகப்படுத்துகிறது.

1995 இல் தங்கள் 5 மாடிக் கட்டிடத் திறப்பு விழாவில் உரையாற்றிய, சகோதரி பேர்னி பகிரங்கமாகத் தன் நன்றியை யூஎஸ்எய்ட்டுக்கு அது வழங்கிய உதவிக்காகத் தெரிவித்தார்.

"சமட்ட சரண தாராளமானதொரு மானியத்தை யூஎஸ்எய்ட் இடம் இருந்து பெற்றதோடு அவர்களின் உதவியுடனேயே கட்டிடத்தின் அத்திவாரம், மற்றும் கீழ் மாடிகள் இரண்டும் கட்டப்பட்டன."

அண்மையில் நடந்த நேர்காணல் ஒன்றின் போது, தமது ஸ்தாபனத்தின் வளர்ச்சியின் முக்கியமான கட்டத்தில் யூஎஸ்எய்ட் வழங்கிய உதவிக்காக சகோதரி பேர்னியும் பிதா ஜோவும் மீண்டும் அவர்களது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். "யூஎஸ்எய்ட் எமது கனவில் நம்பிக்கை வைத்தது" என சகோதரி பேர்னி நினைவு கூர்ந்தார். "பெரியதொரு கட்டிடத்துக்கான அடித்தளத்தைக் கட்டுவதற்கு அவர்கள் உதவி அளித்தார்கள். அதனால் இப்போது கூடிய எண்ணிக்கையினருக்கு தங்கு வசதியை வழங்க எம்மால் முடிகிறது. இக்கட்டிடம் தொடர்ந்து கொடுத்துக் கொண்டேயிருக்கும் பரிசாகும்."

நதித் திருப்புமுனை முகாமைத்துவம்

இயற்கை வளங்களின் பங்காளர் கட்டுப்பாட்டுத் திட்டம் (SCOR – ஸ்கொர்) இலங்கையில் நதித் திருப்புமுனை முகாமைத்துவத்துக்கான யூஎஸ்எய்ட் இன் புதுமையானதொரு முன்னெடுப்பாகும்.

ஹுருலுவெவவில் உள்ள இவ்வாறான நீர் திசைதிருப்பல் கால்வாய் போன்ற கருத்திட்டங்களுக்கு ஸ்கொர் வசதியளித்தது.

1993 மார்ச்சில் இருந்து 1998 செப்டம்பர் வரை மேற்கொள்ளப்பட்ட ஸ்கொர் திட்டம் குறிப்பாக நிலம் மற்றும் நீர் சார்ந்த இயற்கை வளங்களின் நிலைத்தகவுள்ள உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான அபிவிருத்தி மாதிரிகளை, திருப்புமுனை நோக்கில், ஏற்படுத்துவதாகும். நீர்ப்பாசன, வலு மற்றும் சக்தி அமைச்சின் பொதுவான வழிநடாத்தலின் கீழ், ஸ்கொர் திட்டம் சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவனத்தினால் அமுலாக்கப்பட்டது.

பௌதிக, உயிரியல் மற்றும் சமூகச் சுற்றாடல்களைப் பேணும் அதே வேளையில், தெரிவு செய்யப்பட்ட திருப்புமுனை நடவடிக்கைகளினுள் நில மற்றும் நீர் வளங்களின் உற்பத்தித் திறனை தீவிரப்படுத்துவதில் இலங்கைக்கு ஸ்கொர் உதவி வழங்கியது. புதுமையான முகாமைத்துவ மாதிரிகள் மற்றும் பிரதேச நுகர்வோர் குழுக்கள் அத்துடன் அரசாங்கத்தின் பங்காளர் கட்டுப்பாட்டின் கீழ் இக்கைங்கரியம் மேற்கொள்ளப்பட்டது. இயற்கை வளங்கள் மீதான கட்டுப்பாட்டினூடாக திருப்புமுனை முகாமைத்துவத்தில் சாதகமான மாற்றங்களுக்கு வழி வகுப்பதன் மூலம் விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் வனவளத் துறைகளில் மாற்றங்களுக்கான பங்களிப்பை ஸ்கொர் வழங்கியது.

இயற்கை வளங்களின் நீண்டகால முகாமைத்துவத்துக்கு திருப்புமுனைகளில் பிரதேச நுகர்வோரை ஈடுபடுத்துவது முக்கியமான-தொன்றாகும். மண் மற்றும் நீரினைப் பேணல் மற்றும் முகாமைத்துவம், பயிர்ச்செய்கை முறைகள் மற்றும் பழங்கங்களில் மாற்றங்கள், இயற்கை வளங்கள் நீடித்திருப்பதற்கான பாதுகாப்பு, வளங்களைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் சமூகப் பங்களிப்பு அத்துடன் இயற்கை வளங்களின் முகாமைத்துவத்துக்கான அரச-நுகர்வோர் பங்காளர் தொடர்புகள் ஸ்கொர் அணுகுமுறையின் பிரதான அம்சங்களாகவிருந்தன.

திருப்புமுனைகள் மற்றும் பேணல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய கூடிய மற்றும் பொதுவான உணர்வினை ஸ்கொரின் புதுமையான அணுகுமுறை ஏற்படுத்தியது. குறிப்பாக நில்வலாவில், அரசாங்க மற்றும் தனியார் தலைவர்களிடையே பொறுப்புணர்ச்சியை வலுப்படுத்த ஸ்கொர் உதவியது. தமது தொகுதிகளுக்கு அப்பாலான நீண்ட கால முதலீடுகள் மூலம் பெறப்படும் பொதுமக்கள் நன்மையின் பெறுமதியை தலைவர்கள் இந்நடவடிக்கைகளினூடாக உணர்ந்து கொண்டனர். இப்படியான நீண்டகால கண்ணோக்கு எதிர்காலத்தில் இலங்கைக்குச் சாதகமாக அமையும்.

பௌதிக, உயிரியல் மற்றும் சமூகச் சுற்றாடல்களைப் பேணும் அதே வேளையில், தெரிவு செய்யப்பட்ட திருப்புமுனை நடவடிக்கைகளினுள் நில மற்றும் நீர் வளங்களின் உற்பத்தித் திறனை தீவிரப்ப

இந்துவதில் இலங்கைக்கு ஸ்கொர் உதவி வழங்கியது. முறையை யூஎஸ்எய்ட் திருப்புமுனை முகாமைத்துவ உதவி உருவாக்கியது.

USAID FROM THE AMERICAN PEOPLE

விளையாட்டுப் பொருட்களுக்கான டிப்ஸ் கருத்திட்டம்

இலங்கை தனியார் கைத்தொழில் துறையின் சர்வதேச போட்டாபோட்டியிடும் திறனையும் அதில் தொழில்வாய்ப்புக்களை அதிகரிக்கவும் 1991 இல் தனியார் துறைக் கருத்திட்டத்துக்கான தொழில்நுட்ப முன்னெடுப்பு அல்லது டிப்ஸ் இனை யூஎஸ்எய்ட் ஆரம்பித்தது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பத்தின் உதவியுடன் தனியார் கைத்தொழில் துறையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பங்களைத் தெரிவு செய்து, அவற்றைப் பெற்று அத்துடன் அவற்றில் நிபுணத்துவம் அடையச் செய்வது அதன் இலக்காக இருந்தது.

நிலைத்தகவுள்ள வளர்ச்சி மற்றும் சீர்திருந்திய போட்டாபோட்டியிடும் திறன் ஆகியவற்றுக்கு முதலீடுகளை ஈர்க்கத் தேவையான திட்டங்கள், கொள்கைகள் மற்றும் வழக்கங்களை மேம்படுத்துவதற்காக, 1998 இல் உறுதியான நேரடி உதவி வழங்கும் போக்கை டிப்ஸ் கருத்திட்டம் மாற்றிக் கொண்டது. சர்வதேச நிறைவேற்றுச் சேவை தொண்டர் படை (International Executive Service Corps) இக்கருத்திட்டத்தை அமுல் செய்ததோடு அது 2000 இல் முடிவடைந்தது.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் அதன் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு யூஎஸ்எய்ட் இன் உதவியை 1994 இல் கோல்டன் பாம் இன்டர்நெஷனல் நிறுவனம் கோரியது.

நான்கு உப ஒப்பந்தக்கார உற்பத்தியாளர்களிடம் இருந்து மரத்திலான விளையாட்டுப் பொருட்கள், கைப்பணிப் பொருட்கள் மற்றும் நத்தார் பண்டிகை அலங்காரங்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்வதற்காக கோல்டன் பாம் இன்டர்நெஷனல் நிறுவனம் அதன் நடவடிக்கைகளை 1985 இல் ஆரம்பித்தது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் அதன் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு யூஎஸ்எய்ட் இன் உதவியை 1994 இல் கோல்டன் பாம் இன்டர்நெஷனல் நிறுவனம் கோரியது. அவர்கள் தம் உற்பத்திகளை காட்சிக்கு வைக்க மிக உகந்த இடம் ஆண்டுதோறும் நியூ யோர்க்கில் நடைபெறும் அமெரிக்க சர்வதேச விளையாட்டுப் பொருட்கள் சந்தையென்பதை டிப்ஸ் கருத்திட்டம் இனங்கண்டு, டிப்ஸ் அனுசரணை வழங்கிய பங்குபற்றுவோர் குழுவின் அங்கத்தவராக 1995 இன் சந்தையில் கலந்து கொள்ளுமாறு கோல்டன் பாம் நிறுவனத்துக்கு அது அழைப்பு விடுத்தது.

சந்தைக்கு தயார்படுத்துவதில், கம்பனியின் உற்பத்திகள் பற்றிய விளம்பர பிரசுரத்தை வடிவமைத்து அச்சடிப்பதில் கோல்டன் பாம் நிறுவனத்துக்கு டிப்ஸ் உதவி வழங்கியது. செலவைப் பகிர்ந்து கொள்ளும் 50 சதவீத மான்யமொன்றையும் சந்தைப்படுத்தும் முன்னெடுப்புகளின் செலவுக்காக கோல்டன் பாம் கம்பனிக்கு டிப்ஸ் வழங்கியது. சந்தைக்கு முந்திய மேம்பாட்டு நடவடிக்கையாக, ஐக்கிய அமெரிக்காவில் இலங்கை விளையாட்டுப் பொருட்களுக்கான அமெரிக்க விநியோகஸ்தர்களையும் முகவர்களையும் டிப்ஸ் இனங்கண்டது. அத்துடன், சந்தையின் இலங்கைக் காட்சிக் கூடத்துக்கு வருமாறு அவர்களுக்கு தபால் மூலம் அழைப்பு விடுக்கும் இயக்கத்தையும் ஆரம்பித்தது.

மரத்திலான புகையிரதங்களைக் கொள்வனவு செய்யும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் பாரிய வாடிக்கையாளர் ஒருவருக்கு 1995 இன் அமெரிக்க சர்வதேச விளையாட்டுப் பொருள் சந்தையின் போது, டிப்ஸ் கோல்டன் பாம் கம்பனியை அறிமுகம் செய்து வைத்தது. இதனால், கிரமமான அடிப்படையில் புகையிரத என்ஜின்களை வழங்குவதற்கான வர்த்தகக் கட்டளையொன்றை கோல்டன் பாம் பெற்றுக் கொண்டது. ஏனைய ஐக்கிய

டிப்ஸ் கருத்திட்டத்தினால் நன்மையடைந்த கோல்டன் பாம் இன்டர்நெஷனல் நிறுவனத்தின் தொழிற்சாலையொன்றில் தொழிலாளியொருவர்.

அமெரிக்கக் குடியரசின் வாடிக்கையாளர்களிடமிருந்தும் அவர்கள் கட்டளைகளைப் பெற்றதோடு, தம் ஏற்றுமதிக் கட்டளைகளை 25 சதவீதத்தால் அதிகரிக்கவும் முடிந்தது.

1995 இன் கடைசிப் பகுதியில், சர்வதேசச் சந்தைகளின் "செயற்பாட்டு அடிப்படையிலான விளையாட்டுப் பொருட்கள்" போக்கினை அனுசரித்து புதிய விளையாட்டுப் பொருட்களை வடிவமைக்கவும் தற்போதுள்ளவற்றைச் சீர்திருத்தவும், அமெரிக்க விளையாட்டுப் பொருட்கள் வடிவமைப்பாளர் ஒருவரை இரு வாரங்களுக்கு உபசரிப்பதற்காக கோல்டன் பாம் நிறுவனத்துக்கு டிப்ஸ் ஒத்தாசை வழங்கியது. பல விசேட மொபைல்களும் புதிர்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன. 1996 இன் அமெரிக்க சர்வதேச விளையாட்டுப் பொருட்கள் சந்தையில் பங்குபற்றவதற்காகவும் ஜப்பானில் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கோல்டன் பாம் நிறுவனத்துக்கு டிப்ஸ் உதவியளித்தது.

விளையாட்டுப் பொருட்கள் சந்தைகளில் பங்குபற்றியதையடுத்து ஏற்பட்ட கிராக்கியைச் சமாளிக்க கம்பஹாவில் அதற்கே சொந்தமான தொழிற்சாலையை கோல்டன் பாம் நிறுவியது. இன்று பெரும்பாலான பெண்களைக் கொண்ட 45 ஊழியர்களை கோல்டன் பாம் வேலைக்கமர்த்தியுள்ளது. பெண்கள் அலக்கழிக்கப்படாமல் அமைதியாக வேலை செய்யக்கூடிய பெண்களுக்குச் சாதகமானதொரு தொழில் புரியும் சூழலாக அது உள்ளது. இந்நிறுவனம் ஏற்றுமதிக் கேள்விகளை மாத்திரம் நிறைவு செய்கிறது. செயற்பாட்டு அடிப்படையிலான விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக கிடைத்த வழிகாட்டலுக்கும் கோல்டன் பாம் இன்டர்நெஷனல் நிறுவனத்தின் வெற்றிக்கு அடிகோலும் விதத்தில் அதன் உற்பத்திகளை சர்வதேசச் சந்தைகளில் சந்தைப்படுத்த வழங்கிய உதவிக்காகவும் யூஎஸ்எய்ட்டுக்கு அவர்கள் நன்றி பாராட்டுகிறார்கள்.

இலங்கையில் மிருதுவான விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தியாளரான செலின் ஏற்றுமதியாளர்களும் டிப்ஸ் கருத்திட்டத்தினால்

ரிப்ஸ் நிகழ்ச்சித் திட்டம் தனியார் கைத்தொழில் செயற்பாடுகளில் புதிய தொழில் நுட்பங்களைத் தெரிவுசெய்தல் பயன்படுத்தல் மறறும் தேர்ச்சியடைவதை அதிகரிப்பதையே இலக்காகக் கொணடது.

நன்மையடைந்தனர். 1991 இல் சன்ட்ரா வந்துராகலவினால் ஆரம்பிக்கப்பட்ட செலின் நிறுவனம், 1995 இல் நியூயோர்க்கில் நடைபெற்ற விளையாட்டுப் பொருட்கள் சந்தையில் கலந்து கொண்டு சர்வதேச சந்தையில் அதன் வர்த்தகத்தை விசாலித்தது. மூன்று விளையாட்டுப் பொருட்கள் சந்தைகளில் அவர் கலந்து கொள்வதற்கான செலவை டிப்ஸ் பகிர்ந்து கொண்டதோடு அதன் விளைவாக அவருக்கு தன் பொருட்களைக் கொள்வனவு செய்வோரைச் சந்திக்க முடிந்தது. செலின் தனது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான விளம்பர வெளியீடுகளை வடிவமைத்து அச்சிடுவதற்கும் செலின் ஏற்றுமதியாளர்களுக்கு டிப்ஸ் துணையாகவிருந்தது.

விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்யும் போது, செலின் ஏற்றுமதியாளர்கள் நூலுக்குச் சாயமிட்டு பெரிய கைத்தறிகளில் அதனை நெய்கிறார்கள். அப்படி நெய்யப்பட்ட புடவை பின்னர் வெட்டப்பட்டு மிருதுவான விளையாட்டுப் பொருட்களாக குருநாகலல் உள்ள ஒரு சிறிய தொழிற்சாலையில் செய்யப்படுகிறது. 90 சதவீதமான தொழிலாளிகள் பெண்களென்பதோடு, சிலர் தமக்கு வசதியாக வீட்டில் இருந்த வண்ணம் வேலை செய்கிறார்கள். டிப்ஸ் கருத்திட்டம் மற்றும் செலின் ஏற்றுமதியாளர்கள் ஆரம்பத்தில் இணைந்து செயற்பட ஆரம்பித்த போது, அவர்களுடன் சுமார் 50 தொழிலாளிகளே இருந்தனர். இன்று, செலின் 540 ஊழியர்களைக் கொண்டுள்ளதோடு மேலுமொரு 1,000 பேர்களிடமிருந்து அது புற வளங்களைப் பெற்றுக் கொள்கிறது.

டிப்ஸ் கருத்திட்டத்தின் உதவியுடன் திருமதி வந்துராகல இரண்டு உலக பெண்கள் மாநாடுகளில் கலந்து கொண்டார். தனது பெறுமதியைத் தானே உணர்ந்து கொள்ளவும் தான் ஈடுபட்டிருப்பது முக்கியமானதொரு விடயம் என்பதையும் அவர் உணரச் செய்ததால் அந்த மாநாடுகளில் கலந்து கொண்டது தனக்குப் மதிப்பிட முடியாத அனுபவத்தை வழங்கியது என்றார் அவர். "எனக்குத் தேவையான உந்துதலை டிப்ஸ் தந்துதவியது" என அவர் குறிப்பிட்டார்.

18 மில்லியன் டொலர் கருத்திட்டமான வகுதி பாராமல் வர்த்தகத்துக்கு நன்மை அளிக்கும் டிப்ஸ் கருத்திட்டத்தை யூஎஸ்எய்ட் 1991 மார்ச்சில் ஆரம்பித்தது. யூஎஸ்எய்ட் 12 மில்லியன் டொலர்களை வழங்கியதோடு இலங்கை அரசாங்கம் மேலுமொரு 6 மில்லியன் டொலர்களை வழங்கியது. டிப்ஸ் வழங்கிய மான்யங்களின் வீதங்களுக்கெதிராகத் தமது நிதிகளையும் சேர்த்து வெற்றி தோல்விகளைப் பகிர்ந்து கொள்ளும் கிராக்கிக்கேற்ப மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவதற்கான வளைந்து கொடுக்கும் தன்மையை, அரசாங்கத்தின் ஈடுபாட்டிலிருந்து விலகிச் செயற்படும் டிப்ஸ் கொண்டிருந்தது.

தனியார் கைத்தொழிலின் சர்வதேச போட்டாபோட்டியிடும் திறனையும் தொழில்வாய்ப்புக்களையும் அதிகரிப்பதற்காக சந்தைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து அதனைத் தாங்கி நிற்பதற்கான பொருளாதார வளர்ச்சியையும் தொழில்வாய்ப்புக்களையும் உற்பத்தி செய்வது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். வினைத் திறனை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பத்தைத் தேர்ந்தெடுப்பதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் அதில் நிபுணத்துவத்தை அடையவும் அதனூடாக தம் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் தேவைகளை இனங்காண்பதற்கும் புதுமையான தொழில்நுட்பத் தீர்வுகளைத் தேடிக் கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் வர்த்தகங்கள் உதவியை வழங்கின.

செலின் ஏற்றுமதியாளர்களின் சொந்தக்காரர், சண்ட்ரா வந்துராகல கடந்த வருடத்தில் கம்பனி தொழிற்சாலையொன்றில் காணப்படுகிறார்.

சுஜான் உணவுகள்:
வாயூறும் சைவ உணவுகள்

சைவ உணவு உற்பத்திப் பொருட்களை விசேடமாகத் தயாரிக்கும் கம்பனியான, சுஜான் புட்ஸ் நிறுவனத்தின் முன்னோடித் தலைவராக இருப்பவர் சுனந்த வீரசிங்க. தாவரங்கள் சார்ந்த வாழ்க்கை அமைப்புக்கான தன் ஈடுபாட்டையும் உணவு படைப்பதில் அவருக்கிருக்கும் பிரியத்தையும் வெற்றிகரமாக வளர்ந்து வரும் உணவுக் கைத்தொழிலாக சுனந்தா மாற்றியுள்ளார்.

சுஜான் புட்ஸ் முயற்சியை சுனந்த 1991 இல் ஆரம்பித்ததோடு, ஆரம்ப வாழ்க்கையில் தனது குடும்பத்தின் வர்த்தகக் கோட்பாடுகளில் இருந்த ஈடுபாடு தனது தொழில்முயற்சியின் வெற்றிக்குக் காரணமாகவிருந்தது எனக் குறிப்பிடுகிறார். 12 தொழிலாளிகளைக் கொண்ட சுஜான் புட்ஸ் நிறுவனம், குளிரூட்டி உறைய வைக்கப்பட்ட பலவகை மரக்கறி சார்ந்த சைவ உணவுகளையும் உடன் சாப்பிடக் கூடிய இனிப்புப் பண்டங்களையும் ஏற்றுமதிக் கம்பனிகளுக்காக உற்பத்தி செய்கிறது.

யூஎஸ்எய்ட்டின் உதவிபெற்ற சுஜான் புட்சினால் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கை உணவு பதனிடுவோர் சங்கத்தின் 2001 ஆம் ஆண்டிற்கான சிறந்த உணவுக்கான வெற்றிக் கிண்ணம் உட்பட விருதுகளை வென்ற சில உற்பத்திகள் படத்தில் காணப்படுகின்றன.

தனது கம்பனியின் வெற்றிக்கு உதவி வழங்கிய யூஎஸ்எய்ட் இன் ஈடுபாட்டையும் தனது வெற்றிக்கான காரணமாக சுனந்த ஏற்றுக் கொள்கிறார். 1995 இல், இலங்கையில் கமம் சார்ந்த தொழில்முயற்சிகளுக்கு உதவி வழங்கும் அக் கென்ட் கருத்திட்டத்துடன் இணைந்து செயற்பட அவர் ஆரம்பித்தார். தனது நன்றிக் கடனை பிரதிபலிக்கும் சுபாவத்திற்கேற்ப, தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் யூஎஸ்எய்ட்டுக்கு நன்றி பகர சுனந்தா மறப்பதேயில்லை. இலங்கையின் முன்னணி பெண்கள் சஞ்சிகையான சடின் இன் 2005 மார்ச்சு / ஏப்பிரல் வெளியீட்டில் அவரைப் பற்றிய பக்கவெட்டுச் சித்திரக் கட்டுரையொன்றிலும் கூட யூஎஸ்எய்ட் இனைக் குறிப்பிட அவர் தவறவில்லை.

"எக் என்ட் ஒரு அருட்கொடை"
சுனந்தா வீரசிங்க

உணவு பதனிடுவது மற்றும் சந்தைப்படுத்துவதற்கான திறன்களை கட்டியெழுப்புவதற்கான உபகரணங்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் சுஜான் புட்ஸ் நிறுவனத்துக்கு அக் கென்ட் வழங்கிய உதவியில் அடங்கின. அரைக்கும் இயந்திரம் ஒன்றின் விலையைப் பகிர்ந்து கொள்வதன் மூலம், தனது உணவு உற்பத்திப் பொருட்களுக்கு தானியம் சார்ந்த உணவுவகைகளையும் உட்படுத்துவதற்காக சுனந்தாவுக்கு அக் கென்ட் உதவியது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு மற்றும் ஜெர்மனியில் நடைபெற்ற உணவுச் சந்தைகளில் சுனந்தா பங்குபற்றுவதற்கான செலவையும் அக் கென்ட் பகிர்ந்து கொண்டது.

உணவுச் சந்தைகளில் தாம் பெற்ற அனுபவங்களைப் பற்றி புகழ்ந்து பேசிய சுனந்தா, உணவு மற்றும் பொதி செய்தல் தரங்களைப் பற்றி அறிவதற்குத் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்துக்கு நன்றி பகரத் தவறுவதில்லை. இப்படி அவர் பங்குபற்றியது ஏனைய மரக்கறி உணவுகள் பற்றி அறிந்து கொள்ள அவருக்கு உதவியதோடு, சைவ உணவுச் சந்தையின் தேவையை எவ்வாறு பூர்த்தி செய்யலாம் என்பது பற்றிய யோசனையையும் அவருக்கு வழங்கியது. அக் கென்ட் கொழும்பில் நடாத்திய நிதி முகாமைத்துவக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தனது வர்த்தகத் திறமைகளைத் தொடர்ந்தும் சுனந்தா கட்டியெழுப்பினார்.

இலங்கை உணவு பதனிடுவோர் சங்கத்தின் 2005 ஆண்டின் பிரதித் தலைவராகச் செயற்பட்டு தனது அறிவையும் திறன்களையும் வர்த்தகச் சமூகத்துடன் சுனந்தா பகிர்ந்து கொள்கிறார். அக் கென்ட் நிறுவிய இச்சங்கம் இப்போது தானாகவே இயங்கி வருகிறது. இலங்கையில் விவசாய வர்த்தகத்துக்காக யூஎஸ்எய்ட் வழங்கிய பங்களிப்புக்கு நன்றி பகரும் சுனந்தா, "அக் கென்ட் ஒரு அருட்கொடை" எனக் குறிப்பிட்டார்.

டொன் பொஸ்கோ: இளைஞர்களுக்கான பயிற்சி

சாந்த பிரான்சிஸ் டி சேல்ஸ் சங்கம் அல்லது டொன் பொஸ்கோ செலசியன்ஸ் என்றழைக்கப்படுவது, வறிய சிறுவர்களுக்கு உதவி வழங்கி, கல்வி மற்றும் பயிற்சியை அளிப்பதற்காக இத்தாலியில் உள்ள டியூரின் நகரில் 1859 இல் சாந்த ஜோன் பொஸ்கோவினால் நிறுவப்பட்ட ஒரு சமயக் குழுவாகும். அது 130 க்கும் அதிகமான நாடுகளில் பரந்திருப்பதோடு, 2006 இல் இலங்கையில் 50 வருட காலச் சேவையை டொன் பொஸ்கோ கொண்டாடுகிறது.

1990 இன் நடுப்பகுதியில் இடம் பெயர்ந்த குழந்தைகள் மற்றும் அனாதைகள் நிதியின் மூலம் யூஎஸ்எய்ட் டொன் பொஸ்கோவுக்கு உதவிகளை வழங்கியது.

வறிய, வாய்ப்பற்ற, கைவிடப்பட்ட, அனாதைச் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் கல்வி மற்றும் பரந்த மனித அபிவிருத்தியை வழங்கி அவர்கள் தமக்கும் தம் குடும்பத்தாருக்கும் நியாயமான முறையில் சம்பாதித்து, சமூகத்துக்கும் தேசத்துக்கும் பொறுப்புள்ளவர்களாக வருவதற்கான வாய்ப்பினனை வழங்கும் பொறுப்பை டொன் பொஸ்கோ மிசன் ஏற்றுள்ளது.

மூன்று தொழில் பயிற்சி நிலையங்கள், மூன்று புனர்வாழ்வு நிலையங்கள், மூன்று சமயக் கல்வி நிலையங்கள் அத்துடன் மூன்று பாரிசுகளையும் அது இலங்கையில் அமைத்துள்ளது. சோம்பேறிகளாகவும் குற்றவாளிகளாகவும் இளைஞர்கள் மாறுவதைத் தடுப்பதற்காக பல்வேறு வகைகளில் வறிய சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இந்த நிலையங்கள் வாழ்வளிக்கின்றன. அவை தொழில் கல்வியை வழங்குவதோடு, இளைஞர்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்கள் பற்றி சிறுவர்களுக்கும் சமூகங்களுக்கும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளையும் வழங்குகிறார்கள். பாடசாலைத் திட்டங்களுக்குப் பின்பான பணம் அறவிடப்படாத மேலதிக வகுப்புக்களையும் அது நடத்துகிறது.

தொழில் பயிற்சி நிலையங்கள் அதிக எண்ணிக்கையிலான சித்திகளைப் பெற்று, பயிற்றப்பட்டவர்களுள் 95 சதவீதத்தினர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். இளைஞர்கள் நிலையங்களை விட்டுச் சென்ற பின்பும் தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இளைஞர்கள் தம் தொழிலில் இரண்டு வருடங்கள் பூர்த்தி செய்யும் வரை அவர்களுக்கு தொழில் பயிற்சியை முடித்த சான்றிதழ்கள் வழங்கப்படுவதில்லை. இத்திட்டத்தில் பங்குபற்றும் இளைஞர்கள் முக்கியமான திறன்களைப் பெறுவதோடு, வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் வெற்றி பெறுவதற்காக சாதகமான மனப்பாங்குகளை அபிவிருத்தி செய்ய அவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

1990 ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில், இடம்பெயர்ந்த மற்றும் அனாதைச் சிறுவர்களுக்கான நிதியத்தின் மூலம் டொன் பொஸ்கோவுக்கு யூஎஸ்எய்ட் உதவி வழங்கியது. அனாதைகள், நாதியற்ற வயது குறைந்தோர் மற்றும் யுத்தத்தினால் பாதிப்படைந்த சிறுவர்களுக்கான பராமரிப்பை வழங்குவதற்காக குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் திறனைப் பலப்படுத்த இடம்பெயர்ந்த மற்றும் அனாதைச் சிறுவர்களுக்கான நிதியம் உதவுகிறது. குழந்தைகளுக்கான நேரடிச் சேவைகளை வழங்குவதற்கான மாதிரிகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் திட்டங்களை அமுல்படுத்தவும் வளர்முக நாடுகளில் உள்ள அரச சார்பற்ற அமைப்புக்களினூடாக இந்நிதியம் செயற்பட்டு மான்யம் வழங்கப்படும் காலம் கடந்த பின்பும் உள்நாட்டு அமைப்புக்கள் நிலைத்தகவுடன் செயற்படுவதற்காக அவற்றுக்கான ஆதரவையும் வழங்குகிறது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மாதிரிகளை விருத்தி செய்யவும் குழந்தைகளுக்கு நேரடியாக சேவையை வழங்குவதுடன் உள்ளூர் தாபனங்களுக்கு உதவிகளை வழங்கக் கூடிய அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் தொழிற்படு நிதியானது நன்கொடைகளுக்கு அப்பாலும் நிலைத்து நின்று வேலை செய்யக் கூடியது.

டொன் பொஸ்கோவின் தலைவரான அன்டன் பின்டோ, தமது சேவைகளை விஸ்தரிக்க யூஎஸ்எய்ட் வழங்கிய ஆதரவு அவர்களுக்கு வசதியளித்தது எனக் குறிப்பிட்டார். ஒரு குழந்தைக்கு மாத்திரம் புனர்வாழ்வு அளிப்பதல்ல, முழுச் சமூகத்துடனும் சேர்ந்து செயற்படுவதே முக்கியம் என்பதை அறிந்து, சமூகக் கல்வி மனவுருவைக் கட்டியெழுப்ப அவர்களுக்கு யூஎஸ்எய்ட் ஆதரவு அளித்தது. படை அணியில் இருக்கும் சிறார்கள் மற்றும் யுத்தத்தினால் பாதிப்படைந்த சமூகம் ஆகியவர்களையும் அணுகுவதற்காக யூஎஸ்எய்ட் உடன் இணைந்து செயற்படுவது அவர்களுக்கு உதவியாக இருந்தது.

"கட்டிடங்களில் அல்லாமல் மனிதர்களில் நினைவுச் சின்னங்களை யூஎஸ்எய்ட் காண்கிறது" பீதா பின்டோ குறிப்பிட்டார்.

டொன் பொஸ்கோ அதன் திட்டத்தினுள் எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் நோய் பற்றிய பிரச்சினைகளை உட்புகுத்துவதற்காக டொன் பொஸ்கோவை எச்ஐவி / எய்ட்ஸ் குழுக்களுடன் யூஎஸ்எய்ட் இணைத்தது. டொன் பொஸ்கோவுக்கான யூஎஸ்எய்ட் உதவியின் தாக்கம் பற்றிக் குறிப்பிட்ட பீதா பின்டோ, "இலங்கையில் குழந்தைகளுக்கு உதவும் ஒரு வர்த்தகச் சின்னமாக டொன் பொஸ்கோ மாறுவதற்கு யூஎஸ்எய்ட் இன் ஆதரவு வழிவகுத்தது" எனக் குறிப்பிட்டார். அபிவிருத்திக்கான யூஎஸ்எய்ட் இன் அணுகுமுறை பற்றித் தன் மெச்சுதலைத் தெரிவித்த அவர், "அடி மட்டத்தில் யூஎஸ்எய்ட் செயற்பட்டு, ஆட்களை மையமாகக் கொண்ட குடிப்புள்ள உதவியை அது வழங்குகிறது. கட்டிடங்களில் அல்லாமல் மனிதர்களில் நினைவுச் சின்னங்களை யூஎஸ்எய்ட் காண்கிறது" என விவரித்தார்.

USAID FROM THE AMERICAN PEOPLE

இலங்கையின் இளம் தொழில் முயற்சியாளர்கள்

இலங்கை இளம் முயற்சியாளர்கள் அமைப்பு (YESL) 1997 இல் ஆரம்பிக்கப்பட்டது. சந்தையினால் ஓட்டப்படும் பொருளாதாரங்களின் முக்கியத்துவம், உலகளாவிய பொருளாதாரத்தில் வர்த்தகத்தின் பங்களிப்பு, பண்புடன் செயற்படுவதற்கான வர்த்தகத்துறையின் ஈடுபாடு, தொழில் புரியும் இடத்தில் கல்வியின் அவசியம், அவர்களின் எதிர்காலத்தில் பொருளாதாரத்தின் தாக்கம் ஆகியவை பற்றிய அறிவை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கு சேவையையும் தொழிநுட்ப உதவியையும் YESL வழங்குகிறது.

ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் உள்ள "ஜூனியர் எச்சிவ்மென்ட்" இளைஞர் வெற்றித் திட்டத்தின் நடவடிக்கைகளைக் கண்டு உணர்வு பெற்ற பலரின் நோக்கு மற்றும் அயராத உழைப்பின் காரணமாகவே YESL உருவாகியது. 1965 இன் ஆரம்பத்தில் அகில இலங்கை சிறிய கைத்தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினராக, வைஎஸ்எல் இன் பிரதித் தலைவர், பத்மசிறி டயஸூ க்கு, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு, ஐக்கிய இராஜதானி மற்றும் ஜப்பானுக்கான சுற்றலா ஒன்றை மேற்கொள்வதற்காக, யூஎஸ்எய்ட் மற்றும் ஆசிய மன்றத்தின் புலமைப் பரிசு ஒன்று கிடைத்தது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் இருக்கும் போது, திரு. டயஸூ க்கு "ஜூனியர் எச்சிவ்மென்ட்" இளைஞர் வெற்றித் திட்டத்தின் நடவடிக்கைகளை அவதானிக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. இலங்கை திரும்பியதும், இலங்கை சிறிய கைத்தொழில்கள் மன்றத்துடன் சங்கம் கூட்டுச் சேர்க்கப்பட்டபோது, தொழில் முயற்சி அபிவிருத்தியை அவர் மேம்படுத்தியதோடு திரு. டயஸ் சம்மேளனத்தின் தலைவராக 1984 இல் தெரிவு செய்யப்பட்டார்.

2005 ஆம் ஆண்டில் 7 வது வருடாந்த இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவத்தில் YESL பட்டதாரிகள்.

தொழில்முயற்சியாளர் அபிவிருத்தித் திட்டம் யூஎஸ்எய்ட் மற்றும் ஆசிய மன்றத்தின் நிதியளிப்புடன் அபிவிருத்தி செய்யப்பட்டதோடு, இரண்டு வருடங்களில் 800 க்கும் மேலான இளைஞர்களுக்கு அது பயிற்சியை அளித்தது.

மீண்டும் 1986 இல், ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தூதரகத்தின் அதிதிகள் திட்டத்தின் கீழ் திரு. டயஸ் அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கு அவர் கொலராடோ ஸ்பிரிங்ஸில் "ஜூனியர் எச்சிவ்மென்ட்" இளைஞர் வெற்றித் திட்டத்தை ஆராய்ந்தார். சம்மேளனத்தின் பிரதித் தலைவர், எம். மக்கி ஹாசிம், முன்னைய தலைவர், திரு. கிரன்வில் பெரேரா, மற்றும் வைஎஸ்எல் இன் தலைவர் திரு. பட்ரிக் அமரசிங்க ஆகியோரும் "ஜூனியர் எச்சிவ்மென்ட்" இளைஞர் வெற்றித் திட்டத்தை அவதானித்ததோடு இலங்கைக்கு அதன் அனுகுமுறை எவ்வாறு நன்மை அளிக்கும் என ஆராய்ந்தனர்.

1992 இல் இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் மன்றச் சமமேளனத் தலைவராகப் பதவியேற்றதும், "ஜூனியர் எச்சிவ்மென்ட்" இளைஞர் வெற்றித் திட்டத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவதற்காக, திரு. அமரசிங்க இளைஞர் வெற்றித் திட்ட "ஜூனியர் எச்சிவ்மென்ட்" இன்டர்நெஷனல் மற்றும் யூஎஸ்எய்ட் உடன் தொடர்பு கொண்டார். அவர் தனது செய்தியை வர்த்தகச் மன்றங்கள், வர்த்தகர்கள் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றுக்கு எடுத்துரைத்தார். யூஎஸ்எய்ட் இன் அழைப்புக்கேற்ப, சாத்தியக்கூறு பற்றிய ஆய்வினை மேற்கொள்வதற்காக இளைஞர் வெற்றி "ஜூனியர் எச்சிவ்மென்ட்" இன்டர்நெஷனல் இலங்கைக்கு வந்தது.

YESL இன் ஆரம்பக் கட்டத்தில் யூஎஸ்எய்ட் மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழு உதவிகளை வழங்கியது. 1997 மார்ச்சில் இலாபமீட்டாத கூட்டுத்தாபன நிறுவனமொன்றாக அது அமைக்கப்பட்டதோடு, இளைஞர் வெற்றி "ஜூனியர் எச்சிவ்மென்ட்" இன்டர்நெஷனலில் நாடல்லாத உத்தியோகபூர்வ அங்கத்துவம் அதற்கு அளிக்கப்பட்டது. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு YESL உடன் கல்வியில் தனியார் துறை பங்காளர் தொடர்பொன்றை ஏற்படுத்திக் கொண்டது. இன்று இத்திட்டத்துக்குத் தொடர்ந்தும் யூஎஸ்எய்ட் மற்றும் தனியார் துறை நிதி கிடைக்கிறது. அதன் பாட விதானம் மற்றும் கற்கை உபகரணங்கள் நீண்ட காலமாகப் பரீட்சிக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளதோடு, ஆரம்ப, மத்திய மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்களுக்கு அவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

வர்த்தகத்துறை நிறைவேற்றுனர்கள் அதனை வழிநடாத்துபவர்களாக இருப்பதோடு, கல்வி அதிகார பீடங்கள் மற்றும் வர்த்தகச் சமூகத்துடனான பங்காளர் தொடர்புகள் மாணவர்களுக்கு வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய செயற்றிறனை வழங்குகின்றன. வர்த்தகங்கள் இலங்கைக் குழந்தைகளின் எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கான "புதிய சுதந்திர வர்த்தக வலயமொன்றை" YESL சிருஷ்டித்துள்ளது.

போட்டாபோட்டியிடும் திறமையை உருவாக்கல்

சகல பொருளாதாரங்களிலும் தாக்கத்தை விளைவித்த உலகமயமாக்கலின் சவால்கள், அரசாங்க மற்றும் தனியார் துறைகள் ஆகிய இரண்டினாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய சிந்தனைப் போக்கு, உத்திகளையும் அணுகுமுறைகளையும் தேவைப்படுத்தும் புதிய சிக்கலான நிலையையொன்றைத் தோற்றுவித்தது. யூஎஸ்எய்ட் இனால் நிதியளிக்கப்பட்ட போட்டாபோட்டித் திறன் திட்டம் (TCP) இலங்கை நன்மையடைக்கூடிய பாடங்களை இனங்கண்டு அவற்றைப் பிரயோகிப்பதில் இலங்கைத் தலைவர்களுடன் இணைந்து செயற்படும் ஒரு முயற்சியாகும். கைத்தொழில் துறையின் போட்டாபோட்டியிடும் திறன் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக உறுதிபூண்டுள்ள தனியார் துறை இயக்கங்களுக்கும் அமைப்புக்களுக்கும் தொழில்நுட்ப உதவியை TCP வழங்குகிறது.

யூஎஸ்எய்ட் மட்பாண்டக் கொத்தணி மூலம் வளர்ச்சியடைந்த மட்பாண்ட மன்றத்தினால் ஆதரவு அளிக்கப்படும் இலங்கை மட்பாண்டத் தொழிற்சாலையயொன்றின் ஊழியர்கள்.

இலங்கையில் போட்டா போட்டித் திறனைக் கட்டியெழுப்புவதற்காக 1999 இல் இருந்து யூஎஸ்எய்ட் செயற்பட்டு வருகிறது. முழுமையானதொரு போட்டா போட்டித் திறன் முயற்சியை இலங்கையிலேயே யூஎஸ்எய்ட முதன் முதலில் ஆரம்பித்தது. தற்போதைய போட்டா போட்டித் திறன் திட்டம், இலங்கையின் கைத்தொழில்கள், உலகமயமாக்கலின் சவால்களையும் அது வழங்கும் சந்தர்ப்பங்களையும் அறிந்து கொள்வதற்காக அவற்றின் திறனை மேம்படுத்துவதற்காகச் செயற்பட்ட போட்டா போட்டித் திறன் முன்னெடுப்பினைத் தொடர்ந்ததாகும்.

"கொத்தணிகள்" என்ற உத்தி சார்ந்த செயலணிகளை அமைக்க இணக்கம் தெரிவித்த வர்த்தக மற்றும் அரசாங்க தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் குழுக்களுடன் TCP இணைந்து செயற்படுகிறது. மூலப் பொருள் உற்பத்தியாளர்கள் தொடக்கம் உற்பத்தி செய்வோர், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருடன் நேரடியாகத் தொடர்பு படும் சில்லறை வர்த்தகர்கள் ஆகிய வர்த்தகச் செயற்பாட்டின் சகல அம்சங்களினதும் உறுப்பினர்களை கைத்தொழில் கொத்தணி ஒன்று கொண்டிருக்கும். குறிப்பிட்டதொரு கைத்தொழில் கட்டுப்பாட்டாளராக இருப்பது விரும்பத்தக்கதாக அரசாங்க மற்றும் வர்த்தகத்தை நடைமுறைப்படுத்த உதவும் துணைக் கைத்தொழில்களான பொதிகட்டல், கப்பல் போக்குவரத்து, நிதிசார் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை அது உள்ளடக்குகிறது.

கொத்தணி அங்கத்தவர்கள், இணைந்து செயற்பட்டு, ஒவ்வொருவரினதும் நோக்கங்களையும் தேவைகளையும் மதித்து, கைத்தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்காகச் செய்ய வேண்டியது என்னவென்பது பற்றிய கருத்தொருமைப்பாட்டுக்கு வருவர். பின்வரும் எட்டு கைத்தொழில்கள் கொத்தணிகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளன: மட்பாண்டம், தும்பு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஆபரணங்கள், இறப்பர், வாசனைத் திரவியங்கள், தேயிலை மற்றும் சுற்றுலாத் துறை. அவர்கள் இலங்கை ஆளணியினரின் 29% பிரதிநிதித்துவப்படுத்துவதோடு நாட்டின் ஏற்றுமதிகளில் சுமார் முன்றில் ஒரு பங்கை கொண்டுள்ளனர்.

2001 இல் ஆரம்பிக்கப்பட்ட கொத்தணி, மட்பாண்டக் கைத்தொழிலில் மேற்கொண்ட நடவடிக்கையை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். வர்த்தகச் சின்னத்தைக் குறித்தல், தொழில்நுட்பச் சிறப்பு மத்திகளை அமைத்தல் மற்றும் ஆளணியினர் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளினூடாக இலங்கையின் மட்பாண்டக் கைத்தொழிலிலின் போட்டா போட்டியிடும் திறனை மேம்படுத்துவதற்காக ஒன்றிணைந்த மற்றும் முழுக் கைத்தொழிலையும் வியாபித்ததொரு உத்தியை மேற்கொள்வதற்காக மட்பாண்டக் கைத்தொழில் கொத்தணி அமைக்கப்பட்டது. மட்பாண்டக் கைத்தொழிலிலில் இருந்து அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

2003 நவம்பரில், இலங்கை மட்பாண்ட சபையை கூட்டிணைப்பு கொண்டு மட்பாண்டக் கொத்தணி அதன் பங்களிப்பை முறைசார்ந்த நிலைக்குக் கொண்டு வந்தது. இச்சபை 2004 பெப்ரவரி 11 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதோடு, இலங்கை வர்த்தக மன்றத்தின் அனுசரணையின் கீழ் அது இப்போது இயங்குகிறது. இலங்கை மட்பாண்ட சபை இன்று நாட்டின் கைத்தொழில் துறையில் மிகச் செறிவுள்ளதொரு அமைப்பாகச் செயற்படுவதோடு. இலங்கை மட்பாண்டக் கைத்தொழிலிலின் தலையாய நிறுவனமாக அது உள்ளது.

நிகரான பல்வேறு பொருளாதார தரப்பினரிடையே கருத்தொருமைப்பாட்டையும் கலந்துரையாடலையும் ஏற்படுத்துவதில், பல வருடங்களாக மட்பாண்டக் கொத்தணியும் பின்னர் இலங்கை மட்பாண்ட சபையும் முடுக்கிவிடும் ஒரு பங்களிப்பை வழங்கியுள்ள அதே வேளையில், கைத்தொழில் முன்னெடுப்புகளில் போட்டா போட்டியிடும் திறனையும் ஊக்குவித்துள்ளது. உதாரணமாக, (ஆசியக் கண்டத்தில் மிக அதிகமானது எனக் கருதப்படும்) இலங்கை மட்பாண்டக் கைத்தொழிலை எதிர்நோக்கும் மிக முக்கிய சவால்களில் ஒன்றாக வலுவுக்கான அதிக விலை இனங்காணப்பட்டுள்ளது.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, உலகச் சந்தை விலைகளுக்கேற்ப தம் விலைகளைக் கட்டுப்படுத்துமாறு இலங்கை மட்பாண்ட சபை எரிவாயு வழங்குவோரைக் கேட்டுக் கொண்டது. அத்தோடு, சிக்கனமான விலையில் மின்சாரத்தை வழங்குவதற்கான கருத்திட்டங்களை அமுல்படுத்துமாறு அது அரசாங்கத்தை வேண்டியது. இக்கைத்தொழில் பிரதிநிதித்துவத்தின் சக்தியைக் கொண்டு, கைத்தொழிலுக்கான எரிவாயுவை வழங்கும் வரையறுக்கப்பட் ஷெல் கேஸ் லங்கா கம்பனியுடன் வெளிப்படையான விலை வாய்ப்பாடொன்றைப் பெற்றுக் கொள்ள இலங்கை மட்பாண்ட சபைக்கு முடிந்தது. சம்பந்தப்பட்ட மட்பாண்டத் தொழிற்சாலைகளுக்கு தொகையிலான கொள்வனவுகளுக்கான விலை குறைப்பும் அதில் உட்படுத்தப்பட்டது.

மட்பாண்டக் கொத்தணி இக்கைத்தொழில் பற்றிய இணையத் தளம் ஒன்றையும் அமைத்தது. அது இலங்கை மட்பாண்டக் கைத்தொழில் பற்றிய அறிவை உலகச் சந்தைகளில் பரப்புவதற்கு உதவியளிக்கிறது. அதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்வனவாளர்கள், விநியோகத்தர்கள், உற்பத்தியாளர்கள், மூலப் பொருட்களை வழங்குவோர் அத்துடன் முதலீட்டாளர்கள் இத்துறை பற்றிய தகவலைப் பெற்றுக் கொள்ள உதவுவதோடு, மட்பாண்டக் கைத்தொழில் பற்றிய செய்திகள், தொழில்துறைப் போக்குகள் மற்றும் ஏனைய தகவலையும் அது வழங்குகிறது.

பெண்கள் அபிவிருத்திச் சம்மேளனம்

இலங்கை அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்ட பெண்கள் அபிவிருத்திச் சம்மேளனம் (WDF) 1989 இல் நிறுவப்பட்டது. காந்தா சமித்தி அல்லது பெண்கள் அபிவிருத்திக் குழுக்கள் என்றதொரு பின்னலமைப்பைக் கொண்டதாக இம்மாவட்டத்திலுள்ள பெண்களை, சுகாதாராப் பிரச்சினைகள் தொடர்பாக, இத்திட்டத்தின் கீழ் அரசாங்க சமூக சேவையாளர்கள் ஒன்று சேர்த்தனர். இலங்கையின் தெற்கில் உள்ள அம்பாந்தோட்டை நாட்டில் மிகவும் அபிவிருத்தி குன்றியதொரு மாவட்டமாகும்.

அரசாங்க ஆதரவு நிறுத்தப்பட்ட பின்பும் தம் நடவடிக்கைகளைத் தொடரும் நோக்கத்துடன், அவசரத் தேவைகள் மற்றும் வருவாய் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக, இப்பெண்கள் பொதுவான நிதியங்களை ஏற்படுத்த ஆரம்பித்தனர். இப்போது இப்பெண்கள் அபிவிருத்திச் சம்மேளனம் சுயமாக முகாமைப்படுத்தப்படும் மக்கள் இயக்கமாக மிளிர்கிறது. அது 72 கிராமிய வங்கிகளையும் பயிற்சி நிலையமொன்றையும் செயற்படுத்துகிறது. கிராமியப் பெண்கள் தம் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு ஆளுமையைப் பெற்றுக் கொடுத்து நிதி வளங்களின் முகாமைத்துவத் திறனைக் கட்டியெழுப்பல், மனித வள முகாமைத்துவம், தொழில்நுட்ப திறமைகளின் அபிவிருத்தி மற்றும் நிறுவக அமைப்பைக் கட்டியெழுப்பல் ஆகியவற்றின் மூலம் மனித வளங்களின் அபிவிருத்தியை மேற்கொள்வதில் பெண்கள் அபிவிருத்திச் சம்மேளனம் கவனம் செலுத்துகிறது.

1999 இல், பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நிதியை யூஎஸ்எய்ட் பெண்கள் சம்மேளனத்துக்கு வழங்கியது. ஆயினும் நிர்மாணிக்க வேண்டிய கட்டம் வந்ததும், செலவைக் குறைத்துத் துரிதமாக வேலையை முடிப்பதற்காக தாமே அதனைச் செய்யப்போவதாகப் பெண்கள் முன்வந்தனர். தமது முயற்சி மற்றும் ஏனையவர் வழங்கிய சிரமதானம் அத்துடன் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான உதவியுடன், குறிப்பிடத்தக்கவாறு இப்பயிற்சி நிலையம் ஒரு வருடத்தினுள் பூர்த்தியாக்கப்பட்டது.

யூஎஸ்எய்ட் உதவி வழங்கிய அம்பாந்தோட்டையில் உள்ள பெண்கள் அபிவருத்திச் சம்ளேனத்தின் பயிற்சி நிலையம்.

சுனாமியின் பின், பெண்கள் அபிவிருத்திச் சம்மேளனம் ஊடாக வாழ்க்கைத் தொழிலை மீண்டும் வழங்குவதற்காக தையல் இயந்திரங்களை ரிவைவ் வழங்கியது. ரிவைவைச் சேர்ந்த டேவிட்டையர் (வலது) யூஎஸ்எய்ட் டைச் சேர்ந்த ஜெவ்அலன் அவர்களும் 2005 தையல் இயந்திரங்களை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

இந்நிலையம் அறைகளைக் கொண்ட வதிவிட வசதிகள், பெரியதொரு சமையலறை, உணவு உட்கொள்ளும் கூடம் மற்றும் வகுப்பறைகளைக் கொண்டிருந்தது. நிறுவனங்களைப் பலப்படுத்தும் மானியம் ஒன்றின் மூலம் பணியாட்களுக்கான பயிற்சியையும் அலுவலக தளபாடங்களையும் யூஎஸ்எய்ட் வழங்கியது. ஏனைய நடவடிக்கைகளுக்காகவும் பெண்கள் சம்மேளனம் இந்நிலையத்தை வாடகைக்குக் கொடுப்பதோடு அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை அது தனது ஏனைய நடவடிக்கைகளுக்காகப் பாவிக்கிறது.

மாவட்ட பெண்கள் சம்மேளனத்துடன் யூஎஸ்எய்ட் காத்திரமானதொரு தொடர்பைப் பேணி வருகிறது. அண்மையில் யூஎஸ்எய்ட் இன் இடைக்கால அலுவலக முன்னெடுப்புகள் திட்டம் அவர்களுக்கு கணனிப் பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்கான கட்டிடப் பொருட்களைக் கொடுத்துதவியது. கடற்கோள் அனர்த்தத்தின் போது மூன்று கிராமிய வங்கிகள் அழிந்து போயின. வங்கிகள் மூலம் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்காக அவர்களுக்கு ரிவைவ் திட்டம் நிதிகளை வழங்கியது. கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தையல் மெசின் போன்ற உபகரணங்களையும் பெண்கள் அபிவிருத்திச் சம்மேளனத்தினூடாக ரிவைவ் கொடுத்துதவியது.

100 நாட்களில் சுத்தமான காற்று

இலங்கை, கொழும்பில் வாகனங்களில் இருந்து வெளியாகும் புகையை ஆய்வுக் குழுவொன்று ஆராய்ச்சி செய்கிறது. "பயிற்சியின் மூலம் குறிப்பிடத்தக்க அளவு வளங்களையும் உலகளாவிய அனுபவத்தையும் யூஎஸ்எய்ட் வழங்கியுள்ளது" என போக்குவரத்து அமைச்சின் செயலாளர், தொன் எஸ். ஜயவீர குறிப்பிட்டார். "சுத்தமான காற்றைப் பெறுவதற்கான கடும் முயற்சி மற்றும் உயர்ந்த இலக்குகள் ஆகியவற்றின் மூலம் இத்திட்டம் பல முக்கிய சித்திகளை அடைந்துள்ளது."

ஈயம் கலந்த பெட்ரோலை வாகனங்கள் பாவிப்பதன் காரணத்தால், 2001 இல் இலங்கையின் பாரிய நகரங்களில் காற்றின் தரம் அதிக அளவில் மாசடைந்து வந்தது. சிறிய அளவு ஈயத்தின் நுகர்வுகூட மூளையின் வளர்ச்சியைத் தாக்கி, குறிப்பாகக் குழந்தைகளிடையே கற்கும் திறனை குன்றவைத்து, நடமாட்டக் குறைபாடுகளையும் தோற்றுவிக்கிறது. ஆயினும், ஈயத்தினால் ஏற்படும் நச்சுத்தன்மையைச் சுலபமாகத் தடுக்கலாம். பாரிய அளவில் இந்நிலைக்கு ஆளாவதைத் தடுப்பதற்காக ஈயம் கலந்து பெட்ரோலின் பாவனையை நிறுத்துவது முக்கியமான ஆரம்ப நடவடிக்கையாகும்.

2002 யூன் மாதத்தில், நாடு பூராவும் ஈயம் கலந்த பெட்ரோலின் விற்பனையை நிறுத்துவதற்கான 100 நாள் திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்தது. காற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகளின் உத்வேகத்தைப் பேணுவதற்காக திட்டத்தின் வினைத்திறன் மற்றும் அதன் சாதகமான விளைவுகள் பற்றி கொள்கை வகுப்பாளர்களுக்கும் பொது மக்களுக்கும் சான்றினை வழங்கத் தேவைப்பட்டது

இந்த 100 நாள் திட்டத்துக்கு ஆதரவாக, ஈயத்தை மெதுவாக அகற்றுவதன் தாக்கத்தை அளப்பதற்கான ஆய்வொன்று மற்றும் அப்பாலிருந்தே உணர்ந்துகொள்ளும்

இலங்கையில் உள்ள வீதிகளில் அதிகளவில் மாசுபடுத்தும் வாகனங்களாக முச்சக்கர வண்டிகள் இருப்பது யூஎஸ்எய்ட் ஆதரவுடனான ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

100 நாள் திட்டத்தின் கீழ் கொழும்பின் வீதிகளில் யூஎஸ்எய்ட் ஆதரவுடனான புகை வெளியேற்றப் பரீட்சகர்கள்.

தொழில்நுட்பத்தைப் பாவித்து நாட்டில் அதிக மாசினை ஏற்படுத்தும் வாகனங்களை இனங்காணல் ஆகியவற்றை உள்ளிட்ட பல முன்னெடுப்புக்களுக்கு யூஎஸ்எய்ட் அனுசரணை வழங்கியது. உலக வங்கியும் சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சும் ஒன்று சேர்ந்து காற்றின் தர முகாமைத்துவ நிலையத்தை அமைப்பதிலும் யூஎஸ்எய்ட் உதவி அளித்தது. இந்நிலையம் நாடளாவிய ரீதியில் புகை மற்றும் எரிபொருள் தரத் திட்டங்களை மேற்கொள்வதோடு சுற்றாடல் அறிவை மேம்படுத்தி மக்களுடன் தொடர்பாடும் நடவடிக்கையையும் மேற்கொள்கிறது.

100 நாள் திட்டம் காரணமாக நிலவும் காற்றின் ஈய அளவுகள் 90 சதவீதம் வீழ்ச்சியடைந்தன. இப்பெறுபேறுகள் மற்றும் காற்றின் தரத்தை முகாமைப்படுத்துவதற்கான அதன் கூடிய திறன் ஆகியவற்றினால் உந்தப்பட்டு, மேலும் பல நடவடிக்கைகளை எடுக்க இலங்கை அரசாங்கம் உறுதிபூண்டது. சிறந்த வாகனம் பேணல் நடவடிக்கைகளைக் கட்டாயப்படுத்துவது, வாகனங்களை பரீட்சிக்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்வது மற்றும் பாவிக்கப்பட்ட இரண்டு ஸ்ட்ரோக் வாகனங்களின் இறக்குமதி பற்றிய கொள்கை மாற்றம் இவற்றுள் அடங்கும். காற்றின் தர முகாமைத்துவ நிலையத்தின் உதவியுடன், தற்போது வகுக்கப்பட்டு வரும் புகை பற்றிய தரங்கள் மற்றும் பரிசீலனை ஆகியவற்றினூடாக, 2007 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் பாவனையிலுள்ள வாகனங்கள் தொடர்பாக கடுமையான வாகனப் புகைத் தரங்களை அமுல் செய்ய இலங்கைக்குச் சாத்தியமாகும்.

USAID FROM THE AMERICAN PEOPLE

இலங்கையில் திண்மக் கழிவு முகாமைத்துவத்துக்கான புதுமையானதொரு தீர்வு

இலங்கையின் தலைநகரான கொழும்பின் பிரஜைகள் நாளொன்றுக்கு 6,000 மெட்ரிக் தொன் நகரத் திண்மக் கழிவினை வெளியேற்றுகின்றனர். இக்கழிவினை எங்கு கொட்டுவது என்பது பல வருடங்களாக உள்நாட்டு அரசாங்கச் சபைக்குப் பிரச்சினையாக இருந்து வந்தது. 2000 இல், கொழும்பு மாநகர சபையின் அலுவலர் ஒருவர் திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய வர்த்தகக் கண்காட்சி யொன்றில் பங்குபற்றுவதற்கான ஏற்பாட்டை ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஆசிய சுற்றாடல் பங்காளர் திட்டம் (US-AEP) மேற்கொண்டது. துர்வாடைக் கட்டுப்பாடு மற்றும் கழிவுச் சேகரிப்புக்கான அமெரிக்க அமைப்பிலான இனாம் கொடுப்பனவு போன்ற திண்மக்கழிவு முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்ப அம்சங்களை இவ்வலுவலர் காணக்கூடியதாக இருந்தது. இவ்வலுவலரின் விஜயத்தின் பின், நகர்ப்புற திண்மக் கழிவுச் சேகரிப்பு மற்றும் உர உற்பத்திக்கான நிதியை நகர சபை வழங்க ஆரம்பித்தது.

சிறந்ததொரு சந்தை எனக் கருதி இலங்கையின் மிகப் பெரிய திண்மக் கழிவு முகாமைத்துவக் கம்பனியான, வரையறுக்கப்பட்ட பேர்ன்ஸ் என்வயர்மென்டல் அண்ட் டெக்னோலஜீஸ் நிறுவனம் (BETL) உயிரியல் ரீதியில் பதனிடக்கூடிய கழிவையும் அசுத்திகளையும் நிலைக்தகவுள்ள விதத்தில் கையாளவும் விவசாயத்தரத்திலான கொம்போஸ்ட் உரத்தை உற்பத்தி செய்து வளங்களை மீளப்பெறுவதை உயர்மட்டத்தில் பேணவும் 600 மில்லியன் ரூபா தொழிற்சாலையொன்றை அமைத்தது. BETL முகாமைத்துவப்படுத்தும் கொழும்பு நகர கொம்போஸ்ட் உர செயற்பாட்டை சீர்திருத்துவதற்காக 2002 நவம்பரில், மினசோட்டா பல்கலைக்கழகத்தின் உதவியை யூஎஸ்-ஏஈபி ஸ்ரீ லங்கா திட்டம் நாடியது. மினசோட்டா பல்கலைக்கழகத்தின் விஸ்தரிப்பு ஆசிரியரான, பேராசிரியர் தோமஸ் ஹல்பச் கொம்போஸ்ட் செயற்பாட்டை ஆராய்ந்து, பல மாற்றங்களைச் சிபாரிசு செய்ததோடு, தரமான கொம்போஸ்ட் உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களையும் இனங்கண்டார். சமூக மட்டத்திலான கொம்போஸ்ட் அமைப்பின் திறனை எவ்வாறு அதிகரிக்கலாம் என்ற தலைப்பில் அவர் ஒரு வெற்றிகரமான பகிரங்கக் கருத்தரங்கொன்றையும் நடாத்தினார்.

BETL மற்றும் கொழும்பு மாநகர சபைக்கும் இடையிலான அரசாங்க-தனியார் துறை பங்காளர் தொடர்பு நகரின் கழிவு அகற்றல் பிரச்சினையை சுலபமாக்கியதோடு, தரமான மற்றும் விலைகுறைந்த கொம்போஸ்ட் உரத்தை இலங்கையின் தேங்காய் மற்றும் தேயிலைத் தோட்டங்களுக்கு வழங்குவதன் மூலம் விவசாயக் காணிகளின் உற்பத்தியையும் மேம்படுத்துகிறது. நாளொன்றுக்கு 200 மெட்ரிக் தொன் நகர்ப்புற திண்மக் கழிவினை கொம்போஸ்ட் உரமாக மாற்றுவதன் மூலம் மற்றும் புலூமென்டல் அகற்றும் இடத்துக்குச் நாளொன்றுக்கு அகற்றப்படும் கழிவினை 60 சதவீதத்தால் குறைப்பதன் மூலம், இப்பங்காளர் தொடர்பு நகரத்தின் கழிவு அகற்றும் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறது. 2004 இல் புதிய கொம்போஸ்ட் உரத் தரங்களை நிறுவகப்படுத்துவதில் யூஎஸ் - ஏஈபி ஆதரவு கவனம் செலுத்தியது. செறிவாகப் பயிரிடப்பட்ட விவசாயக் காணிகளில் கொம்போஸ் உரம் இடுவதன் மூலம் பெருந்தோட்டங்களில் காணிகளை மீண்டும் செழிப்படையச் செய்வது தொடர்பாக அறிவூட்டல் மற்றும் கொழும்பைச் சுற்றியுள்ள பிரதேசங்களின் கழிவினைக் கையாளும் விதத்தில் BETL இன் செயற்பாடுகளை விஸ்தரித்தல் இத்தரங்களில் அடங்கும்.

"நாளொன்றுக்கு சுமார் 800 – 900 தொன் கழிவினைக் கையாள்வதற்காக சர்வதேசத் தரங்களுக்கேற்ப அமைவிடங்களை முகாமைத்துவப் படுத்தும் மிகப் பெரிய நகர்ப்புற கழிவு அகற்றும் அலகாக BETL இன் இயந்திரத் தொகுதி உள்ளது. இந்த இயந்திரத் தொகுதி இத்துறையைச் சார்ந்த தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள மிகப் பெரியதென்பதோடு, உலகளாவிய ரீதியில் அது 10 ஆம் இடத்தை வகிக்கிறது" என வரையறுக்கப்பட்ட பேர்ன்ஸ் என்வயர்மென்டல் டெக்னொலொஜீஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர், சுமித் ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

அதி நவீன கழிவகற்றும் திட்டம் ஒன்று, கொழும்பில் மலைபோல் குவிந்திருக்கும் கழிவினை கொம்போஸ்ட் உரமாக மாற்றி, தலைநகரின் அகற்றல் பிரச்சினையைச் சுலபமாக்கி, நாட்டின் ஏனைய நகரங்களுக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது.

யூஎஸ்-ஏஈபி ஒரேபார்வையில்

யூஎஸ்எய்ட் இன் பிராந்தியத் திட்டமொன்றாக, 1992 – 2005 காலப்பகுதியில் ஆசியாவில் சுற்றாடல் பற்றிய கூட்டுறவு அணுகுமுறைகளுக்கு யூஎஸ் ஆசிய சுற்றாடல் பங்காளர் தொடர்பு (US – AEP) திட்டம் ஆதரவளித்து வந்துள்ளது. இலங்கையில் மற்றும் ஐக்கிய அமெரிக்கக்குடியரசில் நாட்டின் சுற்றாடல் சவால்களை எதிர்நோக்குவதற்காக அரசாங்கம், வர்த்தகத்துறை மற்றும் சமூகங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்கு யூஎஸ் - ஏஈபி ஸ்ரீ லங்கா திட்டம் உதவி அளிக்கிறது. காற்றின் தரம், நீரின் தரம், சுற்றாடல் ஆளுமை, திண்ம மற்றும் ஆபத்தான கழிவு முகாமைத்துவம், வலு வினைத்திறன் அத்துடன் புதுப்பிக்கப்படக்கூடிய சக்தி ஆகியன பிரதான நடவடிக்கைத் துறைகளாகும்.

சமாதானத்துக்கான ஆதரவு

வெகுவாக ஒருமுகப்படுத்தப்பட்ட சமாதானச் செயற்பாட்டின் முன்னெடுப்பில் சம்பந்தப்பட்டோர் சகலரையும் பெறுமதியுடன் ஈடுபடச் செய்வதற்கான அரசாங்கத்தின் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் திறமையைக் கட்டியெழுப்புவதற்காக 2002 நவம்பரில் இலங்கை சமாதான ஆதரவுக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முறைசார்ந்த பேச்சுவார்த்தைகளுக்காக சகலரையும் உள்ளிட்டதாகத் திறனை மேம்படுத்தல், சமாதானத்துக்காக பிரஜைகளை ஒன்று திரட்டல் மற்றும் பிரஜைகளை தலைவர்களுடன் தொடர்புபடுத்தல் அதன் நோக்கங்களாகும். கல்வி அபிவிருத்திக்கான அக்டெமியினால் இக்கருத்திட்டம் அமுல் செய்யப்படுகிறது.

மக்கள் கருத்து மற்றும் சமாதானப் பெறுமானங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய திட்டங்களை அமுலாக்குவது இலங்கை சமாதான ஆதரவுக் கருத்திட்டத்தின் முக்கியமானதொரு அம்சமாகும். யங் ஆசியா டெலிவிசனால் தயாரிக்கப்பட்ட விருது பெற்ற, டேக் திஸ் ரோட் (Take This Road) தொலைக்காட்சி நாடகத் தொடர், அத்தகையதொரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

இவ் வழியால் வாருங்கள் டிவிடியின் கவர்

விரைவில் பழுதடையக் கூடிய சமூகத் தொடர்புகளில் யுத்தம் ஏற்படுத்தும் விளைவு மற்றும் சகல சமூகங்களினதும் எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றை இந்த 13 பாகங்களைக் கொண்ட நாடகத் தொடர், டேக் திஸ் ரோட், எடுத்துக் காட்டுகிறது. அது மூன்று குடும்பங்களின் (சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்) கதையினைக் கூறுகிறது. ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டதும், கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு அப்பாதையினூடாகச் செல்லும் போது அவர்கள் சந்திக்கின்றனர். அவர்களை ஒன்றிணைக்கும் பொதுவான மனித அனுபவத்தை உணர்ந்து கொண்ட மூன்று குடும்பங்களின் கண்டு பிடிப்பை பயணம் ஒன்றினூடாக அது தத்ரூபமாகச் சித்தரிக்கிறது.

டேக் திஸ் ரோட் நாடகத்தின் திறந்த வெளிக் காட்சி படப்பிடிப்பு 13 பாகங்களைக் கொண்ட இந்த நாடகத் தொடர் சமாதானத்தைக் கட் யெழுப்புதல் மற்றும் சமூக மாற்றத்தை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டது.

டேக் திஸ் ரோட்டுக்கான படப்பிடிப்பு அநேகமாக யாழ்ப்பாணத்திலும், சில காட்சிகள் புத்தளத்திலும் கொழும்பிலும் படமாக்கப்பட்டன. தன்னிகரற்ற கலந்துரையாடல் கூட்டுறவுச் செயற்பாட்டினூடாக நாடகத்துக்கான கதை வசனம் எழுதப்பட்டது. சமாதானச் செயற்பாட்டில் ஈடுபாடுள்ள சகலரையும் கொண்ட பலதரப்பட்ட சமூகப் பிரதிநிதிகள் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பல் அத்துடன் சமூக மாற்றத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு தொலைக்காட்சி நாடக அமைப்பில் செயற்பட்டுள்ளவர்களும் இங்கு வருகை தந்துள்ளவர்களுமான இந்திய மற்றும் தென்னாபிரிக்க இயக்குநர்களை அது உள்ளடக்கியது. இக்கலந்துரையாடல்களை எழுத்துவடிவில் அமைக்க சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள் மூவர் ஈடுபட்டனர். புகழ்பெற்ற இயக்குநர், அசோக ஹந்தகம டேக் திஸ் ரோட் நாடகத்தை நெறிப்படுத்தினார்

டைரக்டர் அசோக ஹந்தகம (வலது) டேக் திஸ் ரோட் காட்சிகளுக்கிடையில் நடிகர் ஒருவருடன் உரையாடுகிறார்.

சமாதான வழி

20 வருட கால யுத்தத்தின் போது, இலங்கையின் கிழக்குக் கரையில் உள்ள மஹகொடயாயக் கிராமிய விவசாயச் சமூகம் அவநம்பிக்கை, தப்பெண்ணம் மற்றும் பிரிவை அனுபவித்து வாழ்ந்து கொண்டிருந்தது. இக்காலப் பகுதியில் அங்கிருந்த சிங்கள மற்றும் தமிழ் அயலவர்கள் இக்கிராமத்தினூடாகச் செல்லும் பாதையினால் பிரிக்கப்பட்டவர்கள் போல இரு கூறாக வேறுபட்டு இருந்தனர்.

இடைக்கால முன்னெடுப்புக்கான யூஎஸ்எய்ட் அலுவலகத்தின் ஆதரவுடன், அப்பிரதேசத்தைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பான, சர்வதேச மனித உரிமைகள் மன்றம் சுத்தமான நீருக்கான மட்டுப்படுத்தப்பட்ட பிரவேசம் போன்ற கிராமத்தவரிடையே சர்ச்சையை ஏற்படுத்திய அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மஹகொடயாய கிராமிய அபிவிருத்திக் குழுவை மீளச் செயற்படுத்தினர். இரு சமூகங்களுக்குத் தேவைப்படும் மேலும் சிறந்ததொரு பாதையை அமைக்கும் பொதுவான நோக்குக்காக இரு இனத்துவங்களையும் சேர்ந்த 100 க்கும் மேலான தொண்டர்கள் கருத்திட்டத்தில் சேர்ந்து செயலாற்றினர். இதனால், பல காலங்களுக்குப் பிறகு பொதுவானதொரு முன்னுரிமை நடவடிக்கைக்காக ஒன்றுகலந்து வேலை செய்யும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டது.

> *"இனத்துவம், குலம் மற்றும் கோத்திரம் பற்றி நாம் ஏன் இவ்வளவு கண்மூடித்தனமான ஈடுபாட்டைக் கொண்டிருக்க வேண்டும்? நாம் ஒன்றுபட்டதொரு நாடு என்பதை அழுத்த விரும்பினால், நாட்டின் சகல பிரஜைகளும் சமமானவர்களே என்ற இந்த அடிப்படைக் கோட்பாட்டில் இருந்து நாம் ஆரம்பிக்க வேண்டும்." – மஹகொடயாயவைச் சேர்ந்த ஒருவர்.*

OTI கருத்திட்டத்தினால் உதவி வழங்கப்பட்ட ஒரு சமூகத்தில் உள்ள இளம் ஓவியர்களின் கண்கள் ஊடாக சமாதானம்

பல காலமாக இருந்துவரும் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் பெறப்படும் தீர்வொன்றுக்கு மேலும் கூடிய ஆதரவை பெறுவதற்காக இலங்கைக்கு இடைக்கால முன்னெடுப்புக்கான யூஎஸ்எய்ட் அலுவலகத் திட்டம் உதவுகிறது. இந்நோக்கத்தை அடைவதற்காக, தமக்குத் தேவை என உணர்ந்தவற்றுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றை நிறைவு செய்து கொள்வதற்காக பல்வேறு குழுக்களிடையே ஒத்துழைப்பையும் பங்கெடுப்பையும் அத்துடன் பிரதான இடைக்காலப் பிரச்சினைகள் பற்றிய புரிந்துணர்வையும் மேம்படுத்த இத்திட்டம் நாடுகிறது. இத்திட்டம் 2003 மார்ச்சில் ஆரம்பமாகியது.

அடிப்படை தலைமைத்துவப் பயிற்சி மற்றும் வேலைத்தளத்துக்கான வீஜயத்தின் மூலம், கிராமத்தின் பொதுவான நலனுக்காக எவ்வாறு இனத்துவ ஒத்துழைப்பு உதவுகிறது என்பதை மஹகொடயாய கிராம அபிவிருத்திக் குழு உணர ஆரம்பித்தது. 2005 ஆகஸ்ட இறுதியில்,

யூஎஸ்எயிட் அனுசரனை வழங்கிய சமாதானப் பாதை, மஹகொடயாய கிராமத்தில் உள்ள மக்களை ஒன்று சேர்த்தது.

"சமாதானப் பாதை" இன் உத்தியோகபூர்வ திறப்புவிழாவுக்கு முன் பல மத அனுஷ்டானங்களுடன் தொடர்பு பட்ட ஊர்வலம் மற்றும் நடனத்தில் இடைக்கால முன்னெடுப்புக்கான யூஎஸ்எய்ட் அலுவலகம் கலந்து கொண்டது.

"இனத்துவம், குலம் மற்றும் கோத்திரம் பற்றி நாம் ஏன் இவ்வளவு கண்மூடித்தனமான ஈடுபாட்டைக் கொண்டிருக்க வேண்டும்?" என மஹகொடயாயவைச் சேர்ந்த சமாதானப் பிரியர் ஒருவர் கேள்வி எழுப்பினார். "நாம் ஒன்றுபட்டதொரு நாடு என்பதை அழுத்த விரும்பினால், நாட்டின் சகல பிரஜைகளும் சமமானவர்களே என்ற இந்த அடிப்படைக் கோட்பாட்டில் இருந்து நாம் ஆரம்பிக்க வேண்டும். எமது அபிவிருத்திக்குப் பங்கம் விளைவித்து, பொருளாதார வளர்ச்சியைக் குன்றச் செய்து, சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மைக்கான எம்மவர் முயற்சிகள் அனைத்தையும் தவிடுபொடியாக்கும் பேராசை மற்றும் ஆட்சி மோகம் கொண்ட அரசியல்வாதிகள் பிரிவினையை ஊக்குவிக்கிறார்கள்."

யுத்தத்தினால் பாதிப்படைந்த வடக்கில் ஆலோசனை வழங்கல்

2002 ஆம் ஆண்டின் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினால் நிறுத்தப்பட்ட இலங்கையின் நீண்ட கால உள்நாட்டு யுத்தம், யாழ்ப்பாண மாவட்டத்தில் 25,000 விதவைகளை குடும்பத் தலைவர்களாக மாற்றியுள்ளது. கோப்பாய் பிரிவில் மாத்திரம் 1,300 க்கு மேற்பட்ட யுத்த விதவைகளும் பாதிக்கப்பட்ட சுமார் 10,000 குடும்ப அங்கத்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். "அதி பாதுகாப்பு" வலயங்களினால் மேலும் பல்லாயிரக்கணக்கானோர் தம் வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான இரு முகாம்கள் இன்றுகூட அங்கு உள்ளதோடு, கோப்பாய் பிரதேசத்தை நாட்டின் மிக வறிய இடங்களுள் ஒன்றாக அவை மாற்றியுள்ளன.

யாழ்ப்பாண சர்வாங்க சுகாதார நிலையத்தில் ஆலோசனை அமர்வொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அத்தகைய அமர்வுகள் பாடசாலை செல்லாத மாணவர்களை மீண்டும் பாடசாலைக்குச் செல்ல வைக்க உதவுகிறது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டத்தில் வாழும் விதவைகளுக்கும் குழந்தைகளுக்கும் தம் நிலைமைகளைச் சமாளித்துக் கொள்வதற்கான ஆலோசனைகளை யூஎஸ்எய்ட் நிதியளிக்கும் திட்டமொன்று வழங்குகிறது.

யுத்தத்தினால் மற்றும் இடம்பெயர்வால் அதிர்ச்சியடைந்த குடும்பங்களுக்கு ஆலோசனை மூலம் நம்பிக்கையூட்டவும் சமூக அத்துடன் கல்வித் திட்டங்கள் மூலம் இளம் வயதினரை சமூகத்துடன் ஒன்றிணைக்கும் முயற்சியாக யாழ்ப்பாண போதனா ஆஸ்பத்திரியைச் சேர்ந்த மனோ சிகிச்சையாளரும் கத்தோலிக்கப் பாதிரியுமான பிதா தமியன் சூசைப்பிள்ளை "சர்வாங்க" சுகாதார நிலையமொன்றை 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஆரம்பித்தார். பிள்ளைகளைப் பாடசாலை செல்ல ஊக்குவிப்பதும் பாடசாலையை விட்டகன்றவர்களை மீண்டும் பாடசாலைக்கு அனுப்புவதும் அதன் பிரதான நோக்கங்களாகவிருந்தன.

"வறுமை, பொருட்கள் இல்லாமை, வறிய குடும்ப நிலை மற்றும் போசாக்கின்மையே குழந்தைகள் பாடசாலைக்குப் போகாமலிருப்பதற்கான காரணம்," என பிதா தமியன் குறிப்பிட்டார். "அடிப்படை வாசிப்பு, எழுது கருவிகள், சிந்தனைத் திறன் ஆகியவை இல்லாத நிலை மாவட்டத்தில் வறுமையை மேலும் உக்கிரமடையச் செய்கிறது."

வாரந்தோறும் சனிக்கிழமைகளில், இனாமாக பகல் சாப்பாடு வழங்கப்படுவது, அதிர்ச்சி பற்றிய ஆலோசனைக்காக தாய்மார்களையும், குழந்தைகளுக்கான மன நிலையைக் குணப்படுத்தும் விளையாட்டு மற்றும் குழு நடவடிக்கைகளுக்காக சுமார் 100 குழந்தைகளையும் அங்கு வருவதற்கு ஊக்குவித்தது. வயது கூடிய குழந்தைகளுக்கு மற்றும் பாடசாலை செல்லாத பெரியவர்களுக்கு முறை சாராத கல்வி வழங்கப்பட்டது.

"தாய்மார்களுக்கான குழு அமர்வுகளின் போது, அதிர்ச்சியைப் பற்றி மாத்திரம் நாம் நடவடிக்கை எடுப்பதில்லை" என அவர் குறிப்பிட்டார். "கல்வி போன்ற விடயங்களையும் நாம் எடுத்துக் கொள்வோம். எமது குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி அவசியம் என்பதை விளக்கி அவர்களுக்கு உணர்வூட்டி ஆளுமையை வழங்குகிறோம்."

2004 இல் இத்திட்டத்தினால் சுமார் 1400 குழந்தைகளும் 500 தாய்மார்களும் நன்மையடைந்தனர். பலதரப்பட்ட பிரச்சினைகள் மற்றும் கோளாறுகளால் அவதியுறும் குடும்பத்துக்குத் தலைமை தாங்கும் பெண்களையே குறிப்பாக இத்திட்டம் இலக்குப் பார்க்கிறது. குழந்தைகள் சில சமயம் படிக்க முடியாத மனோபாவத்தை அல்லது மூர்க்கத்தனத்தைக் காட்டுகிறார்கள். இம்மாவட்டத்தில் நூற்றுக்கணக் கான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திக் கொண் டுள்ளனர்.

இப்பெற்றோர் மற்றும் சமூகத் தலைவர்களின் உதவியுடன் குழந்தைகள் கல்வியின் பெறுமதியை உணரத் தொடங்கினர். 2004 இல் யூஎஸ்எய்ட் இன் மனிதாபிமான உதவித் திட்டத்தின் கீழ் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, 10 வயதுக்கும் 12 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை செல்வதை நிறுத்திக் கொண்ட சுமார் 35 குழந்தைகள் மீண்டும் கோப்பாய் சிறுப்பிட்டி அரசாங்கக் கலவன் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர். இவர்கள் இப்பகுதியில் பாடசாலை செல்லாத சுமார் 150 மாணவர்களுள் 20 சதவீதமாகும்.

"பிரதிபலன்கள் பற்றி அனைவரும் சந்தோசமடைந்துள்ளனர்" என பிதா தமியன் குறிப்பிட்டார். "பாடசாலைக்குச் செல்லா விட்டால் குழந்தைகளின் எதிர்காலம் எப்படியிருக்குமோ தெரியாது."

USAID FROM THE AMERICAN PEOPLE

கடற்கோள் அனர்த்தத்தின் பின் சிறிய கிராமமொன்றுக்கு வந்த பலரும் அறிந்த அதிதிகள்

2005 பெப்ரவரியில் அலபடவத்தைக்கான தம் விஜயத்தின் போது, ஜனாதிபதி புஷ் கேட்ட கேள்வியொன்றுக்கு சுரஞ்ஜிகா பதிலளிக்கையில், ஜனாதிபதி கிளின்டன் பல்சுவை நிகழ்ச்சியை பார்த்து ரசிக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதிகளான புஷ் மற்றும் களின்டன் யூஸ்டன் சுனாமி நிதியத்திலிருந்து ஒரு மில்லியன் டொலர் நன்கொடையை 2004 டிசம்பர் 26ஆம் திகதி நேர்ந்த கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைச் சிறுவர்களின் நலனுக்காக வழங்கியபோது, தாம் அலபடவத்தை என்னும் குக்கிராமத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன் விஜயம் செய்வோம் என்ற எண்ணம் அவர்கள் மனதில் உதித்திருக்கவும் கூடும்.

யூஎஸ்எய்ட் நிதியளித்த தற்காலிக முகாம்களில் இருந்த ஐந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுடன் ஒரு மணித்தியாலம் அளவளாவியது இந்த முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் மனதிலும் பாரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்றிருந்த போதிலும், அங்குள்ள சிறுவர்களுக்கு அவர்கள் தம் நலன் மீது அக்கறை கொண்ட இரு வெளிநாட்டவர்களாகவே தோன்றினர்.

கூடியிருந்த குழந்தைகளின் ஆரவாரங்களுக்கு மத்தியில் 2005 பெப்ரவரி 21 ஆம் திகதி அங்கு வந்த பின், யூஎஸ்எய்ட் இன் பங்காளரான கொமியூனிட்டி ஹபிடாட் பினான்ஸ் இன்டர்நெஷனல் அமைத்த தற்காலிக வீடுகள் பற்றி ஜனாதிபதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. 42ஆவது அமெரிக்க ஜனாதிபதி தனது வீட்டின் கதவுகளில் கடைசி ஆணிகள் இரண்டையும் பதிப்பதை முகாமில் இருந்த டிசாந்தி சுரஞ்ஜிகா வியப்புடன் பார்த்த வண்ணமிருந்தாள்.

இச்சிறிய சமூகத்தில் ஆங்கிலம் கதைக்கத் தெரிந்த திருமதி சுரஞ்ஜிகா சமுதாயத்துக்கான பேச்சாளராக நியமிக்கப்பட்டிருந்தார். தனது எளிய வீட்டுக்குள் வருமாறு ஜனாதிபதிகளை அவர் அழைத்து அவரின் சோகக் கதையை அவர்களிடம் கூறினாள். அவரது சகோதரன் கடற்கோள் அனர்த்தத்துக்குப் பலியாகி விட்டதாவும் தனது கணவரும் மகனும் உயிர் பிழைத்ததாகவும் அவர் கூறினார். அக்கிராமத்தின் குழந்தைகளுக்கு அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்காக ஆலோசனை வழங்க யூஎஸ்எய்ட் இன் பங்காளரான கிறிஸ்டியன் சில்ரன்ஸ் பன்ட் (சிசிஎவ்) அவரை அமர்த்தியதும் தான் சந்தோசமடைந்ததை அவர் நினைவு கூர்ந்தார்.

சுனாமியின் பின்னர் தமது கவலையை வெளியிடும் அலபடவத்தை கிராமத்தின் சிறுவர்களினால் வரையப்பட்ட ஓவியங்களை ஜனாதிபதிகள் கிளின்டனும், புஷ்சும் பார்வையிடுகின்றனர்

குடியிருப்பின் ஒரு பகுதியை "குழந்தைகள் நேய இடமாக" வடிவமைப்பதை சிசிஎவ் இன் திட்டம் உள்ளடக்கியது. இங்கு குழந்தைகள் கடற்கோள் அனர்த்தம் பற்றிய தம் உணர்வுகளை ஓவியம், கதை சொல்லல் மற்றும் பாட்டு அத்துடன் நடனம் மூலம் வெளிப்படுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

குழந்தைகள் வரைந்த சில ஓவியங்கள் ஜனாதிபதிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பல நிமிடங்கள் நோக்கிய அவர்கள் அவற்றைப் பற்றித் தம்மிடையே கதைத்துக் கொண்டபோது அப்படங்களை வரைந்த குழந்தைகள் அங்கு அவர்களை நோக்கிய வண்ணமிருந்தனர். சிலர் அவர்களுக்கு எடுத்துச் செல்வதற்காகப் படங்களை வழங்கினர். தம்மால் முடிந்தவரை ஜனாதிபதிகள் குழந்தைகளுடன் அளவளாவி, அவர்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர். மிகச் சிறிய குழந்தை ஒன்றை ஜனாதிபதி புஷ் தூக்கிக் கொண்ட அதே வேளையில், ஜனாதிபதி கிளின்டன் இரண்டு இரண்டாகக் குழந்தைகளை தம் கரங்களால் சுற்றிப் பிடித்து அணைத்துக் கொண்டார்.

முன்னைய ஜனாதிபதிகளை கௌரவமாக அமரச் செய்த பின் அவர்களுக்காக பல கலை நிகழ்ச்சிகளைக் குழந்தைகள் வழங்கினர். ஒரு சிறுவன் தான் வாங்கிய பணிஸ் பற்றிய ஆங்கில கவிதை ஒன்றை வாசித்தான். அவர்கள் இரு பாடல்களையும் நடனங்களையும் சுமார் 20 நிமிட நேரம் அரங்கேற்றினர்.

அதன் பின், உள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் அதிதிகள் மீது கேள்விகளைத் தொடுத்தனர். இரண்டு முன்னைய ஜனாதிபதிகளும் அவர்களுக்கு அமைதியாகப் பதிலளித்து அங்கே திட்டமிடப்படாத ஒரு பத்திரிகை மாநாட்டையும் நடாத்தினர்.

கடற்கோள் அனர்தத்தைத் தொடர்ந்து ஆதரவு

இந்தோனேசியாவின் வட சுமத்ராவின் மேற்குக் கரையில் பாரியதொரு பூமி அதிர்ச்சி 2004 டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்டது. பூமி அதிர்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட கடற்கோள் அலைகள் இந்திய சமுத்திரத்தை அண்டிய பல நாடுகளைப் பாதித்தன. இலங்கையில் கடற்கோள் அனர்த்தம், வடக்கு, தெற்கு மற்றும் தென்மேற்குக் கரை-களைத் தாக்கியதோடு 30,000 உயிர்களைப் பலி கொண்டது. மேலும், 100,000 மேற்பட்ட வீடுகள் முழுமையாக அல்லது அரைவாசி அழிந்ததோடு, அதனால் சுமார் 600,000 மக்கள் இடம்பெயர நேர்ந்தது.

இது போன்ற வேலைக்கான பணம் திட்டங்கள் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அவர்களுக்கு மிகத் தேவையாயிருந்து வருவாயை வழங்கியதோடு, கடற்கோள் அனர்த்தத்தைத் தொடர்ந்து தமது சுற்றுப்புறங்களில் இருந்து இடிபாடுகளை அகற்றவும் உதவியது.

அனர்த்தத்தை அடுத்து. அனர்த்த உதவிப் பதில் குழுவொன்றை யூஎஸ்எய்ட் அனுப்பி வைத்தது. இவ்வுயர் தொழில் புரிவோர் யூஎஸ்எய்ட் / ஸ்ரீ லங்கா, இலங்கை அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஆட்களுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டு சேதம் மற்றும் தேவைகள் மதிப்பீடுகளை மேற்கொண்டனர். இந்த மதிப்பீடுகளின் அடிப்படையிலும் சம்பந்தப்பட்டோர் சகலருடன் கலந்துரையாடியும், உடனடி நிவாரணத்தை மாத்திரமல்லாது நிவாரணம் மற்றும் புனருத்தாபனம் ஆகியவற்றுக்கிடையிலான வரிசல்களையும் தாண்டுவதற்கான திட்ட முன்னெடுப்புக்களை அவர்கள் வடிவமைத்தனர். உணவு, நீர் மற்றும் சுகாதார வசதிகள், தங்குமிடம், சுகாதாரப் பராமரிப்பு, வாழ்வாதார மீட்சி, மனோதத்துவ மற்றும் சமூக ஆதரவு, உடைபாடுகளை அகற்றல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய உதவிகளை வழங்கி கள்ளக் கடத்தலுக்கெதிரான நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

யூஎஸ்எய்ட் வழங்கிய இடைக்கால வீடமைப்பின் உதவியுடன் காலி மாவட்டத்திலுள்ள இக்குடும்பத்துக்கு தமக்கெனக் கூறிக்கொள்வதற்கான ஒரு வீடு கிடைத்திருக்கிறது. இத்தற்காலிக வீடுகள் இரண்டு வருடங்கள் வரை நீடிக்க வடிவமைக்கப்பட்டுள்ளன.

கடற்கோள் அனர்த்தம் ஏற்பட்ட சமயம் அம்பாறையில் பிரதேச அலுவலகம் ஒன்றைக் கொண்ட ஒரேயொரு சர்வதேச அமைப்பு என்ற கோதாவில், யூஎஸ்எய்ட் கிழக்கில் உடனடியாகச் செயற்பட ஆரம்பித்தது. இம்மாவட்டத்தை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் மதகு உடைந்ததால், வெளியுதவி இங்கு வருவது கஷ்டமாக இருந்தது. ஆயினும், பிரதேச விநியோகத்தர்களுடன் யூஎஸ்எய்ட் பேணி வந்த நீண்ட கால தொடர்பு காரணமாக, மின்ஆக்கிகள், 2000-லீற்றர் நீர் தாங்கிகள், அகதி முகாம்களுக்கான விளக்குகள் மற்றும் மண் அகழ்வு இயந்திரங்கள் போன்ற அவசியமான உபகரணங்களை யூஎஸ்எய்ட் இனால் உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

பிரதேச பொருளாதாரத்தைத் தூண்டி விடுவதன் மூலமும் வேலைக்கான பணக் கொடுப்பனவுத் திட்டங்கள், தொழில் பயிற்சி அத்துடன் சமூகம் சார்ந்த மனோதத்துவ மற்றும் சமூக ஆதரவினை வழங்குவதன் மூலமும் தங்குதடையின்றி முகாம்களில் இருந்து மக்கள் சமூகங்களுக்கான மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ள யூஎஸ்எய்ட் உதவியது.

பிரதேச தொண்டர்கள் மற்றும் யூஎஸ்எய்ட் இன் வேலைக்கான பணம் திட்டம் மற்றும் ஏனைய கொடையாளிகள் உதவி கொண்டு, கடற்கோள் அனர்த்தத்தினால் அழிவுற்ற கிராமங்களை மீண்டும் கட்டியெழுப்ப பொருட்களும் உதவியும் வழங்கப்பட்டன. சமூகங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவிக்காக 6,000 மக்களுக்கு

USAID FROM THE AMERICAN PEOPLE

வருமானமொன்றை யூஎஸ்எய்ட் வழங்கியது. மேலும், யூஎஸ்எய்ட் இன் சிறு கடன்கள் திட்டம், மக்கள் தம் சொந்த வர்த்தகங்களை ஆரம்பிக்கவோ மீளவாரம்பிக்கவோ உதவுகிறது. தம் ஜீவனோபாயத்துக்காகக் கடலில் தங்கியிருந்த பலருக்கு இது ஒரு புது ஆரம்பத்துக்கான சந்தர்ப்பத்தை அளித்தது.

அழிந்து போன அறுகம்பே பாலம் மற்றும் தெற்கில் மூன்று மீன்பிடித்துறைமுகங்களை மீளமைத்தல், நீர் மற்றும் சுகாதார சீர்திருத்தங்கள். இரு புதிய தொழில் பயிற்சி நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் குறைந்த பட்சம் ஏழு நிலையங்களை புனரமைத்தல், மற்றும் சிறிய அளவிலான உட்கட்டமைப்பு ஆகியவற்றை புனரமைப்புக் கருத்திட்டங்கள் உள்ளடக்கின.

புதிய பாலங்கள், தொழில்பயிற்சி பாடசாலைகள் மற்றும் மூன்று மீன்பிடித் துறைமுகங்கள் மீதான யூஎஸ்எய்ட் இன் நடவடிக்கைகள் ஆயிரக்கணக்கானோருக்கு நன்மை அளிக்கும். முன்பிருந்ததை விட நன்றாகக் கட்டுவதற்கான ஒரு ஒப்பந்தத்தை ஐக்கிய அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் 2005 செப்டம்பர் 7 ஆம் திகதி யூஎஸ்எய்ட் செய்து கொண்டது. மூன்று அமெரிக்க மற்றும் குறைந்த பட்சம் ஐந்து இலங்கை நிறுவனங்களை உள்ளிட்ட பல்வேறு உப ஒப்பந்தக்காரர்கள் மூலம் மூன்று அம்சங்களைக் கொண்ட நிர்மாணத் தொகுதி ஒன்று அமுல் செய்யப்படும்.

தெற்கு நகரமான மாத்தறையில் ஒரு புதிய அலுவலகத்தை திறப்பதன் மூலம் இடைக்கால முன்னெடுப்புக்களுக்கான அலுவலகம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான அதன் நடவடிக்கைகளை விஸ்தரித்தது. அரசியல் தழும்பல் நிலவும் இப்பிரதேசத்தில் கடற்கோள் அனர்த்தத்தைத் தொடர்ந்து சமூகங்கள் தம் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை இனங்காண்பதற்காக மாத்தறையில் யூஎஸ்எய்ட் உதவி வழங்குகிறது.

சுனாமியின் பின் காலியில் வசித்த இது போன்ற ஆயிரக்கணக்கான ஓவியர்களின் வாழ்வாதாரத்தை றிவைவ் கருத்திட்டம் மீட்டுத் தந்தது. றிவைவ்வினால் ழஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியில் இவை பார்வைக்கு வைக்கப்பட்டது.

சேதமடைந்த பாடசாலைகளை புனரமைத்தல், சேதமடைந்த பாடசாலைகளுக்கான உபகரணங்களை மீண்டும் வழங்கல் மற்றும் கடற்கோள் அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்தோருக்கு தற்கால வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றை பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள் உள்ளடக்குகின்றன.

நேரவிருக்கும் ஆபத்து பற்றி சமூகங்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கும் முற்கூட்டி எச்சரிக்கும் மற்றும் தொடர்பாடல் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக இத்திட்டங்கள் இலங்கையின் தேசிய அரசாங்கத்துக்கும் மாகாண மற்றும் உள்நாட்டு அரசாங்கங்களுக்கும் உதவி வழங்குகின்றன.

இந்து சமுத்திர கடற்கோள் அனர்த்த முன்னெச்சரிக்கைத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் உதவியைக் கூட்டிணைக்கும் பல துறைகளைச் சேர்ந்த முகவர் குழு, இலங்கை அரசாங்க அலுவலர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் துறை, உதவி வழங்குவோர், யூஎஸ்எய்ட் மற்றும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தூதர அதிகாரிகள் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டனர். இதன் மூலம் பெறப்பட்ட தகவல் 16.6 மில்லியன் டொலர் செலவிலான இரண்டாண்டு பிராந்திய முயற்சிக்கு இன்றியமையாததாகும்.

முன்னெச்சரிக்கை அமைப்பை சமர்ப்பித்து அதனைப் பற்றி கலந்துரையாடுவதும் இலங்கையில் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புக்கள் அல்லது திட்டமிடப்படும் முன்னச்செரிக்கை தொடர்பான முயற்சிகளை அறிந்து கொள்வதும் இவ்வொத்துழைப்பின் நோக்கமாக அமைந்திருந்தது.

வலது புறத்தில் காணப்படும் தற்காலிக பாலத்திற்குப் பதிலாக 100 வருடங்களுக்கு நிலைத்திருக்கும் புதிய பாலமொன்றை நிறுவுவதற்கு முன் யூஎஸ்எயிட் பொறியியலாளர்கள் கடற்படுக்கையை பரிசோதிக்கின்றனர்

விளையாட்டின் மூலம் மனச்சாந்தி பெறல்

கடற்கோள் அனர்த்தத்தின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு யூஎஸ்எய்ட்டும் காலி மாநகர சபையும் இணைந்து அமைத்த குழந்தைகளுக்கான புதிய விளையாட்டுப் பூங்கா 2004 டிசம்பர் 26ஆம் திகதி நேர்ந்த கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு விளையாட்டின் மூலம் மனச்சாந்தி பெறும் வாய்ப்பை அளிக்கிறது. தர்மபால பூங்காவில் அமைந்துள்ள காலி மாநகர சபையின் புதிய குழந்தைகளின் "சிக்னேச்சர்" பூங்கா கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 13 மாவட்டங்களில் நிறுவப்படவுள்ள அல்லது புனரமைக்கப்படவுள்ள 85 பூங்காக்களுள் ஒன்றாகும். ஜனத்தொகைச் செறிவுள்ள பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ள மிகப் பெரிய "சிகனேச்சர்" பூங்காக்களுள் இதுவும் ஒன்றாகும்.

"அதிர்ச்சிக்குள்ளான சிறுவர்களைச் குணமடையச் செய்யும் சிகிச்சையில் விளையாட்டு குறிப்பிடத்தக்க சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என மனோதத்துவ விஞ்ஞானிகள் இணங்கியுள்ளனர்" என யூஎஸ்எய்ட் மிசன் பணிப்பாளர் கலாநிதி கரொல் பேக்கர் குறிப்பிட்டார். "கடற்கோள் அனர்த்தம் விளைவித்த துயரம் இலங்கை மக்களின் மனங்களிலும் இதயங்களிலும் என்றுமே நிலைத்திருக்கும் அதே வேளையில், எதிர் வரும் மாதங்களில் மற்றும் வருடங்களில், கடற்கோள் அனர்த்தம் கொடூரமாகக் கவர்ந்து சென்ற குழந்தைகளின் சிரிப்பையும் கும்மாளத்தையும் இப்பூங்கா மீட்டுத் தரும் என்பது எனது நம்பிக்கையாகும்."

2005 டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமியின் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு காலியில் புதிய விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது.

2 மில்லியன் டொலர் பூங்காக் கருத்திட்டத்துக்கான நிதிகளை யூஎஸ்எய்ட், அமெரிக்க யூத இணைந்த விநியோகக் குழு மற்றும் புஷ்- கிளின்டன் நிதியம் ஆகியவை வழங்குகின்றன. இலங்கையின் மிகப் பெரிய அரச சார்பற்ற அமைப்பான சர்வோதய இத்திட்டத்தை அமுல்படுத்துகிறது.

"கடற்கோள் அனர்த்தம் இடம் பெயர வைத்த ஆயிரக்கணக்கான இலங்கைச் சிறார்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அரசாங்க – தனியார் துறை பங்காளர் தொடர்பின் சிறந்ததொரு உதாரணமாக இக்கருத்திட்டம் விளங்குகிறது" என ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்டட் தெரிவித்தார். "ஓராண்டு கடந்த போதிலும், கடந்த வருடச் சோக நிகழ்வின் தழும்பு ஆறுவதற்குப் பல காலம் செல்லும்."

இக்கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, உள்நாட்டு அரசாங்க அமைச்சு, பிரதேச மாநகர சபைகள் மற்றும் கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் சர்வோதய நெருக்கமாகச் செயற்படுகிறது. பிரதேசத்தில் உள்ளோர் சொந்தம் பாராட்டுவதே அவற்றின் வெற்றிக்கான திறவு கோலாக இருப்பது இதற்கான காரணமாகும். உரிய இடத்தில் பூங்காக்களை அமைப்பதற்காகவும் அவற்றின் கிரமமான பேணுதலை உறுதிப்படுத்துவதற்காகவும் காலியிலுள்ள பங்காளர்களுடன் சர்வோதய செயற்படுகிறது.

இவற்றுக்குத் தேவையான சகல உபகரணங்களும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அத்தோடு பாதுகாப்பு மற்றும் நிலைத்திருத்தல் தொடர்பாக அவை அமெரிக்க மற்றும் ஐரோப்பிய தரங்களுக்கு இணக்கமாக உள்ளன. இப்பூங்காக்கள் குடும்ப-நேய அடிப்படையில் வடிவமைக்கப்படுவதோடு, அவை வலு குறைந்தோருக்கான வசதிகள் உட்பட பல்லின பங்கெடுப்பு மற்றும் சமூகப் பிரவேசம் ஆகியவற்றை ஊக்குவிக்கும்.

இப்புதிய பூங்காக்கள் குடும்பங்களை ஒன்று சேர்க்கும் வாக்குறுதியை வழங்குகின்றன.